January 2019

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



## பொங்கல் மலர்

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്

CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI





100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

# ஐ தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

**January 2019**

சுவடி—8
ஓலை— 11

## வணக்கம் பல

புரட்சி என்பது ரத்தமும் யுத்தமும் எனத் தோன்றியதெல்லாம் அந்தக் காலம்! இன்றைய கணினி யுகத்தில் நடக்கின்ற புரட்சியானது, காற்றில் பரவி, கருத்தில் புகுந்து, எழுச்சிபெற்று கூட்டம் சேர்க்கின்ற ஆக்கப் பூர்வமான அழைப்பை விடுக்கும் துவக்கமாகவே தோன்றுகிறது.

'மஞ்சள் அங்கி'ப் போராட்டம் என்ற பெயரில் உலகத்தின் கவனத்தைத் திசைத்திருப்பியுள்ள பிரான்ஸ் நாட்டு மக்கள் புரட்சியானது, நல்லதொரு முன்னுதாரணத்தை உலக மக்களுக்குக் உணர்த்தியிருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சியாளர்கள் சிலர், அரியணையில் அமர்ந்ததும், மக்களாட்சித் தத்துவத்தை மறந்துவிட்டு மன்னராட்சிக்கு மாறிவிடும் மனப்போக்கினராகவே இன்னும் இருக்கின்றனர் என்பது வேதனைக்குரிய ஒன்று!

ஆட்சிக்கு வருமுன்னர் மக்களின் பிரதிநிதியாக இருக்கின்ற இளையவர் என்று வாக்களிக்கப்பட்ட பிரான்ஸ் நாட்டு அதிபர் ஆட்சிக்கு வந்ததும், தன் அனுபவமின்மையைக் காட்டும் விதமாக, எரிபொருள் விலையை கட்டுப்படுத்தாததுதான் 'மஞ்சள் அங்கிப் போராட்டமாக' உலக நாடுகளை ஈர்க்கிறது. தூத்துக்குடி போராட்டம் போல இயற்கையை விஷமாக்கும் சக்திகளுக்கு எதிராக போராட்டங்கள் வெடிக்க வேண்டிய நிலையும் தேவையும் இருக்கிறது. அதற்கு இந்த 'மஞ்சள் அங்கிப் புரட்சி' ஒரு முன்னுதாரணமாக அமையட்டும்!


'பழையன கழிதலும் புதியன புகுதலுமே' மக்கள் வழக்கு! வருட அட்டவணையில் புதிதாகப் பிறக்கும் வருடத்தின் கொண்டாட்டம் உலகமெங்கும் துவங்கியுள்ள இந்த நேரத்தில், மக்களின் மனதிலும், அறிவிலும், நல்ல பல ஆக்கப்பூர்வமான, மகிழ்ச்சிகரமான, அன்புவயமான மாற்றங்கள் பிறக்கட்டும்! அதற்கு பிறக்கின்ற இந்தப் புத்தாண்டு அடித்தளம் அமைக்கட்டும்!

உழவின் பெருமையை எடுத்துக் காட்டும் விதமாக ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகக் கொண்டாடப்பட்டு வரும் பொங்கல் திருநாளில், அனைவர் இல்லங்களிலும், உள்ளங்களிலும் மகிழ்ச்சிப் பொங்கி வழிட்டும்! எல்லா மக்களுக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களுடன் தைத் திருநாள் வாழ்த்துக்களையும் முன்வைத்து, இம்மாத 'அய் தமிழ்' பொங்கல் மலரைப் படையலென முன்வைக்கின்றோம்!

நேசப்பகிர்தலுடன்

**ஆசிரியர் குழு**

உள்ளே...




**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

அடங்க மறு

அழுகுணி ஆட்டம்

மறுக்கும் தெற்கு
மறுதலிக்கும் ஆட்சி

பைத்தியக்காரன்
பத்தும் செய்வான் !

கவிதைகள்

சிறுகதைகள்

தமிழே தமிழே



# உள்ளே


தமிழ் உதிரம்

வீழுமா நெகிழி

அறிவோம் தமிழர் பெருமை

மங்காத தமிழென்று சங்கே முழங்கு !

அறிவின் முதிர்ச்சி
வாழ்வின் புதையல்

சிவகாமியின் சபதம்


தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



# அடங்க

### உலகின் கவனத்தை ஈர்த்த மஞ்சள் அங்கி

பிரான்ஸில் பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு எதிராக நடந்துவரும் மஞ்சள் அங்கி போராட்டம், உலகையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. வழி நடத்துபவர்களோ, தலைவர்களோ யாருமின்றி, பெருநகரங்கள் முதல் கிராமங்கள் வரை நாடு முழுவதும் தன்னெழுச்சியாக மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்துவதே இதற்குக் காரணம்.



1968—ஆம் ஆண்டு நடந்த மாணவர் போராட்டத்துக்குப் பிறகு நடைபெறும் மிகப்பெரும் போராட்டமாக இது கருதப்படுகிறது. 2017ஆம் ஆண்டு மே மாதம் அதிபராகப் பதவியேற்ற இமானுவேல் மேக்ரான், பிரான்ஸ், தனது பழைய கௌரவத்தை மீட்டெடுக்க ஒரு புரட்சி நடத்தப்போவதாக அறிவித்தார். பொருளாதார சீர்திருத்தவாதியாக தன்னை அறிவித்துக்கொண்ட அவர், பதவியேற்றவுடன் தொழில்முனைவோருக்கும், அதிக வருமானம் ஈட்டுபவர்களுக்கும் வரிச்சலுகையை அறிவித்தார்.




அத்துடன் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்ற நீண்டகாலத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பெட்ரோல், டீசல் மீதான வரியை அதிகரித்தார். அதன்படி, கடந்த ஓராண்டில் டீசல் விலை லிட்டருக்கு 1.51 யூரோ ( சுமார் ரூ.121) அதிகரிக்கப்பட்டது.

மேலும், சர்வதேச சந்தையில் கடந்த சில வாரங்களாக எண்ணெய் விலை குறைந்து வரும் நிலையில், டீசல் மீதான பசுமை வரி 7.5 சதவீதமும், பெட்ரோல் மீதான பசுமை வரி 3.9 சதவீதமும் அதிகரிக்கப்பட்டது.

2019, ஜனவரி முதல், டீசல் மீதான வரி 6.5 சதவீதமும், பெட்ரோல் மீதான வரி 2.9 சதவீதமும் அதிகரிக்கப்படும் எனவும் அரசு அறிவித்தது. இந்த அறிவிப்புதான் மக்களைக் கொந்தளிக்கச் செய்தது.



பிரான்ஸில் டீசல் வாகனங்கள்தான் அதிகம். அதுவும் சிறு நகரங்கள், ஊரகப் பகுதிகளில் போக்குவரத்துக்கு பொதுமக்கள் பெரும்பாலும் சொந்த வாகனங்களையே நம்பியிருக்கின்றனர்.

இச்சூழ்நிலையில் எரிபொருள் மீதான வரி அதிகரிப்பால், தங்களது வாழ்க்கைச் செலவினம் அதிகரிப்பதாக சமூக ஊடகங்களில் தொடங்கிய கருத்துப் பரிமாற்றங்கள், நவம்பர் 17—ஆம் தேதி, பொதுமக்களை வீதிக்கு அழைத்து வந்தது.

கட்டடங்களும் அடித்து நொறுக்கப்பட்டன. விற்பனை நிலையங்களுக்கு எரிபொருளை கொண்டு செல்வதும் தடுக்கப்பட்டது.

உச்ச கட்டமாக, பாரீஸின் சேம்ப்ஸ் எலிசீஸ் அவென்யூவில் உள்ள போர் நினைவுச் சின்னம் சேதப்படுத்தப்பட்டது. இதன் தாக்கம், சுற்றுலாத் துறையில் உடனடியாக எதிரொலித்தது. இதன் மூலம்






பிரான்ஸில், வாகன ஓட்டிகள், எதிரே வரும் வாகன ஓட்டிகளைக் கவரும் வகையில் ஒளிரும் மஞ்சள் மேலங்கியை அணிந்து செல்ல வேண்டும். அந்த வகையில் அரசின் கவனத்தைக் கவரும் வகையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், மஞ்சள் அங்கி அணிந்து திரண்டதால், இப்போராட்டம் மஞ்சள் அங்கி போராட்டம் எனப் பெயர் பெற்றது.

ஆரம்பத்தில் சாலை மறியல், ஆர்ப்பாட்டம் எனத் தொடங்கிய போராட்டம், கடந்த நவம்பர் 3—ஆம் தேதி வன்முறையாக வெடித்தது. வாகனங்களும் அரசுக்குச் சொந்தமான

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து பேச்சுவார்த்தைக்கு அரசு தயாரானது.

ஆனால், இந்தப் போராட்டத்தை வழிநடத்துபவர்களோ ஒருங்கிணைப்பவர்களோ இல்லாததால், யாருடன் பேச்சு நடத்துவது என்பதில் அரசுக்கு சிக்கல் ஏற்பட்டது. போராட்டம் தொடங்கி சுமார் 3 வார காலமாகியும் இதற்கு தலைவர் என யாரும் உருவாகாததுதான் மஞ்சள் அங்கி போராட்டத்தை வித்தியாசப்படுத்திக் காட்டியது.

வீதிகளில் திரண்ட ஒவ்வொருவருமே நான்

மஞ்சள் அங்கி போராளி என பெருமிதத்துடன் கூறிக்கொண்டே காவல் துறையினரை எதிர்கொண்டனர்.

நாட்டையே அதிரவைத்த வன்முறைக்குப் பின்னர் நடத்தப்பட்ட ஆய்வில், இந்த மஞ்சள் அங்கி போராட்டத்துக்கு 70 சதவீத மக்கள் ஆதரவு தெரிவித்தனர். அதில் 50 சதவீதம் பேர் மேக்ரானுக்கு வாக்களித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



ஆனால், இப்போராட்டத்தில் அரசுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டவர்களும் பயங்கரவாதிகளும் ஊடுருவியுள்ளதாக அரசு குற்றம் சாட்டினாலும், ஒருவழியாக பணிந்து, வரும் ஜனவரி முதல் நாளிலிருந்து அமலுக்கு வரவிருந்த எரிபொருள்கள் மீதான வரி உயர்வை ஆறு மாதங்களுக்கு நிறுத்தி வைப்பதாக அறிவித்தது.

ஆனால், இது போராட்டக்காரர்களை திருப்திப்படுத்துவதாக இல்லை. எரிபொருள்கள் மீதான வரி உயர்வை நிரந்தரமாக ரத்து செய்ய வேண்டும் என சமூக ஊடகங்களில் பலர் வலியுறுத்தி வருகின்றனர்.



இப்போராட்டம் பொதுமக்களுக்கு கிடைத்த வெற்றியாகவும், அரசுக்கு கிடைத்த தோல்வியாகவும் கருதப்படுகிறது. கட்சி வேறுபாடின்றி பொதுமக்கள் திரண்டு நடத்திய இப்போராட்டம் நடத்தியது, அதிபர் மேக்ரானின் அரசியல் வாழ்க்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்கிறார்கள்.

அதாவது, அடுத்த ஆண்டு மே மாதம் பிரான்ஸில் நடைபெறவுள்ள ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றத் தேர்தலில் மேக்ரானுக்கு இது சிக்கலை ஏற்படுத்தக்கூடும்.

கடந்த ஆண்டு புத்தாண்டு தினச் செய்தியில் பிரான்ஸ் அதிபர் மேக்ரான், நாட்டுக்காக நாம் என்ன செய்தோம் என தினமும் காலையில் உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள் என மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால், மேக்ரான் பதவியேற்ற பதினெட்டே மாதங்களில், பிரெஞ்சு புரட்சியின்போது வீழ்த்தப்பட்ட பிரான்ஸின் கடைசி மன்னரான 16—ஆம் லூயிஸுடன் அவரை ஒப்பிட்டுப் பேசும் அளவுக்கு நிலைமை மாறிவிட்டது.

பொருளாதார சீர்திருத்தம் என்கிற பெயரில் செயல்படுத்தப் படுபவை, மக்களைப் பாதிக்காத வகையில் இருக்க வேண்டும்; இல்லாவிடில் புரட்சி வெடிக்கும் என உலகிற்கே உரக்கச் சொல்லியிருக்கிறார்கள் பிரான்ஸ் மக்கள்.

`மத்தளத்துக்கு இருபக்கமும் இடி' என்பதுபோல், அதிபர் மேக்ரானை இடதுசாரிகளும் வலதுசாரிகளும் விமர்சனம் செய்து வருகின்றனர். `உலகமயமாக்கலின் தாக்கத்தில் இருந்து பிரான்ஸ் மக்களை காக்கத் தவறி விட்டார்' என இடதுசாரிகள் குறை கூறுகின்றனர். `அரசுக்கு



எதிரான போராட்டத்தை சலுகைகள் கொடுத்து அடக்கி விடலாம் என மேக்ரான் தவறான எண்ணத்தில் இருக்கிறார்' என வலதுசாரிகள் விமர்சிக்கின்றனர். நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தேவையில்லாத குடியுரிமை போன்ற பிரச்சினைகளை பேசிய தாக பலர் நினைக்கின்றனர். தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியால் மேக்ரான் அரசு ஆடிப்போயிருக்கிறது. மேக்ரான் உரைக்குப் பிறகு எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் அவருக்கான ஆதரவு 25 சதவீதத்துக்குள் தான் இருக்கிறது. எந்த முன்னேற்றமும் இல்லை. அரசியல் கட்சிகளால் மேக்ரானுக்கு எந்த ஆபத்தும் இல்லை. பெரும் பணக்காரர்களுக்கு ஆதரவானவர் மேக்ரான் என்ற அவப்பெயரை நீக்க அவர் எடுக்கும் நடவடிக்கைகளைப் பொறுத்துத்தான் அவர் மீதான மதிப்பு இருக்கும். இந்தக் குற்றச்சாட்டை மேக்ரான் மறுத்திருக்கிறார்.

இதற்கிடையில், பிரான்ஸின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்காவும் ரஷ்யாவும் தலை யிடுவதாக எழுந்த குற்றச்சாட்டுகள் பெரிதாகக் கவனம் பெறவில்லை. இதற்கு, எது எங்கு நடந்தாலும் அதற்கு அமெரிக்காவும் ரஷ்யா வும் செய்யும் சதி தான் காரணம் எனக் கூறும் வழக்கம் அதிகரித்திருப்பதுதான் காரணம். `பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தால் பிரான்ஸில் எதிர்ப்பு கிளம்பி யிருக்கிறது. எங்கு பார்த்தாலும் போராட்டம் வன்முறை' என்ற அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் ட்விட்டுக்கு பிரான்ஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. `எங்கள் விஷயத்தில் தலையிட வேண்டாம்' என பிரான்ஸ் கூறியுள்ளது. சமூக வலைத்தளங்களில் தவறான தகவல்களை பரப்பி விடுகிறது ரஷ்யா என எழுந்துள்ள குற்றச்சாட்டை ரஷ்யா வன்மையாகக் கண்டித்துள்ளது. இது எங்களை அவமதிக்கும் செயல் என்றும் கூறியுள்ளது.




பிரான்சில் நடைபெற்று வரும் அரசுக்கெதிரான “மஞ்சள் ஜாக்கெட்” என்னும் போராட்டம் மேலும் தீவிரமாகும் என்ற அச்சத்துக்கிடையில் ஈபிள் கோபுரம் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பிரான்ஸ் முழுவதும் 89,000 காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள் என்றும், தலைநகர் பாரீஸில் ராணுவ வாகனங்கள் நிறுத்தப்படும் என்றும் அந்நாட்டு பிரதமர் எய்ட்வார் ஃபிலிப் அறிவித்தார்.

மேலும், பாரீஸின் சேம்ப்ஸ்—எலைசீஸ் பகுதியிலுள்ள கடைகள் மற்றும் உணவகங்களை மூடுமாறு காவல்துறையினர் வலியுறுத்தியுள்ளனர். சில அருங்காட்சியகங்களும் மூடப்பட்டன. கடந்த பல தசாப்தகாலங்களில் இல்லாத அளவுக்கு மிகவும் மோசமான வன்முறை பாரீஸில் நடைபெற்றது.

மக்களின் வன்முறை போராட்டத்துக்கு காரணமான எரிபொருள் உயர்வை திரும்ப பெறுவதற்கு பிரான்ஸ் அரசாங்கம் ஒப்புக்கொள்வதாக அறிவித்துவிட்டாலும், இதுபோன்ற மற்ற விவகாரங்களில் அரசாங்கத்தின் மீதுள்ள அதிருப்தியின் காரணமாக மக்களின் போராட்டம் தொடர்கிறது.

போராட்டக்காரர்களின் மற்ற முக்கிய கோரிக்கைகளுக்கு உதவ தயாராக இருப்பதாக அந்நாட்டின் செனட் சபையில் தெரிவித்திருந்த ஃபிலிப், தற்போது போராட்டக்காரர்களுக்கு எதிரான கருத்துகளை தெரிவித்து வருகிறார்.

போராட்டத்தின்போது பிரான்ஸின் புகழ்பெற்ற



நினைவுச்சின்னங்களில் ஒன்றான ‘ஆர் டி ட்ரோம்ஃப்’ சேதப்படுத்தப்பட்டபின் மற்ற இடங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக நகர அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டை வதைக்கின்ற பிரச்சினைகளுக்கு குறிப்பாக, கிராமங்களில் பொது நிருவாகத்தின் சீர்குலைவுக்கு அடுத்தடுத்து பதவியில் இருந்த அரசாங்கங்களின் தவறுகளையே காரணமாக மக்ரோன் கூறியிருக்கின்ற போதிலும், “ இன்றைய நிலவரத்துக்கான எனது பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். எனக்கு வேறு அக்கறைகளும் முன்னுரிமைக்குரிய விவகாரங்களும் இருக்கின்றன என்று நீங்கள் நினைக்கக்கூடியதாக நான் நடந்து கொண்டிருக்கக்கூடும். எனது பேச்சுக்களினால் உங்களில் சிலர் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். ஒன்றரை வருடகாலமாக உங்களுக்கு தேவையானவற்றை போதுமானளவு விரைவாகவும் உறுதியாகவும் நிறைவேற்றித்தர எங்களால் முடியாமல் போயிருக்கிறது என்பதில்




சந்தேகமில்லை. இதற்கான பொறுப்பில் எனது பங்கை நான் ஒப்புக்கொள்கிறேன்”. என்று தனது நாட்டு மக்களிடம் மன்றாட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

மக்ரோனின் நடத்தைகள் அனுபவக்குறைவின் விளைவானவை என்றோ அல்லது கர்வத்தனமானவை என்றோ எவ்வாறு அழைத்தாலும், டிசம்பர் 21 தனது 41 வது வயதை அடையவிருக்கும் இளம் ஜனாதிபதியான அவர் 18 மாதங்களுக்கு முன்னர் பதவிக்கு வந்ததற்குப் பிறகு சாதாரண மக்களிடமிருந்து தன்னைத் தூரவிலக்கிக்கொண்டே வந்திருக்கிறார் என்பது முற்றிலும் உண்மையே.

பிரான்ஸுக்கென்று மக்ரோன் வகுத்திருக்கும் திட்டங்களுக்கும் பொதுமக்களுடைய அபிலாசைகளுக்கும் இடையில் தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டிருக்கும் பிளவும் மக்களின் மனக்குறைகளைக் கவனிப்பதில் அவர் திரும்பத் திரும்ப காட்டிவந்திருக்கும் அலட்சியமும் இறுதியில் “மஞ்சள் அங்கி இயக்கம்“ என்ற புதிய போராட்ட இயக்கத்தின் தோற்றத்துக்கு வழிவகுத்தன.

ஜனாதிபதியின் உதவியாளர்களும் மனைவியும் செய்யமுடியாததை மஞ்சள் அங்கி இயக்கம் செய்துகாட்டியிருக்கிறது. பிரான்ஸில் மஞ்சள் அங்கிக்காரர்களின் போராட்டம் வெற்றி பெற்றதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது ஐரோப்பாவின் ஏனைய பாகங்களிலும் அதே போன்ற போராட்ட இயக்கங்கள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று நம்பலாம்.

# கருத்துப் ப(ா)டம்





# சொல்றாங்க... சொல்றாங்க...



"என்னைக் கொல்ல வருபவர்களை நான் தடுக்க மாட்டேன்"

**சிறிசேனா**

(ஆனா... உங்களை யாரும் தடுக்கலேன்னா... இந்நேரம் மீண்டும் ஒரு இன அழிப்பை நடத்தியிருப்பீங்களே அசுரரே!... ஸாரி, அதிபரே!...)



"இலங்கைப் போர்க் குற்றங்களுக்கு வெளிநாட்டு நீதித்துறையின் தலையீடு அவசியம்!"

**சி.வி.விக்னேஸ்வரன்**

(கிணற்றுத் தவளையாய் இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் கத்துறது? எப்போதான் விழ வேண்டியவங்க காதிலே விழறது?)



"விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்யும் வரை பிரதமர் மோடியை தூங்க விடமாட்டோம்"

**ராகுல் காந்தி**

(இப்போத்தான் அவர் தூக்கம் கலைஞ்சு சில நாட்களாகுது! இனிமே அவர் நிம்மதியா தூங்கவே கூடாது! நீ விடாம கத்து கைப்புள்ளே!)



"அமைச்சர்கள் தங்கள் திருவாயை மூடினால் அ.தி.மு.க— அ.ம.மு.க இணைப்பு சாத்தியமாகும்!"

**தங்க தமிழ்ச்செல்வன்**


முதல் வேலையா இவர் வாயை மூடினா தேவலை!.. அடடா! தலைமறைவா இருக்கும்போதே ஏன்னா ஆட்டம்? இன்னும் இணைஞ்சுட்டா... கககக போ!)

நிகழ்வு

# பைத்தியக்காரன் பத்தும்

## சிரியாவிலிருந்து வெளியேறும் துருப்புகள்: டிரம்பின் பிடிவாதம் ஆபத்தானது!

சிரியாவிலிருந்து அமெரிக்கத் துருப்புகளைத் திரும்பப் பெறும் நடவடிக்கையில் அதிபர் டிரம்ப் காட்டும் பிடிவாதம், அதிர்ச்சியளிக்கிறது. ஐஎஸ் பயங்கரவாத அமைப்புக்கு எதிராக உலக நாடுகள் தொடுத்துள்ள தாக்குதலை வலுவிழக்கச் செய்யும்




நடவடிக்கை இது என்று அமெரிக்காவின் தோழமை நாடுகள் அச்சம் தெரிவித்துள்ளன. டிரம்பின் நடவடிக்கையின் எதிரொலியாக அமெரிக்க ராணுவத் துறை அமைச்சர் ஜேம்ஸ் மாட்டிஸ் பதவி விலகியிருக்கிறார். இத்தனைக்குப் பிறகும், தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள டிரம்ப் தயாராக இல்லை. தேர்தல் வாக்குறுதியில் கூறியிருந்ததன் அடிப்படையில், வெளிநாடுகளில் உள்ள அமெரிக்கத் துருப்புகளைத் திரும்பப் பெறும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியிருக்கிறார்.




“சிரியாவில் ஐஎஸ் ஆதிக்கத்தின் கட்டமைப்பை முற்றாக நொறுக்கியாகிவிட்டது, இனி மிஞ்சியுள்ள ஜிகாதிகளை சிரியா அரசும் அதை ஆதரிப்பவர்களும் ஒடுக்குவார்கள்” என்று தனது செயலுக்குக் காரணம் கூறுகிறார் டிரம்ப். சிரியா அரசுக்கு ரஷ்யா, ஈரானும் ஆதரவாளர்கள் என்பது கவனிக்கத்தக்கது. மேலோட்டமாகப் பார்க்கும்போது டிரம்ப் சொல்வதில் உண்மையும், ராணுவ உத்தியும் இருக்கிறது. சிரியாவில் ஆதிக்கம் செலுத்திவந்த ஐஎஸ் தன் வசமிருந்த பகுதிகளில் 95%—ஐ இழந்துவிட்டது. இராக்—சிரியா எல்லையை ஒட்டிய சிறு பகுதியில்தான் அது இப்போது ஒட்டிக்கொண்டிருக்கிறது.

சிரியாவில் இருந்து அமெரிக்க படை வாபஸ்: யார் காரணம், யாருக்குப் பாதிப்பு?

சிரியாவில் நடந்து வரும் போரிலிருந்து தனது படைகளை திரும்பப்பெற அமெரிக்கா தயாராகிவருவதாக பாதுகாப்புத் துறை அதிகாரிகளை மேற்கோள்காட்டி அமெரிக்க ஊடகங்கள் தெரிவிக்கின்றன.


இதற்கிடையில், சிரியாவில் ஐஎஸ் அமைப்பினர் வீழ்த்தப்பட்டுவிட்டனர் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தாம் வெளியிட்ட டிவிட்டர் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு சிரியாவில் இருந்து ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிக்க சுமார் 2,000

# செய்வான் !

அமெரிக்கப்படையினர் உதவி செய்தனர். இன்னும் சில பகுதிகளில் சண்டை நடந்துகொண்டுதான் இருக்கிறது. ஐ.எஸ். குழுவினர் மீண்டும் தலையெடுத்துவிடாமல் தடுப்பதற்காக அங்கே மேலும் சிலகாலம் தங்கியிருக்கவேண்டும் என்று அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அலுவலர்கள் நினைப்பதாகக் கருதப்பட்டது.

ஆனால், வடக்கு சிரியாவில் அமெரிக்க ஆதரவுடன் செயல்படும் குர்து போராளிகள் மீது தாக்குதல் தொடுக்க தயாராகிவருவதாக துருக்கி தெரிவித்திருந்த நிலையில் தற்போது அமெரிக்கப் படைகளை திரும்பப் பெறுவது குறித்த தகவல்கள் வெளியாகின்றன. துருக்கி அத்தகையத் தாக்குதலைத் தொடுக்குமானால்,







அது அமெரிக்காவும் துருக்கியும் மோதும் நிலைக்கு கொண்டு செல்லும். அதைப் போலவே, அமெரிக்கத் துருப்புகள் சிரியாவில் இருந்து வெகு விரைவில் வெளியேறும் என்று இந்த ஆண்டின் தொடக்கத்திலே அமெரிக்க அதிபர் டிரம்ப் சொல்லியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஐ.எஸ். கிளர்ச்சியாளர்களை ஒழிப்பதற்கான உலகளாவிய கூட்டணிக்கான அமெரிக்கத் தூதரான பிரெட் மெக்கர்க் சில நாள்களுக்கு முன்பு இது பற்றிக் கூறும்போது, “ஐ.எஸ். கிளர்ச்சியாளர்கள் இல்லாமல் போய்விடுவார்கள் என்று யாரும் சொல்லவில்லை. யாரும் அவ்வளவு விவரமில்லாதவர்கள் இல்லை. எனவே நாங்கள் களத்தில் நீடித்து நிற்கவும், அதன் மூலம் இந்தப் பகுதிகளில் ஸ்திரத்தன்மை நிலவுவதை உறுதி செய்யவும் விரும்புவதாக “ தெரிவித்தார்.

வடக்கு சிரியாவில் உள்ள குர்துப் பகுதியில் அமெரிக்கப் படைகள் பெருமளவில் நிலைகொண்டுள்ளன. சிரியாவில் பெரும் பரப்பளவை நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஐ.எஸ். குழுவினர் கைப்பற்றினர். அத்துடன், சிரியா மற்றும் இராக்கின் சுமார் எட்டு மில்லியன் மக்கள் மீது கடுமையான ஆட்சியை கட்டவிழ்த்துவிட்டது இந்த ஐ.எஸ். குழு. இந்நிலையில் சிரியாவின் குர்துப் போராளிகள் மற்றும் அரபி போராளிகள் (சிரிய ஜனநாயகப் படையினர்) ஆகியோருடன் கூட்டு




சேர்ந்து அமெரிக்கப் படையினர் கிட்டத்தட்ட ஐ.எஸ். குழுவினரை ஒழித்து அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை மீட்டனர். ஆனால், ஐ.எஸ். தீவிரவாதக் குழு முற்றிலும் அழிந்துவிடவில்லை. சிரியாவில் இன்னமும் 14,000 ஐ.எஸ். போராளிகள் இருப்பதாகவும், இதைவிட அதிக எண்ணிக்கையில் அருகில் உள்ள இராக்கில் அவர்கள் இருப்பதாகவும் சமீபத்திய அமெரிக்க அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இத்தீவிரவாதக் குழுவினர் கொரில்லா போர்முறைக்கு மாறி தங்கள் அமைப்பை மீண்டும் கட்டமைக்க முயல்வார்கள் என்ற அச்சம் நிலவுகிறது. ஆனால், அமெரிக்காவுக்கும் குர்துப் போராளிகளுக்கும் இடையில் உள்ள கூட்டணி அண்டை நாடான துருக்கிக்கு எரிச்சலூட்டியது. சிரியா ஜனநாயகப் படையின் முக்கிய போராடும் பிரிவான குர்திஷ் ஒய்.ஜி.பி. படைப்பிரிவு துருக்கியில் குர்து தன்னாட்சி கோரி போராடி வரும் தடை செய்யப்பட்ட குர்து குழுவினரோடு தொடர்புடையது என்று துருக்கி நினைக்கிறது.

சிரியாவில் உள்ள ஒய்.ஜி.பி. படையினர் மீது தங்கள் நாடு விரைவில் போர்தொடுக்கும் என துருக்கி அதிபர் ரிசெப் தயிப் எர்துவான் திங்கள்கிழமை கூறினார். தமது திட்டம் குறித்து தாம் அமெரிக்க அதிபர் டிரம்புடன் தொலைபேசியில் விவாதித்ததாகவும், அவர் நேர்மறையான பதிலைக் கூறியிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.



சிரியாவின் வடபகுதியில் மட்டுமில்லாமல், ஐ.எஸ். படையினர் கடைசியாக கட்டுப்படுத்தும் தென் கிழக்குப் பகுதியிலும் அவர்களை எதிர்த்து நடக்கும் சண்டையில் அமெரிக்கப் படையினர் உதவி வருகின்றனர்.


சிரியாவில் ஐஎஸ் அமைப்பனர் வீழ்த்தப்பட்டுள்ளனர். தங்கள் படைகள் அங்கிருந்ததற்கு அதுமட்டுமே காரணம் என டிரம்ப் டிவிட்டரில் தெரிவித்துள்ளார். அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் ஐஎஸ் அமைப்பினர் அங்கு மீண்டும் செயல்படாமல் இருப்பதில் உறுதியாக உள்ளனர்.

எனினும், சிரியாவில் இன்னமும் நிலைமை மிகவும் சிக்கலாகத்தான் இருக்கிறது. சிரியாவில் 2,000 அமெரிக்கத் துருப்புகள்தான் உள்ளன. அவர்களும் களத்தில் நேரடியாகச் சண்டையிடுவதில்லை. குர்து இனத்தைச் சேர்ந்த போராளிகளைக் கொண்ட சிரியாவின் ஜனநாயகப் படைக்கு ஆதரவாக அவர்கள் உள்ளனர். குர்துகளுக்கு அமெரிக்கா ஆதரவு தருவதை ஆரம்பம் முதலே துருக்கி விரும்பவில்லை. துருக்கி ராணுவத்துக்கு எதிராக சுயாட்சிக்காகப் போராடிவரும் 'குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி' என்ற அமைப்பின் நீட்சிதான் சிரியா ஜனநாயகப் படை என்று துருக்கி அரசு சந்தேகிக்கிறது. குர்துகள் இப்படி ராணுவரீதியாக வலுப்பெறுவதைத் துருக்கி அறவே விரும்பவில்லை.

அமெரிக்கத் துருப்புகள் முற்றாக விலக்கப்பட்டுவிட்டால் துருக்கியப் படையின் கடும் தாக்குதல்களைக் குர்துகள் எதிர்கொள்ளும் ஆபத்து இருக்கிறது. அப்படியொரு நிலை வரும்போது குர்துகள் ஐஎஸ் அமைப்புக்கு எதிரான போரை நிறுத்திக்கொண்டு, துருக்கி ராணுவத்துக்கு எதிராகப் போர் நடத்த நேரும். இது ஐஎஸ் அமைப்புக்கு எதிரான போரைத் திசைதிருப்புவதுடன் நீர்த்தும்போகச் செய்துவிடும். ஐஎஸ் முற்றாக ஒடுக்கப்படும் வரை காத்திருந்துவிட்டு அமெரிக்கா இந்த முடிவை எடுத்திருக்கலாம்; அதேபோல குர்துகள் மீது துருக்கி ராணுவம் தாக்குதல் நடத்தாது என்ற உறுதிமொழியையும் கேட்டுப் பெற்ற பிறகு இதை அறிவித்திருக்கலாம். அமெரிக்க அரசின் முடிவால் வட கிழக்கு சிரியாவில் இது ஆபத்தான வெற்றிடத்தை ஏற்படுத்திவிடும். தனது வெளியுறவுக் கொள்கையால் அமெரிக்காவுக்குள்ளும் அமெரிக்காவுக்கு வெளியிலும் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டுவரும் டிரம்ப், எந்த நிலையிலும் கள நிலவரங்களின் அடிப்படையில் செயல்பட முன்வருவதில்லை. அவரது இந்த நிலைப்பாடு மேற்காசியாவில் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதில் சந்தேகமில்லை!


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
HAPPY NEW YEAR!
2019
புத்தாண்டு
வாழ்த்துக்கள்

# மறக்கும் தெற்கு




## மோசமான திசையில் செல்லும் ஸ்டெர்லைட் விவகாரம்

**ப**ன்னாட்டு நிறுவனம் வேதாந்தாவின் ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி பேரணியாகச் சென்ற மக்கள் மீது தமிழகக் காவல் துறை நடத்திய துப்பாக்கிச்சூட்டின் உஷ்ணத்தையும் கசிந்த ரத்தத்தின் சுவட்டையும் யாரும் இன்னும் மறந்திருக்க முடியாது. இதற்கு முன் தமிழகத்தில் ஒரே நாளில் 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வு என்று ஒன்று நடந்ததில்லை. தூத்துக்குடி மட்டுமின்றி உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்கள் அதிர்ந்து, கண்டித்த நிகழ்வு அது.



## ஸ்டெர்லைட் கடந்துவந்த பாதை

இந்தியாவில் மகாராஷ்டிரத்தில்தான் ஸ்டெர்லைட் ஆலையைத் தொடங்க முதலில் முயன்றார்கள். ரத்தினகிரியில் ஆலைக் கட்டுமானப் பணிகள் தொடங்கியபோது அப்பகுதி மக்களின் தீவிரப் போராட்டத்தால், 1992—ல் மகாராஷ்டிர அரசு அந்த அனுமதியை ரத்துசெய்தது. அடுத்து, குஜராத்தில் ஆலையைத் தொடங்க ஸ்டெர்லைட் அனுமதி கோரியது. உள்ளூர் மக்களின் உடனடி எதிர்வினையால் குஜராத் அரசு மறுத்துவிட்டது. அடுத்து அவர்கள் தமிழகத்தை நாடினர். மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் அரசு தூத்துக்குடியில் இந்த ஆலை திறக்கப்படுவதற்கு 1995—ல் அனுமதி வழங்கியது. பின்னர் மறைந்த முதல்வர் கருணாநிதியின் அரசு இந்த ஆலையின் விரிவாக்கத்துக்கு 2006—ல் அனுமதி வழங்கியது.

தொழில்மயமாக் கலில் காட்டப்பட்ட கவனம் தூத்துக்குடியின் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் காட்டப்படவில்லை. அரசு பெயரளவுக்குச் சொல்லும் வழிமுறைகளையும்கூட தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மைத் தொழிற்சாலைகள் பின்பற்றுவதில்லை. அரசு அதிகாரிகளும் இதைக்

# மறுதலிக்கும் ஆட்சி

**து.அரிபரந்தாமன்**

கண்டுகொள்வதில்லை. விளைவாக, தூத்துக்குடி இன்று சுகாதாரக் கேடுகள் நிரம்பிய நகரங்களில் ஒன்றாகிவிட்டது. தூத்துக்குடி மக்களைக் கேட்டால் புற்றுநோய், மூச்சுத்திணறல், சிறுநீரக பாதிப்பு, தோல் நோய், கருப்பை பாதிப்பு, மலட்டுத்தன்மை ஏற்படுவதாகப் புலம்புகிறார்கள். மண்ணும் நீரும் காற்றும் நஞ்சாகிவிட்ட சூழலிலேயே தூத்துக்குடி மக்கள் தங்களைச் சுற்றியிருக்கும் தொழிற்சாலைகளைக் கோபக் கண் கொண்டு





பார்க்கத் தொடங்கினார்கள். ஸ்டெர்லைட் ஆலை இந்தக் கோபத்தின் மையம் ஆனது. அதன் ஒரு பகுதியாக சட்டப் போராட்டத்தையும் முன்னெடுத்தனர்.

## நீதிமன்றம் சொன்னது என்ன?

சென்னை உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் தர்மா ராவ் மற்றும் பால் வசந்தகுமார் அமர்வு, மக்கள் தரப்பில் தாக்கல்செய்யப்பட்ட பல ரிட் மனுக்களை அனுமதித்து 28.09.2010—ல் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்ப்பை வழங்கியது. அது, மக்களின் கோரிக்கையை ஏற்று ஸ்டெர்லைட் ஆலையை மூட உத்தரவிட்டது. குறிப்பாக ஸ்டெர்லைட்டின் வாதத்தையும், மத்திய, மாநில அரசுகள் ஸ்டெர்லைட்டுக்கு ஆதரவாக வாதாடியதையும் நிராகரித்தது இத்தீர்ப்பு.

இதன் தொடர்ச்சியாக ஸ்டெர்லைட் ஆலை உச்ச நீதிமன்றத்தை அணுகியது. உச்ச நீதிமன்றம் முன்னதாக சென்னை உயர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை ரத்துசெய்தது. ஸ்டெர்லைட் ஆலையை மூட வேண்டும் என்ற நிலைப்பாட்டை மத்திய, மாநில அரசுகள் எடுத்திருந்தால், உச்ச நீதிமன்றம் இப்படி உயர் நீதிமன்றத் தீர்ப்பை

ரத்துசெய்திருக்காது. ஆனாலும், ஸ்டெர்லைட் ஆலை சுற்றுச்சூழலை மாசுபடுத்தியது என்பதாலும் லைசென்ஸ் இன்றி இயங்கியது என்பதாலும் உச்ச நீதிமன்றம் ஸ்டெர்லைட் ஆலைக்கு நூறு கோடி ரூபாய் அபராதம் விதித்து, அந்த ஆலை செயல்பட தீர்ப்பு வழங்கியது. மீண்டும் மக்கள் போராட்டங்கள் தொடர்ந்தன.




## வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டம்

சாதி, மத, கட்சி வேறுபாடுகளைக் கடந்து 2018 பிப்ரவரி 12 முதல் தொடங்கிய அறவழியிலான போராட்டம் உண்மையாகவே வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு போராட்டம். பல்லாயிரக்கணக்கானோரை ஒருங்கிணைத்த இந்தப் போராட்டக் குரலுக்கு நூறு நாள் வரை செவிசாய்க்கவில்லை நம்முடைய அரசு என்பது துரதிருஷ்டவசமானது. நூறாவது நாளான மே 22 அன்று நடத்தப்பட்ட பேரணிதான் துப்பாக்கிச்சூட்டில் முடிந்தது. இதன் தொடர்ச்சியாக மே 28 அன்று பிறப்பித்த அரசாணையின் மூலம் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடும் கொள்கை முடிவை எடுத்தது தமிழக அரசு. இதனூடாகவே ஸ்டெர்லைட் ஆலைக்கு மின்சாரம் மற்றும் தண்ணீர் விநியோகத்தை நிறுத்த உத்தரவிட்டது தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம். இதை எதிர்த்து சட்டப் போராட்டத்தில் இறங்கியது ஸ்டெர்லைட் ஆலை.



## செயல்படாத பசுமைத் தீர்ப்பாயம்

சுற்றுச்சூழல் தொடர்பான வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரிப்பதற்குப் பதிலாக பசுமைத் தீர்ப்பாயங்களை அமைத்து 2010—ல் சட்டம் இயற்றியது மத்திய அரசு. அதன்படி சென்னையிலும் ஒரு பசுமைத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. இத்தீர்ப்பாயத்தின் நீதிபதிகளாக நீதித் துறை உறுப்பினர்களும், தொழில்நுட்ப உறுப்பினர்களும் இருப்பர். சென்னையில் இரு பிரிவு உறுப்பினர்களும் ஓய்வுபெற்ற பின் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படாததால், இங்குள்ள பசுமைத் தீர்ப்பாயம் செயலிழந்துவிட்டது. ஸ்டெர்லைட் ஆலை டெல்லியில் உள்ள தலைமைப் பசுமைத் தீர்ப்பாயத்தை அணுகியது.

இந்த வழக்கில் தங்களை ஒரு சாரராராக ஏற்க வேண்டும் என்று ஸ்டெர்லைட் எதிர்ப்புக் குழுவின் தலைவி பேராசிரியர் பாத்திமா, வணிகர் சங்க நிர்வாகி ராஜா, மார்க்ஸிஸ்ட் கட்சி நிர்வாகி அர்ஜுனன், மதிமுக பொதுச்செயலர் வைகோ ஆகியோர் மனு அளித்தனர். இந்த நால்வரையும் ஸ்டெர்லைட் வழக்கில் தலையீட்டாளர்கள் என்றது பசுமைத் தீர்ப்பாயம்.

இவர்கள் ஒரு முக்கியமான விஷயத்தைச் சுட்டினர். “ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடும் அரசாணை தமிழக அரசின் கொள்கை முடிவு என்பதால், அதை விசாரிக்கும் அதிகாரம் உயர் நீதி மன்றம் அல்லது உச்ச நீதி மன்றத்திற்கு மட்டுமே உண்டு. பசுமைத் தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் இல்லை” என்பதே அது. ஆனால், இந்த விஷயத்தை முதல் பிரச்சினையாக விசாரித்துத் தீர்ப்பளிக்க டெல்லி பசுமைத் தீர்ப்பாயம் மறுத்தது. இதனை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. உச்ச நீதிமன்றம் மேற்சொன்ன பிரச்சினையையும் விசாரிக்க உத்தரவிட்டதே தவிர, இதனை முதல் பிரச்சினையாக விசாரிக்க உத்தரவிடவில்லை.



தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37

## நீதிபதிகள் மேலான ஆட்சேபணை

பசுமைத் தீர்ப்பாயம் ஓய்வுபெற்ற ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் மொத்தம் 3 நபர்கள் கொண்ட விசாரணைக் குழுவை அமைத்து ஸ்டெர்லைட் வழக்கை விசாரிக்கப்போவதாகக் கூறியது. அந்தக் குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் பசுமைத் தீர்ப்பாயம் வழக்கை விசாரிக்கும் என்றது. தமிழகத்தில் உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற நன்மதிப்புள்ள நீதிபதிகள் கே.பி.சிவசுப்ரமணியம் அல்லது கே.சந்துரு போன்ற எவரேனும் ஒருவரை நியமிக்கலாம் என்றும் பசுமைத் தீர்ப்பாயம் முன்மொழிந்தது.




ஆனால், தமிழ்நாட்டில் பணியாற்றி ஓய்வுபெற்ற எந்த உயர் நீதிமன்ற நீதிபதியையும் இந்த வழக்கில் நியமிக்கக் கூடாது என்றும் தமிழகத்தில் உள்ள உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதிகள் அனைவருமே ஸ்டெர்லைட் விஷயத்தில் ஒரு சார்பானவர்கள் என்றும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தது ஸ்டெர்லைட் ஆலை. துரதிருஷ்டவசமாக, ஸ்டெர்லைட் ஆலையின் இந்த வாதத்தை ஏற்று தன் முன்மொழிவைக் கைவிட்டது பசுமைத் தீர்ப்பாயம். தொடர்ந்து மேகாலயா உயர்நீதிமன்ற மேனாள் தலைமை நீதிபதி தருண் அகர்வாலை விசாரணைக் குழுத் தலைவராக நியமித்தது பசுமைத் தீர்ப்பாயம். ஒட்டுமொத்த தமிழக நீதிபதிகளையும் கொச்சைப்படுத்தும் தமிழக நீதிபதிகள் மீதான ஸ்டெர்லைட் ஆலையின் குற்றச்சாட்டைத் தமிழ்நாடு அரசு கண்டித்திருக்க வேண்டும். ஓய்வுபெற்ற தமிழக உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரைத்தான் நியமிக்க வேண்டும் என்றும் தமிழக அரசு மனு போட்டிருக்க வேண்டும். ஆனால், அதற்கான எந்த முயற்சியும் தமிழ்நாடு அரசு எடுக்கவில்லை.



## தமிழக அரசின் தவறுகள்

நீதிபதி தருண் அகர்வால் தன்னுடைய பணிக்காலத்தில் காசியாபாத் பிராவிடண்ட் பண்டு முறைகேடு சம்மந்தமான பிரச்சினையில் ஆதாயம் அடைந்தவர் என்ற குற்றச்சாட்டை எதிர்கொண்டவர். இதனால், அவர் தலைமை ஏற்பதைத் தலையீட்டாளர்கள் சார்பில் பேராசிரியர் பாத்திமா ஆட்சேபித்தார். தமிழ்நாடு அரசும் நீதிபதி தருண் அகர்வால் நியமனத்தை ஆட்சேபித்திருக்க வேண்டும்; அப்படிச் செய்யவில்லை. அதேபோல, மதுரை உயர் நீதிமன்றத்தில் நீதிபதி சி.டி.செல்வம் தலைமையிலான இரு நீதிபதிகள் அமர்வு, “முன்னதாக ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்காகத் தமிழ்நாடு அரசு பிறப்பித்த 28.05.2018 தேதிய அரசாணை வலுவற்றதாக உள்ளது” என்று சுட்டிக்காட்டிய பின்பும், தமிழக அமைச்சரவை கூடி, ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதை அமைச்சரவை முடிவாக எடுக்கத் தவறியது.

நீதிபதி தருண் அகர்வால் குழுவின் முன் பல வால்யூம் ஆவணங்களை ஸ்டெர்லைட் நிர்வாகம் தாக்கல் செய்தது. வழக்கில் தலையீட்டாளர்களுக்கான ஆவணங்கள் அந்த நால்வருக்கும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி வழங்கப்படவில்லை. “ஆவணங்களை ஒரு




தரப்புக்குத் தர மறுப்பது, அத்தரப்பின் கருத்தை எடுத்துரைக்கும் வாய்ப்பை மறுப்பதாகும்; இது நீதிக்குப் புறம்பானது” என்று நால்வர் தரப்பிலும் வாதாடியும், ஆவணங்களை வழங்க வேண்டும் என்று ஸ்டெர்லைட்டுக்கு நீதிபதி தருண் அகர்வால் குழு உத்தரவிட மறுத்துவிட்டது. தருண் அகர்வால் தலைமையிலான குழு சென்ற வாரம் 48 வால்யூம்கள் அடங்கிய அறிக்கையை பசுமைத் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்தது. அந்த அறிக்கையின் நகல்களும்கூட தலையீட்டாளர்கள் நால்வருக்கும் தரப்படவில்லை. பசுமைத் தீர்ப்பாயமும் அவர்களுக்கு அறிக்கை நகல்களைத் தர உத்தரவிட மறுத்துவிட்டது. இது வழக்கில் தலையீட்டாளர்கள் நால்வருக்கும் உரிய வாய்பை மறுப்பதோடு இயற்கை நீதியை மீறிய செயலும் ஆகும்.

இந்த அறிக்கையின் மீதான வாதத்தை உடனடியாக சமர்ப்பிக்கும்படி தமிழக அரசுக்குப் பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவிட்டது. ஆனால், வழக்கில் தலையீட்டாளர்கள் நால்வரும் அவர்கள் தரப்பு வாதத்தை முன்வைத்திட அனுமதி மறுத்தது. மாறாக, தமிழக அரசுக்கு அவர்கள் உதவலாம் என்று கூறியது. இது வினோதமானது. இந்த நால்வரையும் வழக்கில் தலையீட்டாளர்கள் என்று பசுமைத் தீர்ப்பாயம் தொடர்ந்து கூறுவதே இதன் மூலம் அர்த்தமற்றதாகிவிட்டது. முக்கியத்துவம் மிக்க தருண் அகர்வால் குழு அறிக்கையைக்கூட இன்னும் பசுமைத் தீர்ப்பாயம் அதன் இணையதளத்தில் வெளியிடவில்லை. இது சரியானது அல்ல.

தருண் அகர்வால் குழுவானது ஆவணங்களையும் சாட்சியங்களையும் திரட்டி உரிய குறிப்பை அறிக்கையாக அளிக்க வேண்டும் என்றே பசுமைத் தீர்ப்பாயம் கூறியது. ஆனால், தன்னுடைய அதிகார வரம்பை மீறி, ”ஸ்டெர்லைட் ஆலையை மூடச் சொல்லும் தமிழக அரசின் ஆணை நியாயமற்றது” என்று தருண் அகர்வால் குழு தன்னுடைய அறிக்கையில் கூறியிருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. இது உண்மையானால், தருண் அகர்வால் குழு அதிகார வரம்பை மீறிய செயல் அது. தமிழக அரசின் உத்தரவு நியாயமானதா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது பசுமைத் தீர்ப்பாயமே.




## அரசும் தீர்ப்பாயமும் செய்ய வேண்டியது என்ன?

ஒரு ஜனநாயக நாட்டில் எல்லாவற்றையும் காட்டிலும் முக்கியமானது மக்கள் நலன். அவர்களுடைய குரல். இந்த வழக்கு வெறுமனே ஸ்டெர்லைட் ஆலை சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல. சுற்றுச்சூழல் விஷயத்தில் இந்த நாட்டின் நீதி அமைப்புகள் எப்படிச் செயல்படுகின்றன என்பது தொடர்பானதும் இதில் உறைந்திருக்கிறது. நீதி அமைப்புகள் பாரபட்சமாகச் செயல்படுவதாக மக்கள் மத்தியில் எண்ணம் உருவானால் அதைக் காட்டிலும் ஜனநாயகத்துக்குக் கேடு ஏதும் இல்லை. பசுமைத் தீர்ப்பாயம் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ்நாடு அரசு இந்த வழக்கு சென்றுகொண்டிருக்கும் மோசமான திசையை உணர வேண்டும். ஸ்டெர்லைட் ஆலையை உள்ளபடியே அது மூட விரும்புகிறது என்றால், காலந்தாழ்த்தாமல் இப்போதேனும் தமிழக அமைச்சரவையைக் கூட்டி அதன் முடிவாக ஸ்டெர்லைட் ஆலையை மூடும் முடிவை அறிவிக்க வேண்டும்.




## செந்தமிழும் ஸ்பெயின் நாடும்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடி என்று தமிழின் தொன்மையை அறிந்த புலவர் அறிவித்தார். ஸ்பெயின் நாட்டு பாஸ்கு மொழி மக்களும் தம் மொழியின் பழைமையைப் பற்றிக் கூறும்போது, கடவுள் கடவுளாவதற்கு முன்பே, பாறைகள் பாறைகளாவதற்கு முன்பே, யூசுகரா மக்கள் யூசுகராவாக இருந்தனர் என்று கூறினர்.




பாஸ்கு மக்களின் வரலாறு கி.மு. 5000—ஆம் ஆண்டளவில் தொடங்கியதாக அறியப்படுகிறது. இந்தோ — ஐரோப்பிய மொழி பேசிய இனத்தவர் ஐரோப்பாவில் கி.மு. 2000 —ஆம் ஆண்டில் குடியேறினார்கள். ஆனால், அவர்களுக்கு முன்பே பாஸ்கு மக்கள் ஸ்பெயின் நாட்டில் வாழ்ந்து வந்தனர். இதை ஐரோப்பிய வரலாறு ஒப்புக் கொண்டுள்ளது.




பாஸ்கு மக்கள் குமரிக்கண்டத்திலிருந்து சென்றார்களா? சிந்துவெளிப் பகுதியிலிருந்து போனார்களா? தமிழ் வணிகக் குழுவிலிருந்து பிரிந்து சென்று தங்கியவர்களா? இந்த வினாக்களுக்கு விடை தெரியாமல் வரலாறு விழித்துக்கொண்டிருக்கிறது.

ஆதி தமிழர்கள், பூமிப் பந்தின் கிழக்கிலும் மேற்கிலும் நாவாய் செலுத்தி உலா வந்த கடலோடிகள். பாஸ்கு மக்களும் பெருங்கப்பல் கட்டி கடலில் வலம் வந்த கடலோடிகளே. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு முன்பே, பாஸ்கு மக்கள் அக்கண்டத்தில் அடி வைத்திருக்கக்கூடும் என்ற செய்தியும் உள்ளது.

கொலம்பஸின் மாலுமிகள் குழுவில் பாஸ்கு மக்கள் இருந்தனர். இவர்கள் வழிகாட்டியிருக்கக்கூடும். மற்றொரு கடற்பயணியான மெகல்லனின் மாலுமிக் குழுவிலும் பாஸ்கு மக்கள் இருந்தனர். இவை மட்டுமல்ல, பாஸ்கு மக்களில் சிலர் தென் அமெரிக்காவுக்கும் சென்றார்கள்.




குடியேறினார்கள். அவர்களின் பெயர்கள் அங்கு நிலைபெற்றன. சான்றுக்கு இரண்டு: பொலிவர், குவாரா.

முன்னைத் தமிழருடைய வாழ்வு சிற்றூரையே மையப்புள்ளியாகக் கொண்டிருந்தது. அது தன்னிறைவு பெற்றிருந்த கிராமமாகச் சிறப்புற்றிருந்தது. மக்களின் வாழ்விலும் சிற்றூரே




தலைமை தாங்கியது. வழிபாட்டிடம், கல்வியகம், தொழிற்சாலை முதலியவை ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தன. தமிழரைப் போலவே அவர்கள் உழவராகத் திகழ்ந்தார்கள். ஆடு மாடுகளை வளர்த்தார்கள். ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது.

பாஸ்கு நாட்டில் எப்ரோ என்ற ஆறு பாய்ந்தோடுகிறது. இதன் கரைகளில் நகரங்கள் வளர்கின்றன. அங்குள்ள இரும்புத் தொழிற்சாலைகள் சிற்றூர் மக்களைக் காந்தம்போல் இழுத்துத் தழுவிக் கொள்கின்றன. கிராமங்கள், தேனீக்கள் நீங்கிய தேன் கூடுபோல மாறிவிட்டன.

# மலையமான்

தமிழ் என்றால் இனிமை, நீர்மை, இறைமை, படை, வீரம், இலக்கியம், அகப்பொருள் என்று பல பொருள்கள் உண்டு. இது தமிழின் சிறப்புகளில் ஒன்று. தமிழகத்தில் மன்னர் பரம்பரையிடம் ஒரு நடைமுறை இருந்தது.




நாடாளும் அரசன் இறந்தால் மன்னனின் மூத்த மகனுக்கே அரியணை ஏறும் உரிமை தரப்பட்டது. இந்த நடைமுறை பாஸ்கு மக்களிடம் இருக்கிறது.

குடும்பத் தலைவர் இறந்துவிட்டால் அவனுடைய சொத்து மூத்த மகனுக்கு மட்டுமே உரியதாக்கப்படும். மக்கள் அனைவருக்கும் சொத்தைப் பிரித்துக் கொடுத்து விட்டால் நிலபுலங்கள் சிறுத்து, நாளடைவில் மறைந்து விடும் என்பதே இந்தச் செயல்முறைக்கு அடிப்படைக் காரணமாகும்.

தமிழர் தாய்மொழிக்கே தலைமை தந்தனர். ஆகவேதான், தமிழ் என்பதன் அடிப்படையில் தாம் வாழும் மண்ணுக்குத் தமிழகம் — தமிழ்நாடு என்று பெயர் சூட்டினர். இந்தச் சிறப்பியல்பு பாஸ்கு மக்களிடமும் உள்ளது. பாஸ்கு மொழிக்கு முன்பு எசுகெரா என்ற மற்றொரு பெயரும் இருந்தது. இந்த மொழியின் அடிப்படையில்

அவர்களின் தாயகம் எசுகாடி என்றும் எசுகால் கூரியா என்றும் கூறப்பட்டது.



தமிழகம் அயல்மொழியினரின் படையெடுப்புக்குப் பலமுறை ஆட்பட்டது. பாஸ்கு மக்களின் நாடும் பல காலக்கட்டடங்களில் பகைவரின் கைகளுள் நசுங்கியது. அதன் வேரைச் சீரழிவு தாக்கியது. அவர்களின் நாட்டை ரோமானியர்கள் விழுங்கினார்கள். விசிகோத்துகள் என்ற இனத்தவர் அவர்களின் நாட்டின் மேல் படையெடுத்தார்கள். அவர்களை அடக்கினார்கள்.

பிரெஞ்சுக்காரர்கள் அவர்களைத் தம் பிடிக்குள் வைத்திருந்தார்கள். நார்மன் வீரர்கள் அவர்களை அழித்தார்கள். மூர் ராணுவத்தினர் அவர்களின் வாழ்வை வீணடித்தார்கள். உடனிருந்த ஸ்பெயின் நாட்டினர் பாஸ்கு மக்கள் மேல் துன்ப மூட்டைகளை ஏற்றினார்கள். இவ்வளவு அழிவு நிலைகளையும் பாஸ்கு மக்கள் தாங்கிக்கொண்டார்கள்.

ஆனால் சிலர் வாழ்வு தேட அயல்நாடு சென்றார்கள். ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் என்று கூறுவதுபோல, பாஸ்கு மக்களின் தாயகத்தின் ஒரு பகுதி ஸ்பெயின் நாட்டிலும் மற்றொரு பகுதி பிரான்ஸ் நாட்டிலும் அமைந்துள்ளது. பாஸ்கு நாட்டின் வட எல்லையாகப் பிஸ்கே வளைகுடா உள்ளது. தெற்கெல்லையாக லாரியோஜா அமைந்துள்ளது. கிழக்கில் நாவரா மாநிலம் உள்ளது. மேற்கில் காண்டாபிரியா மாநிலம் உள்ளது. நாட்டின் நடுவில் பைரீனீஸ் மலை உள்ளது.



ஸ்பெயின் நாட்டில் 1830—இல் டான் கார்லஸ் நடத்திய போராட்டம், 1870—இல் கார்லிஸ் நடத்திய கிளர்ச்சி, 1936—இல் நடைபெற்ற தேசிய எழுச்சி முதலியவற்றில் பாஸ்கு மக்கள் பங்கு பெற்றார்கள். அதன் பலன்களையும் அனுபவித்தார்கள். உள்நாட்டுப் போரில் வெற்றிபெற்ற பிரான்சிஸ்கோ பிரேங்கோவுக்கு எதிராக, பாஸ்கு மக்கள் செயல்பட்டதால், அந்த சர்வாதிகாரி பாஸ்கு மக்களின் சிறப்பு உரிமைகளைப் பறித்தான். அவர்களின் தன்னாட்சி உரிமையையும் நீக்கினான்.

அளவுக்கு மீறிய அடக்குமுறை, எதிர்ப்பு உணர்ச்சியை எழுப்பிவிடும். தாய்மண் ஆட்சி உரிமை பெறுவதற்காக, அமைப்பு ஒன்று உருவானது. அந்த அமைப்பு எசுகாடிடா அஸ்காட்டா என்று அழைக்கப்பட்டது. இதன் பொருள் சுதந்திரமும் பாஸ்கு தாயகமும் என்பதாகும். இவ்வமைப்பின் வீரர்கள் 20 ஆண்டுகளாக ஆயுதம் ஏந்திப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

பாஸ்கு மொழி, பிற மொழிகளின் தாக்குதலால் தன் இயல்பை முழுவதுமாக இழந்தது. புதிய எழுத்து முறையை ஏற்றுக்கொண்டது (இது ஆங்கில எழுத்து முறை போன்றது). அளவற்ற பிறமொழிச் சொற்களையும் உள்வாங்கிக் கொண்டது. பாஸ்கு மொழி அடியோடு சிதைந்தது. அதன் அடிப்படைப் பண்பாடும் முற்றிலும் முறிந்தது. கூட்டுப் புழு, பூச்சியாக மாறுவதைப் போல, பாஸ்கு மொழி மக்கள் முற்றிலும் மாறிவிட்டனர்.

பாஸ்கு மொழி, எந்தக் குடும்பத்தைச்





சேர்ந்தது என்பது பற்றிப் பலரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அது இந்தோ — ஐரோப்பிய மொழிக் குடும்பத்தையோ இந்தோ — ஜெர்மானிய மொழிக் குடும்பத்தையோ சேர்ந்ததல்ல என்ற முடிவை ஆய்வாளர்கள் அனைவரும் ஒருமனதாகக் கூறினார்கள். ஒற்றைப் பனைமரம் தனித்து நிற்பதைப் போல், ஐரோப்பிய மொழிகளின் இடையில் பாஸ்கு மொழி தனியாக இருக்கிறது.

பிரெஞ்சு நாட்டு மொழியியல் அறிஞர் லூயி லூரியன் போனபார்ட்டே, பாஸ்கு மொழியின் மூலமொழி எது என்ற ஆய்வில் ஈடுபட்டார். ஜெர்மன் நாட்டு ஹகோ ஸ்கூகார்ட் என்பவரும் ஆய்வு மேற்கொண்டார்.

பாஸ்கு மொழி பண்டைய ஐபீரியன் மொழியைச் சேர்ந்தது என்றும், ஆஃப்ரோ — ஆசிய மொழிக் குடும்பத்திற்கு உரியது என்றும், காகசியன் மொழியைச் சார்ந்தது என்றும் பற்பல கருத்துகள் கூறப்பட்டன.

பிரெஞ்சு மொழி அறிஞர் லோகோவாரியும் போலந்து நாட்டு அறிஞர் பெனான்சி பிக்னியூ சாலெக்கும் பாஸ்கு மொழியின் வேர் பற்றி ஆராய்ச்சி செய்தார்கள். பாஸ்கு மொழியின் மூல மொழி தமிழ் என்பதை அவர்கள் அறிவித்தார்கள்.

அறிஞர்கள் ப. இராமநாதனும் அரசேந்திரனும் தமிழ் மொழியே பாஸ்கு மொழியின் வேர் என்று தெரிவித்தார்கள். பாஸ்கு மொழியில் 2,500 தமிழ்ச் சொற்கள், திரிபுற்ற நிலையில் இருப்பதை அறிஞர் லோகோவாரி ஆய்ந்துரைத்தார்.




பாஸ்கு மொழி, தமிழைப் போன்ற ஒட்டுநிலை மொழி. தமிழில் இருப்பதைப் போல், அம்மொழியிலும், ர, ற என்றும் ல, ள என்றும் இரண்டிரண்டு எழுத்துகள் இருக்கின்றன. தமிழில் வினைச் சொல்லே, செயல் செய்தவனின் பால், எண், இடம் காலம் முதலியவற்றை அறிவிக்கும். பாஸ்கு மொழியிலும் இதே நிலை உள்ளது. பின்வரும் பாஸ்கு மொழிச் சொற்களின் திரிபு நிலை கவனிக்கத்தக்கது.

அமா (அம்மா), ஐத்த (அத்தன் — அப்பா), அனா (அண்ணி), அனியா (அண்ணன்), செய்ன் (சேய்—குழந்தை) ஊரியா (ஊர்), உரி (அரிசி) ஏரே (ஏர்) இலுன் (இருள்), ஓட்ஸ் (ஓசை), இரெளன் (இரு), து (துப்பு), சு (சுடு), எரெ (எரி), இகே (ஏகு—போ) சுர் ( சொரி), அர்(ஆள்), பான் பினா (பாப்பா) , இலோபா (இளைஞன்), ஒரென் (ஓரை —நேர அளவு), மோகோ (மூக்கு), சிர்ரி (சில்லி — சிறுமை), அல (அல்லது), எகினெ (என்) — இப்படிப் பல தமிழ்ச் சொற்கள் பாஸ்கு மொழியில் உருமாறிக் கிடக்கின்றன.

ஸ்பெயின் நாட்டில் செந்தமிழ் மரபினர் வாழ்கின்றனர் என்ற உண்மையும் கால இருட்டில் மறைந்து கிடக்கின்றது. ஸ்பெயின் நாட்டு பாஸ்கு மக்கள் தமிழ் இனத்தவரே என்று எவர் உணர்த்தப் போகிறார்கள்? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.



## பெரியாரை எப்படிப் புரிந்துகொள்வது?

படுகொலைசெய்யப்பட்டார் காந்தி. மரணச் செய்தியை உள்ளடக்கிக்கொண்டு டெல்லியின் வீதிகள் வழியே பயணப்பட்டபோதே விஸ்வரூபம் எடுத்திருந்த கோட்ஸேவின் துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்ட சாம்பல் நிறப் புகை பெரும் கருமேகமாகி நாட்டின் மேல் பரவுகிறது. மக்கள் வெடித்தழுகிறார்கள். பேரதிர்ச்சி, தாங்கொணா துயரம், கட்டுக்கடங்கா வலி. எல்லோர் மத்தியிலும் இரண்டு கேள்விகள். “ஐயோ… இது உண்மைதானா?”, “கொலையாளி யார்?”

பிரிவினைக் கலவரங்களின் ரத்தச்சகதிக்கு நடுவே ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த இந்திய அரசுக்கு இரண்டாவது கேள்வி எவ்வளவு பெரிய ஆபத்தைச் சுமந்திருக்கிறது என்பது தெரியும். ஆகவே, இரண்டாவது கேள்விக்கான பதிலுடன் இணைத்தே முதல் கேள்விக்கான பதிலையும் சொல்கிறார் பிரதமர் நேரு. அதே நேரத்தில், நாடு முழுக்க கலவரங்களைத் தடுக்கும் விதமாகச் செல்வாக்குள்ள தலைவர்கள் மக்களிடம் பேசுகிறார்கள். பிராமணிய எதிர்ப்புக்குப் பேர்போன தமிழ்நாட்டில் காந்தியைக் கொன்ற கோட்ஸே ஒரு பிராமணர் என்ற தகவல் என்ன மாதிரியான விளைவுகளை உண்டாக்குமோ என்ற கவலை எல்லோருக்குமே இருக்கிறது.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் பக்கத்திலுள்ள சன்னாநல்லூரில் திராவிடர் கழகக் கூட்டம். வழக்கம்போல பிராமணியத்தை வெளுத்து வாங்கும் ஒரு இளம் பேச்சாளர் காந்தி படுகொலைச் சம்பவத்தை நோக்கி நகர்கிறார். கோட்ஸே ஒரு பிராமணர் என்பதைச் சொல்லும் அவர், தமிழ் பிராமணர்களின் ஆதிக்கத்தோடு கோட்ஸேவின் மேலாதிக்கக் குணத்தைப் பொருத்த முற்படுகிறார்.




மேடையில் அமர்ந்திருக்கும் பெரியார் தன் கையிலுள்ள தடியைத் தட்டுகிறார். பெரியார் இப்படி தடியைத் தட்டினால், அது ஒரு சமிக்ஞை. அதற்கான அர்த்தம் திராவிடக் கழகத்தினருக்குத் தெரியும்: இந்தப் பேச்சு தவிர்க்கப்பட வேண்டியது, முடித்துக்கொள்!

இளைஞர் பேச்சை முடித்துக்கொள்கிறார். கூட்டம் முடிகிறது. இளைஞரின் முகம் வாடியிருக்கிறது. பிராமணியம், வைதீகத்தின் அபாயத்தை மக்களிடம் உணர்த்த இது ஒரு நல்ல சந்தர்ப்பம், அதை ஏன் பெரியார் தடுக்கிறார் என்பது இளைஞரின் முறைப்பாடு. பெரியார் சொல்கிறார், “நமக்கு பார்ப்பனியத்தோடதான் சண்டை. தனிப்பட்ட பார்ப்பனர்களோட இல்லை. அப்புறம், நாடு இப்போ இருக்கிற சூழல்ல இப்படிப் பேசலாமா? மக்கள் ஏற்கெனவே கொந்தளிப்புல இருக்கிறப்போ அதைத் தூண்டிவிடுற மாதிரி பேசுறது கலவரங்களை உண்டாக்காதா? சமூகத்தைப் பிளவுபடுத்துறதா நம்ம நோக்கம்?”

என்னிடம் நிறைய இளைஞர்கள் கேட்பதுண்டு. “ஒரு காந்தியர் எப்படி பெரியாரை ஏற்க முடியும்? காந்தியைக் கடுமையாக விமர்சித்தவர் பெரியார். காந்தியும் பெரியாரும் எந்தப் புள்ளியில் சந்திக்க முடியும்?” இன்னும் ஒருபடி மேலேபோய் “பெரியாரைப் போன்ற இனவெறியரை எப்படி ஒரு காந்தியர் தூக்கிப்பிடிக்க முடியும்?” என்று கேட்பவர்களும் உண்டு. இரண்டு பதில்களைச் சொல்வேன். “இருவருமே சமத்துவத்துக்காகப் போராடியவர்கள். பாதைகள் வேறு என்றாலும் நோக்கம் ஒன்று. இருவருமே வெளிப்படுத்தல் முறைமையில் ஒரு நாட்டுப்புறத்தன்மையைக் கொண்டவர்கள். இருவரையுமே நவீனப் பார்வையில் வார்த்தைகள் வழி கொண்டு மட்டும் நம்மால் புரிந்துகொள்ள முடியாது. பெரியார் இன்னும் கூடுதல் சிக்கலானவர்.”

பல்லாயிரக்கணக்கான பக்கங்களை எழுதியவர், பல நூறு கூட்டங்களைப் பேசியவர் காந்தி. ஏன் “என்னுடைய வாழ்க்கையே நான் விட்டுச்செல்லும் செய்தி” என்று அவர் சொன்னார்? ஏன் தன்னுடைய எழுத்துகளையோ, உரைகளையோ தன்னுடைய செய்தி என்று அவர்

# தமிழே

குறிப்பிடவில்லை? எல்லோரையும் நேசிப்பது, எல்லாத் தரப்புகளையும் புரிந்துகொள்வது, மனிதர்களை அவர்களுடைய வார்த்தைகளைத் தாண்டி அவர்களுடைய ஒட்டுமொத்த வாழ்க்கையின் வழியாகப் புரிந்துகொள்ள முற்படுவதே சரியான வழி என்பதே காந்தியைக் கற்பவர்கள் கற்கும் அடிப்படைப் பாடம்.

ஒரு சந்தர்ப்பத்தில், "அகிம்சை என்பதைப் பற்றிக் கேட்டால் அது கோழைத்தனம் என்பேன். பழங்காலத்தில் அது பொருத்தமாக இருக்கலாம்.



**சமஸ்**

அதை இப்போது ஏற்று அதன்படி நடப்பதென்பது சாத்தியம் இல்லை. அகிம்சை பிரயோசனப்படாது" என்று பாதுகாப்புக்குக் கத்தி வைத்துக்கொள்ளச் சொல்லிக்கூடப் பேசியிருக்கிறார் பெரியார். இந்த வார்த்தைகளின் வழி மட்டும் பார்க்கும் ஒருவரால், காலமெல்லாம் பெரியார் நடத்திய இயக்கமும் வாழ்க்கையும் எப்படி வன்முறைக்கு நேரெதிராக இருந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்? நக்ஸல்பாரி இயக்கத் தாக்கத்தின் தொடர்ச்சியாக, தஞ்சை மாவட்டத்தில் பண்ணையாளர்களுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டத்தை முன்னெடுக்கலாமா என்ற குரல் அமைப்புக்குள் வந்தபோது, "வன்முறை நோக்கம் கடுகளவு மனதில் இருந்தாலும், அவர்கள் எவருக்கும் கழகத்தில் இடம் இல்லை" என்று அப்படிப் பேசியவர்களை உடனே ஏறக்கட்டியவர் பெரியார். மரபைக் கடுமையாகச் சாடியவர் பெரியார். ஆனால், பெரியார் மொழியைப் புரிந்துகொள்ள சித்தர் மரபுதான் நமக்கு நெருக்கமாக இருக்கும் என்று தோன்றுகிறது.




பிராமணியத்தையும் பிராமணர்களையும் பெரியார் எப்படிப் பகுத்தார் என்பதற்கும், கருத்தைக் கருத்தால் எதிர்கொள்வது, கருத்து முரண்பாட்டைத் தனிமனிதர்களிடத்திலிருந்து பிரித்துப் பார்ப்பது எப்படி என்பதற்கும் காந்தி படுகொலை நடந்த சமயத்தில் பெரியார் முன்னெடுத்த செயல்பாடுகளை ஒரு உதாரணமாகச் சொல்ல முடியும். காந்தி இறந்தவுடனேயே பெரியாரிடமிருந்து வந்த அறிக்கையிலேயே 'இங்கு எந்த வன்செயலும் நடந்துவிடக் கூடாது' என்கிற அக்கறையும் பதற்றமும் வெளிப்படலாயிற்று.

*1948 ஜனவரி 31 'விடுதலை' ஏடு சொல்கிறது, "காந்தியார் சுட்டுக்கொல்லப்பட்டார் என்கின்ற சேதியானது எனக்குக் கேட்டதும் சிறிதுகூட நம்ப முடியாததாகவே இருந்தது. இது உண்மை என்ற நிலை ஏற்பட்டதும் மனம் பதறிவிட்டது. இந்தியாவும் பதறியிருக்கும். மதமும் வைதீகமும்தான் இக்கொலை பாதகத்துக்குத் தூண்டுகோலாய் இருந்திருக்கலாம் என்பது என் கருத்து... இப்பெரியாரின் பரிதாபகரமான முடிவின் காரணமாகவாவது நாட்டில் இனி அரசியல் — மதயியல் கருத்து வேற்றுமையும் கலவரங்களும் இல்லாமல் இருக்கும்படி நடந்துகொள்வதே அவரை நாம் மரியாதை செய்வதாகும்."*

அடுத்து, *7.2.1948 'குடிஅரசு' ஏட்டில் எழுதுகிறார், 'காந்தியாரின் இடத்தை நிறைவுசெய்பவர் இந்நாட்டில் எவருமே இல்லை. மக்கள் தங்களது அரசியல், மத வேறுபாடுகளைக் கடந்து சகோதர பாவத்துடன் நடந்துகொள்வதே நாம் காந்தியாருக்குச் செய்யும் மரியாதையாகும். தென்னாட்டு திராவிடர்கள் இயல்பாகவே நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவ வைப்பர்.'*

இதனூடாகவே சென்னை மாகாணத்தின் அன்றைய ஆட்சியாளரான ஓமந்தூராருடனான கலந்தாலோசனையின்படி, சமூக ஒற்றுமையை வலியுறுத்தி அகில இந்திய வானொலியில் உரையாற்றுகிறார். தொடர்ந்து, *22.2.1948* நாளைய 'விடுதலை'யில் விரிவாகவே இந்த விஷயத்தை அணுகுகிறார். *"பார்ப்பான் ஒருவன் சுட்டான் என்ற காரணத்திற்காக அந்தப் பார்ப்பனரைத் திட்டிவிடுவதாலோ அல்லது அந்தப் பார்ப்பன சமூகத்தையே அழித்துவிடுவதாலோ எத்தகைய உருப்படியான பலனும் ஏற்பட்டுவிடாது. நான் கூறுகிறேன்: சுட்டது பார்ப்பான் அல்ல, சுட்டது கைத்துப்பாக்கி. அதற்காகப் பார்ப்பான் மீது கோபித்துக் கொள் வதாயிருந்தால், அந்த அளவுக்கேனும் அந்தப் பார்ப்பானின் கைக்கருவியாக இருந்த அந்தத் துப்பாக்கியின் மீது நாம் கோபித்துக்கொண்டாக வேண்டும்; அதை முதலில் துண்டு துண்டாய் உடைத்துத் தூள்தூளாக்க வேண்டும். காந்தியாரைச் சுட்டுக்கொல்ல உதவியாயிருந்த துப்பாக்கியின் மீது நாம் எவ்வளவு கோபப்படலாமோ, எவ்வளவு பழிக்கலாமோ அந்த அளவுக்குத்தான் அதை உபயோகப்படுத்திய பார்ப்பான் மீதும் நாம் கோபித்துக்கொள்ள முடியும்; பழிக்க முடியும். அவனைப் பழிப்பதாயிருந்தால் அதே அளவுக்கேனும் அவன் பின்னாடி இருந்துகொண்டு, அவனுக்கு ஆதரவாய் இருந்த மற்றவர்களையும் பழிக்க நாம் சித்தமாயிருக்க வேண்டும். அவனும் அந்தத் துப்பாக்கிபோல், அவர்களுக்கு ஒரு கருவியாக அமைந்துவிட்டான்.*




*மதத்தின் பேரால் உள்ள மூடநம்பிக்கைக் கருத்துகளும் சாதியின் பேரால் உள்ள ஆசார அனுஷ்டானங்களும் மற்றும் கடவுள் சாஸ்திரம் இவைகள் பேரால் உள்ள அறியாமையுந்தான் இம்மாதிரிக் காரியத்தைச் செய்யும்படி அவனைச் செய்துவிட்டன. இனியேனும் இப்படிப்பட்ட காரியம் நடவாமல் இருக்க வேண்டும். அவனைத் தூக்கில் போட்டுவிடுவதாலோ அல்லது அவன் சேர்ந்திருந்த ஸ்தாபனத்தைக் கலைத்துவிடுவதாலோ அல்லது அவனுக்கு ஆதரவாயிருந்த அத்தனை பேரையும் அழித்துவிடுவதாலோ இப்படிப்பட்ட காரியம் நின்றுவிடாது. இவை வெறும் தற்காலிக சாந்தியாகத்தான் இருக்க முடியும். இது ஒருபோதும் நிரந்தரமான சாந்தியாகிவிடாது. இப்படிப்பட்ட கொலைகாரர்கள் தோன்ற எது ஆதாரமாயிருந்ததோ அதை அழித்து ஒழிக்க வேண்டும். ஒரு சமுதாயத்தையோ அல்லது ஒரு கூட்டத்தையோ அல்லது ஒரு சாதியையோ அப்படியே அழித்துவிடுவதால் இக்கொடுமை மறைந்துபோகாதுஞ்*

*காந்தியாரைக் கொன்றது ஒரு பார்ப்பான் என்று கூறப்படுகிறது. சித்தானந்தரைக் கொன்றது ஒரு முஸ்லிம் என்று கருதப்படுகிறது. இந்தப் பார்ப்பானோ அல்ல, முஸ்லிமோ தனியாகத் தோன்றி இப்படிப்பட்ட காரியங்களைச் செய்துவிட்டதாக நாம் கூறிவிட முடியாது. இம்மாதிரிச் சம்பவங்கள் எத்தனையோ நடந்திருக்கின்றன என்பதற்குச் சரித்திர ஆதாரங்களே இன்றும் இருந்துவருகின்றன. மதுரை மாநகரில் 8,000 சமணர்கள் சைவத்தை எதிர்த்ததற்காகக் கழுவேற்றப்பட்டார்கள். அவர்களைக் கழுவேற்றியவன் பார்ப்பான் அல்லன். முஸ்லிமும் அல்லன். பின் யார்? அன்றைய மதக் கருத்துப்படி அரசன் அவர்களைக் கழுவேற்ற ஆணையிட்டான். ஆகவே, அவனல்லன் கழுவேற்றியது; அவன் தழுவியிருந்த மதம்தான் அவர்களைக் கழுவேற்றும்படி அவனைத் தூண்டியது. நமது சமுதாயம் இனிமேலும் சாந்தியோடு வாழ வேண்டுமானால், மதம் அற்ற ஒரு புது உலகத்தை நாம் சிருஷ்டிக்க வேண்டும்...*

*திராவிடர் கழகம் கலகத்திற்கோ கொள்ளைக்கோ பலாத்காரத்திற்கோ இருந்துவரவில்லை. அதுவும் திராவிடர் கழகம் எனது கைக்கு வந்தது முதற்கொண்டு, அதில் நான் சேர்ந்து தொண்டாற்றிவந்த நாள் முதற்கொண்டு இந்நாள் வரைக்கும் அதை எந்தவிதமான பலாத்காரத்திற்கோ பழிவாங்குவதற்கோ உபயோகப் படுத்தியவன் அல்லன். அத்தகைய*


பொங்கல் நல்வாழ்த்துக்கள்
தமிழினம் ஒன்றுபட
பொங்குக பொங்கல்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு




செயலுக்கு அனுமதி கொடுத்தவனுமல்லன். திராவிடர் கழகத்தில் பலாத்காரத்திற்கு இடமில்லை. பலாத்கார உணர்ச்சி வேண்டுமென்று கருதிய சிலரையும்கூட திராவிடர் கழகத்தைவிட்டு நீக்கித் தண்டித்திருக்கிறோம். பலாத்காரத்திற்கு மட்டுமல்ல, நடத்தைக் குறைவுக்காகவும், ஒழுக்கக் குறைவுக்காகவும்கூடப் பலரைக் கழகத்தைவிட்டு வெளியேற்றியிருக்கிறோம். கழகத்தின் தலைவன் என்கிற முறையில் அதை மக்களின் அன்பிற்கும் நல்லெண்ணத்திற்கும் பாத்திரமான ஸ்தாபனமாக்கக் கவலையோடு நான் அதை நடத்திவருகிறேன்... எங்கள் கழகம் யாரையும் விரோதிகள் என்று நினைப்பதில்லை. காரணம், இன்று நமக்கு எதிர்ப்பாயுள்ளவர்கள் அனைவரும் நம்மவர்கள் என்பதை நாங்கள் நன்றாய் உணர்ந்திருக்கிறோம்!”

அடுத்து, 11.03.1948 நாளைய ‘விடுதலை’ ஏட்டில் எழுதுகிறார், “காந்தியார் மறைவுக்கு நான் துக்கப்பட்டது, பெரும்பாலானோருக்கு முதலைக் கண்ணீராகவே தோன்றியது. தோன்றினால் தோன்றட்டும். அவர் மறைவுக்கு இனிப்பு வழங்கிய மாபாதகக் கூட்டத்திற்கு வேண்டுமானால் அவர் செத்ததைப் பற்றிக் கவலை இல்லை; மகிழ்ச்சிகூட அடைந்தது. ஆனால், அவர் துர்மரணமடைந்த சேதியைக் கேட்டதும் எனக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. தலைவலி வந்துவிட்டது. என்ன செய்கிறேன் என்பதுகூடப் புரியாமல் நெடுநேரம் 15 சதுரமுள்ள அறையில் இங்கும் அங்கும் உலவிக் கொண்டிருந்தேன். காரணம் என்னவென்றால்,



அவரிடம் அந்தரங்கத்தில் எனக்கு இருந்த பற்றுதல், அவர் கொள்கைகளில், உழைப்பில் இருந்த நலன்கள்; அப்படிப்பட்டவருக்கு இதுதானா கூலி என்ற மனவேதனை ஆகியவைகளே. அவருடைய முறையில் வேண்டுமானால் அபிப்ராய பேதம் பலமாக இருந்தது உண்டு. ஆனால், அவரது முக்கியக் கொள்கையில் அதாவது சத்தியம், அஹிம்சை, அன்பு ஆகியவைகளில் அபிப்ராய பேதம் இல்லையே!”

இந்த நாட்டுக்கு ‘காந்தி நாடு’ என்றும், ‘காந்தி சகாப்தம்’ என்ற பெயரில் நமக்கென ஒரு ஆண்டு முறையை உருவாக்க வேண்டும் என்றும் கோரியவர் பெரியார். காந்தி சிலைகளைத் தெருவில் போட்டு உடைக்க வேண்டும் என்று பேசியவரும் பெரியார். பெரியாரை எப்படிப் புரிந்துகொள்வது? சிக்கல்தான்.

பல்வேறு தருணங்களில் பிராமணர்களுடனான உறவையும் பிணக்கையும் பற்றிப் பெரியார் பேசியிருக்கிறார் என்றாலும், ஒரு நிகழ்ச்சியில் அவர் பேசிய உரையையும் இன்னொரு சந்தர்ப்பத்தில் அவர் வெளியிட்ட அறிக்கையையும் இங்கே குறிப்பிடலாம். 1953—ல் ஒரு நிகழ்ச்சிக்கு அவரை அழைக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அமைப்புடன் தொடர்புடைய பிராமணர்கள் சிலர் இதை ஆட்சேபிக்கின்றனர். இதற்குப் பதில் அளிக்கும் வகையில் அவர் பேசியது 8.1.1953 ‘விடுதலை’யில் வெளியாகியிருக்கிறது.

“யாரோ சில பிராமணர்கள், ‘பெரியார் ராமசாமி நாயக்கர், பிராமணர்கள் இந்த நாட்டில் வாழவே கூடாது என்று கூறிவருகிறார். இவரை நீங்கள் எப்படி இங்கே கூப்பிட்டீர்கள் என்பதாகக் கேட்டார்கள்’ என்று ஒருவர் இங்கு சொன்னார். பிராமணர்கள் இந்த நாட்டில் வாழக் கூடாது என்றோ, இருக்கக் கூடாது என்றோ திராவிடர்

கழகம் வேலை செய்யவில்லை. திராவிடர் கழகத்தின் திட்டமும் அதுவல்ல. திராவிடர் கழகத்தினுடைய திட்டமெல்லாம் திராவிடர் கழகமும் நானும் சொல்வதெல்லாம், விரும்புவது எல்லாம் நாங்களும் கொஞ்சம் வாழ வேண்டும் என்பதுதான். இந்த நாட்டிலே நாங்களும் கொஞ்சம் மனிதத்தன்மையோடு சமத்துவமாக இருக்க வேண்டும் என்பதுதான். இது பிராமணர்கள் இங்கு வாழக் கூடாது என்று சொன்னதாகவோ, இந்த நாட்டைவிட்டு அவர்கள் போய்விட வேண்டுமென்று சொன்னதாகவோ அர்த்தம் ஆகாது. அவர்களைப் போகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அது ஆகிற காரியம் என்று நான் கருதவுமில்லை. தவிரவும் பிராமணர்களுக்கும் நமக்கும் பிரமாதமான பேதம் ஒன்றும் இல்லை. அவர்கள் அனுசரிக்கிற சில பழக்கவழக்கங்களையும், முறைகளையும்தான் நாங்கள் எதிர்க்கிறோம். இது அவர்கள் மனம் வைத்தால் மாற்றிக்கொள்வது பிரமாதமான காரியம் இல்லை.

நமக்கும் அவர்களுக்கும் என்ன பேதம்? இப்போது அவர்களும், நாமும் ஒரு குழாயிலே தண்ணீர் பிடிக்கிறோம். ஒரு தெருவிலே நடக்கிறோம். ஒரு தொழிலையே இருவரும் செய்கிறோம். காலமும் பெருத்த மாறுதல் அடைந்துவிட்டது. மக்களும் எவ்வளவோ முன்னேற்றமடைந்துவிட்டார்கள். விஞ்ஞானம் பெருக்கம் அடைந்துவிட்டது. இந்த நிலையில், நமக்குள் மனித தர்மத்தில் பேதம் இருப்பானேன்? ஆகவே, உள்ள பேதங்கள் மாறி, நாம் ஒருவருக்கொருவர் சமமாகவும் சகோதர உரிமையுடனும் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் பாடுபடுகிறேன். நம்மிடையில் பேத உணர்ச்சி வளரக் கூடாது என்பதில் எனக்குக் கவலை உண்டு. எனவே, முயற்சியில் பலாத்காரம் சிறிதும் இருக்கக் கூடாது என்பதிலும் எனக்குக் கவலை உண்டு. காலம் எப்போதுமே ஒன்றுபோல இருக்க முடியாது.

நம் இரு தரப்பிலும் பல அறிஞர்களும், பொறுமைசாலிகளும் இருப்பதனாலேயே நிலைமை கசப்புக்கு இடமில்லாமல் இருந்துவருகிறது. இப்படியே என்றும் இருக்கும் என்று நினைக்க முடியாது. திராவிடர் கழகப் பின்சந்ததிகளும், பிராமணர்களின் பின்சந்ததிகளும் இந்தப்படியே நடந்துகொள்வார்கள் என்றும் கூற முடியாது. ஆதலால், அதிருப்திகளுக்குக் காரணமானவைகளை மாற்றிக்கொள்வது இருவருக்கும் நலம். அதை நண்பர் ஸ்ரீனிவாசராகவன் அவர்களும் நன்றாய் விளங்கியிருக்கிறார். அதாவது, பிராமணர்களும் காலதேச வர்த்தமானத்துக்குத் தக்கபடி தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று சொன்னார். அதுதான் இப்போது இருதரப்பினரும் கவனிக்க வேண்டியது."

அடுத்து, 1962 'விடுதலை'யில் பெரியார் கையொப்பமிட்ட அறிக்கை 'பார்ப்பனத் தோழர்களுக்கு!' என்ற தலைப்பிட்ட அறிக்கை:

"பார்ப்பனத் தோழர்களே! நான் மனிதத் தன்மையில் பார்ப்பனர்களுக்கு எதிரி அல்லன். தமிழ்நாட்டிலேயே அநேக பார்ப்பனப் பிரமுகர்கள் — பெரியோர்கள் ஆகியோர்களுக்கு அன்பனாகவும், மதிப்புக்குரியவனாகவும் நண்பனாகவும்கூட இருந்து வருகிறேன். சிலர் என்னிடத்தில் அதிக நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள்.

சமுதாயத்துறையில் பார்ப்பனர்கள் அனுஷ்டிக்கிற உயர்வு, அவர்கள் அனுபவிக்கிற அளவுக்கு மேற்பட்ட விகிதம் — ஆகியவைகளில்தான் எனக்கு வெறுப்பு இருக்கிறது. இது பார்ப்பனர்களிடம் மாத்திரமல்ல, இந்த நிலையில் உள்ள எல்லோரிடத்திலுமே நான் வெறுப்புக் கொள்கிறேன். இந்நிலை என்னிடத்தில் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், ஒரு தாய் வயிற்றில் பிறந்த எல்லா மக்களுக்கும் சம அனுபவம் இருக்க வேண்டும் என்று கருதி, ஒன்றுக்கொன்று குறைவு, அதிகம் இல்லாமல் பார்த்துக்கொள்வது எப்படி ஒரு தாய்க்கு இயற்கைக் குணமாக இருக்குமோ, அது போலத்தான் எனக்கும் தோன்றுகிறது. மற்றும், அந்தத் தாய் தனது மக்களில் உடல் நிலையில் இளைத்துப்போய், வலிவுக்குறைவாய் இருக்கிற மகனுக்கு, மற்ற குழந்தைகளுக்கு அளிக்கிற போஷணையைவிட எப்படி அதிகமான போஷணையைக் கொடுத்து மற்ற குழந்தைகளோடு சரிசமானமுள்ள குழந்தையாக ஆக்க வேண்டுமென்று பாடுபடுவாளோ, அது போலத்தான் நான் மற்ற வலுக்குறைவான பின்தங்கிய மக்களிடம் அனுதாபம் காட்டுகிறேன். இந்த அளவுதான் நான் பார்ப்பனர்களிடமும், மற்ற வகுப்புகளிடமும் காட்டிக்கொள்ளும் உணர்ச்சி ஆகும்!"




பெரியாரைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றால், பெரியாரின் ஆதரவாளர்கள், எதிர்ப்பாளர்கள் இருதரப்புமே அவருடைய வார்த்தைகளைத் தாண்டி அவருக்குள் நுழைய வேண்டும். பெரியாரின் வலியை உணர்தல் வழியாகவே அது சாத்தியம். காந்தி — பெரியார் இருவரையும் இணைக்கும் புள்ளி சுயவதை. தான் கனவு கண்ட சமத்துவ சமூகத்தில் எல்லாத் தரப்புகளையும் உள்ளடக்குவதையும், அதற்கான வழிமுறையாக வன்முறையை வெளித்தள்ளிய மாற்றுத்தரப்புடனான தொடர் உரையாடலையும் தார்மிக நெறியாக்கியவர் காந்தி. பெரியாரின் தார்மிகமும் அதுவென்றே நினைக்கிறேன்.

# வீழுமா

### நெகிழியின் வீழ்ச்சி; மனிதகுல வளர்ச்சி!

தேவையே கண்டுபிடிப்பின் தாய் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் அமெரிக்காவில் ஒரு நிகழ்வு. பில்லியர்ட்ஸ் விளையாட்டிற்குத் தேவையான சிறு உருண்டை வடிவிலான பந்துகள் யானைத் தந்தங்களில் செய்யப்பட்டு வந்தது.

கண்டுபிடிப்பால் யானைகள், ஆமைகள், ஏனைய மிருகங்கள் காப்பாற்றப்பட்டன. இயற்கையை அழிக்காமல் செயற்கையான ஒரு புதிய பொருள் மனிதனின் தேவைகளுக்கு ஈடுகொடுத்ததால் கண்டுபிடித்தவரை புகழ்ந்து போற்றினார்கள்.

1907—இல் லியோ பேக்லேண்ட், அசல் தந்தம் போன்று பிளாஸ்டிக்கை மெருகு ஏற்றினார்.




நாளடைவில் பில்லியர்ட்ஸ் விளையாடுவோர் அதிகமாகவே, யானைகளை வேட்டையாடும் பழக்கமும் அதிகரித்தது. நியூயார்க் நிறுவனம் ஒன்று 1869—இல் தந்தத்திற்கு மாற்றாக ஒரு பொருளை கண்டுபிடிப்பவருக்கு பத்தாயிரம் டாலர் பரிசு தருவதாக அறிவித்தது.

ஜான் வெஸ்லி ஹையட் என்பவர், பிளாஸ்டிக் என்ற பொருளை செயற்கையாகக் கண்டுபிடித்தார். இந்த பிளாஸ்டிக், மரம், உலோகம், தந்தம், ஆமை ஓடு, மிருகங்களின் கொம்பு, சணல் போன்ற பொருட்களுக்கு மாற்றாக அமைந்தது.




பில்லியர்ட்ஸ் விளையாட்டில் பிளாஸ்டிக் நுழைந்தது. இந்த புதிய தீப்பற்ற இயலாத இந்த செயற்கை பிசின் மூலம் மின்கம்பிகளுக்கு பிளாஸ்டிக் உறையை அறிமுகம் செய்தார். இந்த கண்டுபிடிப்பு அமெரிக்காவை விரைவாக மின் மயமாக்க உதவியது.

நீண்ட காலம் உழைக்க வல்லது. வெப்பத்தைத் தாங்கக் கூடியது என்பதால் கட்டுமான பணிகளுக்கும், மருத்துவ உபகரணங்களுக்கும், சாலை வாகனங்கள், தொடர் வண்டிகள், கப்பல், விமானம் போன்ற ஊர்திகளுக்கும் பிளாஸ்டிக் பெரும் பயனைத் தந்தது. பிளாஸ்டிக் தொழில் அசுர வளர்ச்சி கண்டது. இரும்பு, மரம், துணி, சணல் போன்ற இயற்கையானவற்றை அழித்து எங்கும் பிளாஸ்டிக் குடி கொண்டது. எளிதில் உடையாத, காற்று புகவியலாத பொருள் என்பதால் இது மனித குலத்திற்கு மாபெரும் வரமாக கருதப்பட்டது. இரண்டாவது உலகப் போரில் அமெரிக்கா வெற்றி பெறுவதற்கு பிளாஸ்டிக் துணை நின்றது. வீரர்களின் உடல் கவசம், தலைக்

# நெகிழி

டி.எஸ். தியாகராசன்

கவசம், விமானத்தின் சன்னல்கள் பிளாஸ்டிக்கில் தயாரிக்கப்பட்டன.

வாலஸ் காரோத்தர்ஸ் 1935—இல் நைலானைக் கண்டுபிடித்தார். இது பாராசூட் செய்ய உதவியது. அமெரிக்காவில் பிளாஸ்டிக் உற்பத்தி 300 மடங்கு உயர்ந்தது. உலகப் போர் முடிந்தாலும் பிளாஸ்டிக்கின் உற்பத்தி குறையவில்லை.

போர் முடிந்த பின்னரும், எல்லாரும் ஏற்றுக்





கொள்ளத் தக்க விதத்தில் எல்லா இடங்களிலும், மறுபடியும் பிளாஸ்டிக் உற்பத்தி அதிகரித்துள்ளது என்று டைம் பத்திரிகை தலையங்கம் எழுதியது.

அமெரிக்காவில் பிளாஸ்டிக் பயன்பாடு பெருகியது. இதனால் அமெரிக்கர்கள் பிளாஸ்டிக் யுகமாக இதனை கொண்டாடி மகிழ்ந்தனர்.

1960—இல் முதன் முதலாக பிளாஸ்டிக் கழிவுகள் கடலில் மிதப்பதை மக்கள் கண்டனர். இதனால், சுற்றுச் சூழல் கெடுவதை விஞ்ஞானிகள் உணரத் தொடங்கினர். பிளாஸ்டிக் ரசாயனங்களால் இயற்கைக்கு தீங்கு நேருவதைக் கண்டார்கள்.

1969—இல் கலிபோர்னியா கடற்கரை எங்கும் எண்ணெய்ப் படலம் காணப்பட்டது, விஞ்ஞானிகளை கவலை கொள்ளச் செய்தது. 1968—இல் திரைப்படம் ஒன்றின் மூலம் பிளாஸ்டிக்கின் தீமை குறித்து மக்களுக்கு விளக்கப்பட்டது. கயஹோகா என்ற ஆறு பிளாஸ்டிக் கழிவுகளால் மாசடைந்தது. ஒகியோவில் ஏற்பட்ட தீ விபத்து, அமெரிக்காவில் பிளாஸ்டிக்கின் பயன்பாட்டை கொஞ்சம், கொஞ்சமாக விலக்கியது. பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் கழிவுப் பொருள்களை




மறுசுழற்சி செய்வதன் மூலம் தீமையை அகற்றமுன் வந்தனர். பெரும்பான்மை அமெரிக்கர்கள் ரிச்சர்ட் கார்சன் 1962—இல் ஒரு நூலில் பிளாஸ்டிக் ரசாயனத்தின் அபாயம் வளர்ந்து வருகிறது என்று குறிப்பிட்டதை நினைவுகூர்ந்தனர்.

பிளாஸ்டிக்கின் தீமை குறித்து விழிப்புணர்வு ஏற்பட்டது. முதலில் சிறு கடைகளில் புழங்கும் பிளாஸ்டிக் பைகளுக்கு தடை விதிக்கப்பட்டது. ஆனாலும் பிளாஸ்டிக்கின் தீமை மனிதர்களின் உடல்



நலத்தையும் பதம் பார்க்கத் தொடங்கியது. உடலின் ஹார்மோன் சுரப்பியைத் தாக்கத் தொடங்கியது. இதனால் புதுப்புது நோய்களும், புற்று நோயும் பரவத் தொடங்கியதால் மக்கள் பீதி அடைந்தனர். செயற்கை கண்டுபிடிப்பு பொருள்களை விலக்கி, இயற்கையான மரபு சார்ந்த அம்சங்களில் பற்றுக் கொள்ள ஆரம்பித்தனர்.

பிளாஸ்டிக் கழிவுகளை சாலைகள் அமைக்கவும், ஆலைகளின் எரிபொருளுக்கு துணையாகவும் உபயோகிக்கத் தொடங்கினர். இதனால், பத்து சதவீத பிளாஸ்டிக் கழிவு மறு சுழற்சி மூலம் பயன்பாட்டிற்கு வந்தது. மீதி, நஞ்சாகவே நிலைத்து நிற்கிறது. அமெரிக்க மக்களின் அச்சத்திற்கு இலக்கான பிளாஸ்டிக், இதே கால கட்டத்தில் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் ஊடுருவத் தொடங்கியது.

1960—70—களில் தொடங்கிய பிளாஸ்டிக்கின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்தே வந்தது. அண்மையில் இந்தோனேஷியா நாட்டில் கபோட்டா தீவில் செத்து கரை ஒதுங்கிய 9.5 மீட்டர் நீளம் உள்ள திமிங்கலத்தின் வயிற்றை அறுத்துப் பார்த்தபோது 115 பிளாஸ்டிக் குவளைகள், 25 பிளாஸ்டிக் பைகள், இரண்டு பிளாஸ்டிக் மது குப்பிகள், நான்கு பிளாஸ்டிக் பாட்டில்கள், ஆயிரம் மெல்லிய பிளாஸ்டிக் பொருள்கள் இருந்ததைக் கண்டு அதிர்ச்சியில் ஆழ்ந்தனர்.


இந்த பிளாஸ்டிக் பொருள்களை இரையாக உட்கொண்டதால்தான் அது இறந்தது என்பதை கண்டார்கள். இந்தோனேஷியா கடலில் மட்டும் ஆண்டுதோறும் 1.29 மில்லியன் மெட்ரிக் டன் எடையுள்ள பிளாஸ்டிக் கழிவுகள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். நம் நாட்டில் ஆண்டுக்கு 40 ஆயிரம் டன் பிளாஸ்டிக் கழிவுகள் சேருகின்றன. அண்மைக் காலங்களில் இது 160 சதவீதம் அதிகரித்துள்ளது. அமெரிக்காவில்கூட இந்த அளவு இல்லை.

இந்தியாவில் ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் பிளாஸ்டிக் வணிகம் நடைபெறுகிறது. நாடெங்கிலும் ஏறக்குறைய 18 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை உற்பத்தியாளர்கள் இருக்கிறார்கள். பிளாஸ்டிக் தொடர்பான தொழில்களில் 40 லட்சத்திற்கும் அதிகமானோர் ஈடுபட்டு உள்ளனர். தில்லிக்கு அடுத்தபடியாக சிங்காரச் சென்னையும், கொல்கத்தாவும்தான் அதிக அளவு பிளாஸ்டிக் கழிவுகளை உற்பத்தி செய்கின்றன.

மண்ணில் போடப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் பலநூறு ஆண்டுகள் ஆனாலும் மக்குவது இல்லை.

அவை எரியூட்டப்படுவதால் ஏற்படும் கொடிய நச்சுப் புகையால் மனிதர்களின் சுவாச மண்டலமே பாழாகி நுரையீரல் தொடர்பான பிணிகளுக்கு அவர்கள் ஆளாகின்றனர். அண்மையில் மத்திய சுகாதாரத்துறை, பெண்கள் நல வாரியம் மற்றும் சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சேர்ந்து நடத்திய ஆய்வின் முடிவு நம்மை அச்சத்தில் ஆழ்த்துகிறது.

கடந்த 2017—ஆம் ஆண்டில் மட்டும் உத்தரப் பிரதேசத்தில் 2,60,028 பேரும், மகாராஷ்டிரத்தில் 1,08,038 பேரும், பிகார் மாநிலத்தில் 96,967 பேரும் நச்சுக் காற்றை தொடர்ந்து சுவாசித்ததால் நுரையீரல் பாதிக்கப்பட்டு இறந்து போனார்கள் என்கிறது அந்த ஆய்வு முடிவு.




இந்த ஆய்வு முடிவின்படி, கோவா, கேரளம் போன்ற மாநிலங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர் என்பதும் தெரிய வந்தது. பிளாஸ்டிக் கழிவுப் பொருள்களை எரிப்பதால் ஏற்படும் வெண்புகை, வளி மண்டலத்தை மட்டுமல்லாது நிலத்தையும் நீரையும்கூட நஞ்சாக்குகிறது.

இந்த மாசடைந்த காற்றை சுவாசிக்கும் மக்களின் உறுப்புகள் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக, சுவாசக் குழல், உணவு ஜீரண மண்டலம், சிறு குடல், பெருங்குடல் போன்ற இடங்களில் புற்று நோய் கிருமிகள் உண்டாகும் வாய்ப்புகள் அதிகம்.

2017—ஆம் ஆண்டில் மட்டும் தலைநகர் தில்லியில் 12,322 பேர் சுவாசக் கோளாறுகளால் உயிரிழந்தனர். இந்தியாவில் 77 சதவீத மக்கள் இந்த நச்சுக் காற்றைத்தான் சுவாசிக்கின்றனர். ஒரு கோடி மக்களில் 12.4 லட்சம் பேர் மாசடைந்த காற்றை சுவாசித்தால்தான் கடந்த 17 ஆண்டுகளில் இறந்தார்கள் என்ற புள்ளிவிவரம் நம்மை பயமுறுத்துகிறது.




மத்திய — மாநில அரசுகள் பிளாஸ்டிக் உபயோகத்தை தடை செய்ய விரும்பினாலும், பல்வேறு காரணங்களால் அதிரடியாக எதையும் செய்ய முடிவதில்லை. மேலை நாடுகள், நமது விஞ்ஞான மோகத்தையும், பிளாஸ்டிக் ஆர்வத்தையும் கண்டு வருந்துகின்றன.

விஞ்ஞானத்தில் முற்றிய நாடுகள் எல்லாம், இயற்கையான சூழலை உண்டாக்க முயன்று வரும் வேளையில் நாம் செயற்கைக் கருவூட்டலில் தொடங்கி, துரித உணவை உண்டு, கொடிய நோய்களை வலிந்து ஏற்று கிடைத்தற்குரிய மானுடப் பிறவியை துயரக் கடலில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறோம்.

2019 ஜனவரி முதல் நாளிலிருந்து பிளாஸ்டிக் பொருள்களை தடை செய்து தமிழக அரசு சட்டம் இயற்றியுள்ளது வரவேற்கத்தக்கது.

பிளாஸ்டிக் எனப்படும் நெகிழியின் வீழ்ச்சியே மனிதகுல வளர்ச்சி என்பதை உணருவோம்.

# கண்ணில் தெரியும் கோட்டை

## கொற்றவன்

நிரம்பி வழியுமளவுக்கு
நிரப்பி வைக்கப்பட்டிருக்கும்
கிண்ணத்தை
சிந்தாமல் சிதறாமல் ஏந்தியபடி
சிலாகித்து நடக்கும் நடையை
பயின்றது அந்த இடத்தில்தான்!

எத்தனை ஆர்வம்
எத்தனை மகிழ்ச்சி
எத்தனை கண்ணீர்
எத்தனையோ இன்னும் இன்னும்
திகட்டாது இனிக்கும் வேர்ப்பலாவென
கிடக்கிறது அந்த இடத்தில்!

களிப்பூட்டும் காதலும்
கனன்றிடும் வீரமும்
கனிந்திடும் ஈரமுமென
கனவுகளை மெருகேற்றி
கனற்பொறி இலட்சியமாக்கி
கரங்களில் ஆயுதமாக்கி
தந்திட்ட அந்த நாட்கள் மறைந்து
சம்மட்டி அடிகள் கேட்டிடாத
மூடப்பட்ட கொல்லுப்பட்டைறையென
கிடக்கிறது அந்த இடம்!

ஒரு ரூபாய்க்கும்
இரண்டு ரூபாய்க்கும்
கறுப்பு வெள்ளைக் காட்சிகளை
வெண்திரையில் காட்டிவிட்டுப் பின்
நாள்தோறும் கட்டணமில்லாமல்
வண்ண வண்ணக் காட்சிகளை
மனத்திரையில் ஓடவிடும்
மாயத்திரை கொண்ட
கனவுக் கோட்டையான
அந்தத் திரையரங்கம்
இருந்தது அந்த இடத்தில்தான்!

அந்த இடத்தைக் கடக்கும்போதெல்லாம்
கண்ணுக்குத் தெரியாத
கந்தர்வலோகக் கோட்டை இருக்கும்
இடமாகவே தெரிகிறது
அணில் கொய்துவிட்டுப் போன
கனியெனக் கிடக்கும்
ஒரு மனதில்!...

*(காரைக்கால் நகரின் பழைய 'ரெக்ஸ்' திரையரங்கம் பற்றிய கவிதை)*


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
HAPPY
NEW
YEAR !
2019

# நீ முதல் நான் வரை

வெற்றி பெற
வாழ்த்துகிறேன்

வெளிப்படையாய்
கைகுலுக்குகிறேன்

வெற்றிபெற்று வருகையிலோ
உள்ளுக்குள் பொருமுகிறேன்
உதட்டளவில் பாராட்டுகிறேன்

என்னிலும் ஒருபடி
ஏறிவிடாதபடி
எச்சரிக்கையாய் இருக்கிறேன்

முட்டி மோதி
மூச்சுத் திணறுகையில்
குழிபறிக்க வழிபார்க்கிறேன்

முயன்று முன்செல்கையில்
குறிவைக்க வெறி கொள்கிறேன்

எல்லாரையும் விழுங்கி ஏப்பம் விடும்
இந்த மனித நாடகத்தில்
என் பாத்திரம் எம்மாத்திரம் ?

அதைமட்டும் ஏனோ
அவ்வப்போது மறந்துவிடுகிறேன்.

**சகாரா**


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
2019
Happy New Year
VARSHA™

சிறுகதை

# நாளைக்கும் வரும் கிளிகள்

## பிரபஞ்சன்

**வீ**ட்டைக் கண்டுபிடிப்பது அப்படி ஒன்றும் சிரமமானதாக இல்லை. அவர் பெயரைச் சொன்னால், சின்ன குழந்தையும் வழிகாட்டும் என்று ஆசிரியர் சொன்னது பொய் இல்லை. பஸ்ஸைவிட்டு இறங்கி அவன் விழித்துக்கொண்டு நிற்கும்போது, ரோட்டோரம் இளநீர் விற்கும் அம்மாள் அவனை அழைத்து, மாமாவைப் பார்க்க வந்தீங்களா என்று கேட்டு, முகவரியையும் சொன்னார். மாமாவின் வீடு, ஊருக்கு வெளியே, இன்னும் காங்கிரீட் காடாகிவிடாத, மரங்கள் மற்றும் மைதானம் காணப்படும் பகுதியில் ஒரு மாந்தோப்புக்குள் இருந்தது. அத்தனை காலையிலும் நிறைய கார்கள் தோப்புக்குள் நிறைந்து இருந்தன. ஆசிரியர், மாமாவைப் பேட்டி காணச் சொன்னபோது, அவன் தொலைபேசியில்

அவரைத் தொடர்புகொண்டு அவருக் குச் சௌகர்யமான நேரம் கேட்டான். உடனே மாமா சொன்னார்,

"காலையில் எத்தனை மணிக்குச் சாப்பிடுவீர்?"

"எட்டு, ஒன்பதுக்குள் சார்."

"அந்த நேரம், நாம் சேர்ந்து சாப்பிடுவோம், சரியா?"

அந்தக் குரல் ஒரு நண்பரின் குரலாக இருந்தது. பிரமுகர்கள் குரல்போல இல்லை. பத்திரிகைக்காகப் பல பிரமுகர்களிடம் அவன் பேசி இருக்கிறான். அவர்களின் குரலில், ஒரு வெட்டுக் கத்தியின் முனை தெரியும். மாமாவோ, தொலைபேசியில் கை குலுக்கினார்.




வரவேற்பு அறையில் அவனை அமரவைத்துச் சென்றார் உதவியாளர். அவனுக்கு முன் பத்து இருபது பேர் இருந்தார்கள். பட்டு வேட்டி கட்டிய இரண்டு பேர், பட்டுப் புடைவை கட்டிய நிறையப் பெண்கள் இருந்தார்கள். ஏதோ பிரச்னைகளைச் சுமந்துகொண்டு, அந்தக் கணத்தில் ஆழ்ந்திருந்தார்போல, அவர்களின் அசாதா ரண அமைதி, சூழ்நிலைக்கு ஓர் அழுத்த வர்ணம் தந்திருந்தது. ஒரு புகழ்பெற்ற டாக்டரின் வரவேற்பு அறைக்குள் குழுமி இருக்கும் தீவிர நோயாளிகளின் வாசனையால் அந்த அறை நிரம்பி இருந்ததைப் போல அவன் உணர்ந்தான். எத்தனை வகையான வியாதிகள்? எவ்வளவு வியாதியஸ்தர்கள்? அவர்கள், திறக்கப்பட்டும் மூடப்பட்டும் இயங்கிய அறைக் கதவையே பார்த்தபடியே இருந்தார்கள். அந்த அறைக்குள்தான் மாமா இருக்கிறாராக்கும்.

நாலைந்து பேர்கள் கொத்தாக அறைக்குள் சென்றார்கள். அவன் மணியைப் பார்த்தான். எட்டாக இன்னும் இரண்டு நிமிஷங்கள் இருந்தன. சற்றுப் பொறுத்து அவன் வந்திருக்கலாம். அத்தனைக் கடமை உணர்வு தனக்குத் தேவைதானா என்று தனக்குள் விசாரித்துக்கொண்டான். எட்டரை மணிக்கு அறைக்குள் அழைக்கப்பட்டான். இரண்டு சாரிகளிலும் போடப்பட்ட சோபாக்களுக்கு எதிரில் ஒரு பிரம்பு நாற்காலியில் மாமா அமர்ந்திருந்தார். மாமா இரண்டு கைகளையும் முகத்துக்கு நேராகவைத்து அவனை வணங்கினார்.

மாமா என்பது வெள்ளை கதர் வேட்டியும் வெள்ளைச் சட்டையும். சுமார் அறுபது வயது. முகம் பளிச்சென்று புன்னகையும் திருப்தியும் கூடியதாக, பசியறியாதது என்று சொல்லும்படியாக இருந்தது. ரிட்டையர்டு ஆன, அடிமைச் சிரிப்பு இல்லாத மேல்நிலை குமாஸ்தா போலவும், திமிர் இல்லாத பரம்பரை மிராசுதாரர் போலவும் காணப்பட்டார். அறைகள் மனிதர்களை அடையாளம் காட்டும்தானே? அந்தப் பெரிய அறையில் ஆறு பேர் அமரும் இருக்கைகள் மட்டுமாக, நிறையக் காலி வெளிகள் இருந்தன. ஏதோ ஒரு கற்பூரமோ அல்லது மணப்பொருளோ, இந்திய வாசனை ஒன்று கமழ்ந்துகொண்டு இருந்தது. தங்க முலாம் பூசப்பட்ட சாமியார் மாதிரியான ஒருவரின் சிலை மட்டும் இருந்தது. வேறு எந்தச் சாமிப் படமும் இல்லை.



"ஒன்றும் சிரமம் இல்லையேஞ் வீடு வந்து சேரஞ்"

"இல்லை. எல்லோருக்கும் உங்களைத் தெரிகிறது."

"என்னைத் தவிர" என்று புன்னகைத்தார்.

அவன் உஷாரானான். எல்லோரையும்போல அல்ல அவர் என்று தோன்றியது.

"எங்கே உங்கள் வாசம்?"

அவன் ராணிப்பேட்டை என்றான்.

"அப்படியென்றால், ஏழு மணிக்குப் புறப்பட்டு இருப்பீர். பசிக்குமே சாப்பிட்டுக்கொண்டே பேசலாம்."

பக்கத்தில் உள்ள அறைக்கு அழைத்துச் சென்றார். உணவு மேசை நாற்காலிகள் மட்டும். மூன்று இலைகள் போடப்பட்டு இருந்தன. ஒரு மத்திய வயசு அம்மாள் வந்து பரிமாறினார். அவர்களுக்கு எதிரே, தனியாகப் போடப்பட்ட இலைக்கு இட்லி, வடை, சட்னி போட்டுவிட்டு, அப்புறம், அவர்கள் இலையில் பரிமாறினார்.

"உங்கள் பெயரைத் தெரிந்துகொள்ளவில்லையே"

"நான் மூர்த்தி."

"நான் சந்துரு. சந்திரசேகரன். ஜனங்க மாமான்னு கூப்பிடறாங்க. ஏன்னு தெரியலை. தாயின் சகோதரருக்கு மாமான்னுதானே பேர். சரின்னு நான் ஏத்துக்கிட்டேன். உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை உண்டா?"




"இல்லை."

"நல்லது. எனக்கு உண்டு. நாற்பது வயசுக்கு மேல ஏற்பட்ட நம்பிக்கை அது. வெளியே ஒரு சிலையைப் பார்த்திருப்பீரே. அவர் என் குரு. அவர்தான் நம்பிக்கை ஏற்படுத்தினார். எதையாவது பற்றிக்கொள்ள வேண்டி இருக்கே. வீடு கண்டுபிடிக்கச் சிரமம் ஒண்ணும் இல்லையே?"

"சிரமமே இல்ல சார். குழந்தைகளுக்கும்கூட உங்களைத் தெரிகிறது."

"எனக்குத்தான் தெரியவில்லை."

மாமா சிரித்தார்.

மூர்த்தி, விழிப்புக்கு உள்ளானான். ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய இடம்.


சம்பளம் தருகிற முதலாளி நினைவுக்குள் வந்தார். அவன் தொழில் கடையை விரிக்கத் தொடங்கினான்.

"நீங்கள் எப்படி இந்த" — பொருத்தமான வார்த்தையைத் தேடினான் மூர்த்தி.

"துறைக்கு வந்தீர்கள்னு கேட்கிறீர் இல்லையா? தொழில்னு கேட்கத்தான் தோணித்து இல்லையா. இது எனக்குத் தொழில் இல்லை."

மாமா சற்று நேரம், அந்த மூன்றாவது, யாரும்

சாப்பிடாத இலையைப் பார்த்தார். பிறகு சொன்னார், "என் மனைவி அவருடைய 26—வது வயதில் காலமானார். என்னுடைய 30—வது வயதில். ஏதோ ஒரு நோய். கடவுளுக்கு ஒரு காரணம், அழைத்துக்கொள்ள வேண்டி இருக்கேஞ் அவர் வலியால் அவஸ்தைப்படும்போது நான் பக்கத்தில் இருந்து ஆறுதல் சொன்னேன். நோய் குணமாயிடும்னு நம்பிக்கை ஊட்டுவேன்.



நம்பிக்கைதான். அப்போல்லாம் அவர் முகத்தில் தோன்றின வெளிச்சம் இருக்கேஞ் அப்பப்பா! அப்போ எனக்குத் தோன்றியது. துன்பத்துக்கு உள்ளாகிற மனுஷங்களுக்குத் தேவை ஒரு வார்த்தை. ஒரு வார்த்தைதான் சார். எந்த மருந்தைக் காட்டிலும் பெரிய மருந்து அது. எல்லாம் சரியாயிடும். நல்லாயிடும். பிரச்னையே இல்லை. இதுகூட மனிதர்களுக்குக் கிடைக்கிறது இல்லை. அதைச் செய்வேன்னு, அதுதான் என் வாழ்க்கைனு முடிவு எடுத்தேன். இப்பவும் அதைத்தான் செய்துக்கிட்டு இருக்கேன்."



அவர், உண்ணப்படாத இலையைப் பார்த்துக்கொண்டு இருந்தார். பிறகு சொன்னார், "என் அக்காள் மகள். ப்ளஸ் டூ படித்தாள். அவளைச் சராசரி என்று அவள் அம்மாவேசொல்வாள். முட்டாள் ஆசிரியர்கள், அவளைக் கடைசி பெஞ்ச்னு சொன்னார்கள். நான் மட்டும் அவளை நம்பினேன். அவள் படிப்பா. நல்லாப் படிப்பா. ரொம்ப நல்ல மார்க் வாங்குவேனு சொன்னேன். என்ன மாயம்னு தெரியலை. நல்ல மார்க் வாங்கி, பாஸ் பண்ணினாள்.எனக்கு இந்தப் படிப்பு மேல நம்பிக்கை இல்லை. ஆனால், அவளுக்கு அதைச் சொல்ல முடியுமோ? முட்டாள் டாக்டர்கள், இந்த நோய் குணமா காதுனு சொல்வார்கள்.

நான் சொல்றது இல்லை. சொல்லக் கூடாது. கேன்சர், ஹெச்.ஐ.வி. ஏதோ ஒரு எழவு. வர வழி இருக்கும்னா, போகவும் வழி இருக்கும்தானே? வெளியில ஒரு பேஷன்ட் இருக்கார். அவரை நான் குணப்படுத்திட்டு இருக்கேன். உங்களுக்குத் தெரியுமா? நான் எம்.டி. படிச்ச டாக்டர். 20 வருஷ அனுபவம் எனக்கு உண்டு."

"ஆனா, மருந்து கொடுக்கிறது இல்லை."

"வேறு மருந்து கொடுக்கிறேன். நோயாளிகள் சாய்ந்துகொள்ள தோள் தேடுபவர்கள், அன்புக்கு அன்பாகச் சொல்லப்படும் ஒரு வார்த்தைக்கு ஏங்குகிறார்கள். டாக்டர்கள் நோய்க்கு எதிராக வேறு ஒரு நோயை உடம்புக்குள் ஏற்றுகிறார்கள். நான் ஆத்மாவுக்குள் எதையாவது கொண்டு செல்ல விரும்புகிறேன்."

"ஆத்மா மருத்துவம்?"

"ஆம், நாம் எல்லோரும் நோயாளிகள் சார். எந்த மருந்தாலும் குணப்படுத்த முடியாத நோயாளிகள். படுக்கையிலே சாய்க்கப்பட்டால் ஒழிய, நாம் அதை நம்பறது இல்லை. நாம் ஆரோக்கியமா இருக்கிறதா நம்பறோம். இல்லை. நான் உங்களை உங்களையே உள்நோக்கிப் பார்த்துக்கொள்ளச் சொல்லிக்கொடுக்கிறேன். அவ்வளவுதான்."

நாங்கள் கை கழுவ எழுந்தோம்.

"சார் இந்த இலைக்கு யாருமே வரலையே. யாரையாவது எதிர்பார்க்கறீங்களா?"

"என் மனைவி அங்கே சாப்பிடறார்."

மாமாவுடைய நூலகத்துக்குள் மூர்த்தி அமர்த்திவைக்கப்பட்டான். நண்பர்களைப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன் என்றார் மாமா. பேஷன்ட்டுகளை அவர் நண்பர்கள் என்றார். ஆங்கிலப் புத்தகங்களால் நூலகம் நிரம்பி வழிந் தது.

ஐரோப்பிய, ஆசிய தத்துவத்தரிசிகள் வரிசையாக அடுக்கிவைக் கப்பட்டு இருந்தார்கள். மேசை மேல் சிலர் கவிழ்த்து வைக்கப்பட்டு இருந்தார்கள். வெளி வாசலை ஒட்டிய திறந்தவெளியில் மிளகாய் காய்ந்துகொண்டு இருந்தது. மூர்த்தி கையில் ஒரு புத்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினான்.

மேலே சுவரில் ஓர் இளம்பெண்ணின் படம் மாட்டப்பட்டு இருந்தது. அதன் கீழே, ஏ.வி.எஸ். மணிமேகலை என்று எழுதப்பட்டு, பிறப்பு, இறப்பு குறிப்பிட்டு இருந்தது. அந்தத் தலைப்பு எழுத்துகள் தொடர்ந்து அவன் நினைவுக்குள் வந்துசேர்ந்தன. அடிக்கடி கேட்ட பெயர் அது.

மாமா வந்து சேர்ந்தார். ”காக்கவைத்தமைக்கு மன்னியுங்கள்” என்றார்.

”இந்தப் படம்”

”என் மனைவி.”

”ஏ.வி.எஸ். என்கிற எழுத்துகளை அடிக்கடி கேட்டதாக இருக்கிறது.”

”பள்ளி, கல்லூரி, மருத்துவமனை அந்தப் பெயரில்தான் இருக்கும். எல்லாம் இலவச அமைப்புகள்.”

மூர்த்திக்கு நினைவுவந்தது. அவன் தங்கை, அந்த மருத்துவமனையில்தான் சேர்க்கப் பட்டாள். சிலவருடங்களுக்குமுன்பு. அதைச் சொன்னான்.

”அப்படியா?” என்ற மாமா, ”என்ன பிரச்னை. இப்போ நன்றாக இருக்கிறாரா?”

”நன்றாகி, மருத்துவமனையை விட்டு வெளியே வந்தாள். ஸ்டவ் வெடித்து ஆஸ்பத்தி ரிக்கு வந்தாள். பூர்ண குணமாகி, ஆட்டோவில் வீடு திரும்பும்போது, லாரி மோதிப் பலியா னாள்.”

”கல்யாணம் ஆனவரா?”

”அதனாலதான் ஸ்டவ் வெடித்தது.”

”ம் கணவன் இரண்டாம் கல்யாணம் செய்துகொண்டு இருப்பானே?”

”அதேதான்!”

”புரிகிறது” என்றார் மாமா.




சற்று அமைதிக்குப் பிறகு, மாமா சொன்னார் ”இந்தியாவில் பெண்கள் பிறப்பதே பாவம்.”



அப்புறம், மாமா சகஜமாகப் பேச ஆரம்பித்துவிட்டார். ”மதியம் ஒரு மணிக்கு, நீங்கள் இங்கு இருந்தால் பார்க்கலாம் சார். இரண்டு பச்சைக் கிளிகள் இங்கே வந்து, இந்தச் சுவரில் உட்காரும். நான் தயாராக கொய்யாப் பழமோ, வாழைப் பழமோ அவற்றுக்கு முன்னால் வைப்பேன். சாப்பிட்டுப் போய்விடும். ஒரு விஷயம்ஞ் முதலில் தனியாகத்தான் ஒரு கிளி வந்துச்சு. அப்புறம் அது துணையைக் கூப்பிட் டுக் கொண்டுவந்தது. இணை பிரியாத கிளிகள். எனக்கு என்ன பிரச்னைன்னா, என்னால் ஊர்ப் பயணம் போக முடிவது இல்லை. அதுகள் வந்து காத்திருந்து ஏமாந்து போயிடுமோனு கவலையா இருக்கு.”


”சமையல் பரிமாறினாங்களே, அந்த அம்மாள்”

”அந்த அம்மாள் எங்களோட ரொம்ப காலமா இருக்கிறவர். என் மனைவி இருக்கும்போதே இங்கே இருந்தவர். அவங்க வெச்சாலும் கிளிகள் சாப்பிடுவது இல்லை.

ஏன் நாமே எல்லோரிடமும் சிநேகம் பண்றமோ? இல்லையே? அந்த உணர்வு பறவைகளுக்கு இருக்க முடியாதாஞ் இருக்கு."

"கல் வெச்சுக் கட்டிய வீடுகளுக்கு முகம் இருக்கு. அது நம்மோடு பேசும்னு ஒரு எழுத் தாளர் எழுதியிருக்கார்."

"தஸ்தயேவ்ஸ்கிதானே?"



"ஆமாம்."

மூர்த்தி புறப்படத் தயார் ஆனான்.

"மத்தியானம் சாப்பிடலாமே, சேர்ந்து."

"இருக்கட்டும் சார். அதிகம் சாப்பிடுட் டேன்."

மாமா சிரித்தார். சொன்னார் "ஒரு வேண்டுகோள்ஞ்"

"சொல்லுங்கள்"

"பேட்டின்னோ, கட்டுரைன்னோ என்னைப் பற்றி எதுவும் எழுத வேணாம். எனக்குக்கூச்சமா இருக்கும். பேசணும்னு தோணியது. பேசினேன். உங்க எடிட்டர் எனக்கு வேண்டியவன். ரொம்ப வருஷத்துச் சினேகன். முகத்துக்கு முன்னால மறுக்க



முடியலை. தயவு செய்து ஒண்ணும் எழுத வேண்டாம். நான் அவன்கிட்ட பேசறேன்."

"எனக்கும் தோணுச்சு சார்ஞ் எழுதலை."

அவர் கைகுலுக்கினார். "கார்ல போகலாமே"

"வேணாம் சார். பல இடங்களுக்குப் போக ணும்"

வெயில் கடுமையாக இருந்தது. வெயில் எப்போதுதான் நடந்து செல்பவர்களுக்கு இனிமையாக இருந்தது? இந்நேரம், கிளிகள் மாமா கொடுத்த பழத்தைச் சாப்பிட்டுக்கொண்டு இருக்கும். அவனுக்குத் திடுமெனச் சந்தோஷமாக இருந்தது. சங்கரபவனில் பார்சல் சாப்பாடு வாங்கிக்கொண்டான். அறைக்குத் திரும்பியவுடன் குளித்தான். மேசை மேல் சாப்பாட்டைப்பிரித்துவைத்தான். இலையை விரித்து சாதம் பரிமாறினான். கூட்டு, பொரியல் பரிமாறினான். சாம்பார் ஊற்றினான்.

வழக்கமாகச் சாப்பிடும் தட்டை எடுத்து தனக்கு முன் வைத்துக்கொண்டான். அதில் சோறு பரிமாறிக்கொண்டு சாப்பிடத் தொடங்கினான்.

சுமதியோட சேர்ந்து சாப்பிட்டு எத்தனைக் காலமாயிற்று?

அவனுக்கு அந்தக் கிளிகள் நினைவுக்கு வந்தன!

கவிதை

# சாதி மறு ! சண்டையொழி !

சதையறுக்கும் பச்சைவாசம்
ஐயோ சாதிதோறும் வீசவீச
தெருவெல்லாம் சிவப்புநாற்றம்
முட்டாள்கள் மேல்கீழாய் பேசப்பேச!

மாக்களூடே சாதி வேறு
மண்ணறுக்கும் சாதி வேறு
மனிதங்கொல்லும் சாதியெனில் — அதைச்
சாக்கடையில் விட்டெறிடா!

பெற்றவயிற்றில் மூண்ட நெருப்பு
வெற்று சாதிக்காய் மூண்டதுவே
பத்துமாதம் சுமந்த நெஞ்சில் — தீண்டாமை
தகதிமிதோம் ஆடுதுவே

ஐயகோ பூமிப் பந்தை
அற்பசாதி அறுத்திடுமோ
ஒட்டைத்தட்டில் வறுமையென்றால்
உயிர்க்கொண்டு அடைத்திடுமோ..?



வீட்டுக்குவீடு சாதிப்பேச்சு
ஊரெல்லாம் ரெண்டாப் போச்சே,
அடேய்; மனிதத்தை விற்காதே, நில்
இனி மிருகங்களே காரி உமிழும்!

மிச்சத்தை மீட்கவேனும்
மனிதர்களாய் ஒன்று கூடு,
அங்கே ஆடையற்று கூட நில்
சாதியோடு நின்று விடாதே;

சாதியை விடு..
சாதி போகட்டும் விடு..
ஓ மனிதர்களே வா'
என் மனிதர்களே வா "நான் சாதியற்றவன்"
சொல் "நான் சாதியற்றவன்"

சாதியற்ற இடத்தில்தான் நாளை
மனிதர்கள் மனிதர்களாகப் பிறக்கக் கூடும்,


மழை நிலா காற்று போல நாமும்
மனிதர்களாக பிறப்போம்;
மனிதர்களாக மட்டுமே மடிவோம்!

வித்யாசாகர்

சென்னை நகரை அழகுபடுத்துகிறோம் என்ற பேரில், சென்னையில் வாழ்ந்த பூர்வகுடிகள் எவ்வாறு வெளியில் துரத்தப்படுகிறார்கள் என்பதை ஆய்வுகளுடன் ‘ஜெயில்’ படத்தின் கதையாக வடிவமைத்திருக்கிறார் வசந்தபாலன். இப்படத்தில் நடித்து வரும் ஜி.வி பிரகாஷ் நடிப்பில் உருவாகி வரும் அடுத்த படமான ‘வாட்ச் மேன்’ படம் பொங்கலுக்கு ரிலீஸ் செய்ய படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர். இதுவரை 5 படங்கள் பொங்கல் ரிலீஸ் என அறிவிக்கப்பட்டுள்ளன.

## ஓய்!.. போட்டி நடக்குது! தூங்கிடாதே!

## வாட்ச் மேன் பராக்!



## உள்ளத்தை மீட்டும் கல்யாணி!



‘விஸ்வாசம்’ படத்தை அடுத்து அஜித் நடிக்கும் படத்தை வினோத் இயக்கவுள்ளார். யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கவுள்ள இந்த படம் ஹிந்தி ‘பிங்க்’ படத்தின் ரீமேக். இப்படத்தில் இயக்குனர் பிரியதர்ஷனின் மகள் கல்யாணி ப்ரியதர்ஷன் நடிக்கிறார். இவரை அஜித்துடன் நடிக்க சிபாரிசு செய்தது அவரது மனைவி ஷாலினிதான். ஏற்கெனவே தெலுங்குப் படவுலகில் அறிமுகமாகி வெற்றிக்கொடி நாட்டியிருக்கும் கல்யாணி, தமிழ் ரசிகர்களின் உள்ளத்தையும் கொள்ளை கொள்ள வருகிறார்.
உள்ளத்தையும் கொள்ளை கொள்ள வருகிறார்.

## கலக்க வரும் கல்யாணி!

## பைலட் படம் ஒன்றில் யாஷிகா!

இருட்டு அறையில் முரட்டு குத்து , துருவங்கள் பதினாறு உள்ளிட்ட படங்களில் நடித்திருக்கும் யாஷிகா, பிக்பாஸ் நிகழ்ச்சியின் மூலம் தமிழ் ரசிகர்களின் கவனத்தைப் பெற்றார். அவர் பிக்பாஸ் வீட்டிலிருந்து வெளியேறிய சமயத்தில் அவர் நடித்திருந்த நோட்டா திரைப்படம் வெளியானது . அதையடுத்து ‘என்னை மாற்றும் காதலே’ படத்தில் யாஷிகா கதாநாயகியாக நடித்துள்ளார். விஜய் தங்கையன் இயக்கத்தில், தீபக் பரமேஷ் கதாநாயகனாக நடிக்கும் இந்தப் படம் முழுநீளத் திரைப்படத்தை விடக் குறைவான கால அளவில் உருவாகியுள்ளது. இப்படி உருவாக்கப்படுவது, ‘பைலட்’ படங்கள் என்று அழைக்கப்படுகின்றன.



## பறக்கட்டும் யாஷிகாவின் கொடி!

## மோதும் பெரிய தலைகள்!

## மோதாமல் இருக்கட்டும் சிறிய தலைகள்!



தீபாவளிக்கே வெளியாக வேண்டிய படம் விஸ்வாசம். படப்பிடிப்புகள் நிறுவடையாததால் பொங்கல் ரிலீஸுக்கு தள்ளி போனது. நிச்சயம் இப்படம் பொங்கலுக்கு வெளியாகி விடும் என படக்குழுவினர் அறிவித்து விட்டனர். சன் பிக்ஸர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பில் கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்துள்ள ‘பேட்ட’ படம் பொங்கலுக்கு வெளியாகும் என அறிவித்திருக்கின்றனர் எனவே இந்தப் பொங்கல், ரஜினி அஜித் போட்டி போடும் பொங்கலாக விருந்து படைக்கவிருக்கிறது.

# மங்காத தமிழென்று

## மகாகவிகள் தோன்றுக !

நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்கு உழைத்தல் இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்று தன் வாழ்க்கைப் பணிகளை மூன்றாய்ப் பகுத்துக் கொண்டு, புதுவை மணக்குள விநாயகரிடத்தில் கவிதை ஒப்பந்தம் போட்டுக் கொண்டவர் பாரதி. அதற்கென, அவர் தேர்ந்துகொண்ட துறை இதழியல்.

அடிமைத்தனத்தை எதிர்த்துப் போராடத் தன் நாட்டவர் முன்வரவில்லையே என்ற ஆதங்கம்தான் பெரிதாக இருந்தது. அதற்காக என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமோ அவை அனைத்தையும் மேற்கொண்டார். எழுதினார்; பேசினார்; பாடினார்; தேச நிர்மாணப் பணிகளுக்காக நிதி திரட்டினார்.




செய்திகள் வெளியிடல், பிற மொழிகளில் இருந்து செய்திகள் திரட்டி மொழிபெயர்த்துத் தருதல், தலையங்கம் எழுதுதல் என்று இடைவிடாத எழுத்துப் பணி அவருடையதாக இருந்தது. ஆனாலும், கவிதைக்கனல் அடிமனத்துள் கனன்று கொண்டிருந்தது.




சிறு வயதிலேயே தாயையும் தந்தையும் இழந்த பாரதிக்கு, அந்த ஏக்கத்தைவிடவும் தாய்நாடு கொண்டிருந்த சிறையிடப்படவோ, நாடுகடத்தப்படவோ வாய்ப்பு வரும் என்று காத்திருந்த வேளையில், நண்பர்களின் வற்புறுத்தலுக்கிணங்கிச் சுயசிறை வைத்துக்கொள்வதுபோல், தன்னை ஊர் கடத்திக்கொண்டு புதுவைக்கு வந்தார். அங்கும் அவர் சும்மா இருக்கவில்லை. தாய் நாட்டுக்காகப் பணிபுரிந்து கொண்டிருந்த அரவிந்தரையும், வ.வே.சு.ஐயர் உள்ளிட்ட சுதேசியப் போராளிகளையும் வருவித்துக் கொண்டார். விடுதலைக்கான வியூகங்கள் அமைத்தார்; ஒற்றர்களின் தொல்லைகளுக்கிடையேயும் பத்திரிகை நடத்தினார்; பிரசங்கம் பண்ணினார்; கடைசியில் சிறையும் புகுந்து மீண்டார்; ஆனால், இறுதி வரையிலும் இந்தியத் தாயின்மீது கொண்ட

# சங்கே முழங்கு!

## கிருங்கை சேதுபதி

பற்றும் பக்தியும் அவரிடம் குன்றவேயில்லை. அவை கனன்று எழுந்து கவிதைகளில் சுடர்விட்டுப் பிரகாசித்தன.

அந்தக் காலத்தில், மன்னர் முன்னின்று கவி பாடிய புலவர்கள் மக்கள் முன்னின்று பாடியிருக்கிறார்களா? ஆனால், மக்கள் அரங்கில் தோன்றி இந்திய விடுதலை உணர்வுக்குக் கனல்மூட்டிக் கவியிசைத்த கம்பீரம் பாரதிக்கு




உண்டு. வரலாற்றுச்சிறப்புமிக்க அந்த அரங்கேற்றம், 1905 செப்டம்பர் மாதம் 14—ஆம் நாள் மாலை சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற பெருங்கூட்டத்தில் நிகழ்ந்தது. மறுநாளே, மிஸ்டர் சி.சுப்பிரமணிய பாரதியார் சொல்லியவை என்ற பெருமையுடன் சுதேசமித்திரன் இதழில் முதன்முதலாக, பாரதி பெயரில் வங்க வாழ்த்துக் கவிதைகள் வெளிவந்தது. தொடர்ந்து, மன்னும் இமயமலை எங்கள் மலையே என்ற கவிதையை எங்கள் நாடு என்று தலைப்பிட்டு அதே இதழில் எழுதினார்.

தன்னளவோடு இந்த முயற்சி நின்றுவிடலாகாது




என்று கருதிய பாரதி, தாய்நாடெங்கும் உள்ள தமிழ்ப்புலவர்களுக்கு அவ்விதழின் வழியே ஒரு விண்ணப்பத்தையும் முன்வைத்தார். அதில், நமது தாய்நாடாகிய பாரதாம்பிகையின் பெருமைகளை வருணித்து ஆங்கிலத்தினும் தமிழினும் பல்வேறு காலத்துப் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள்மணிகளை ஒரு மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதி இருக்கிறேனாதலின், பண்டைத் தமிழ் நூல்களில் பாரதநாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்புவார்களாயின், அவர்மாட்டு மிக்க கடப்பாடுடையேன்; தற்காலத்தே தமிழ்ப்புலமையிற் சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாக தேசபக்திப் பாக்கள் புனைந்தனுப்புவாராயின்

அவையும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும். என்று குறிப்பிட்டார்.

எதிர்பார்த்த வண்ணம் எதுவும் வரவில்லை. ஆனாலும், சோர்ந்துவிடாத பாரதி, தானே முன்னிலும் முனைப்புடன் களம் இறங்கினார்; கவிதைகள் புனைந்தார்; அவ்வப்போது தான் பணிபுரியும் இதழ்களில் வெளியிட்டார். பங்கிம் பின்வராமல் போனதற்கு என்ன காரணமோ? ஆனால், அவருள் தேசியப்பாடல்கள் எழுதும் உத்வேகம் மட்டும் குறையாது ஒளிர்ந்ததால் தொடர்ந்து எழுதி வெளியிட்டார்.

பாரதி முன்வைத்த தேசிய விண்ணப்பத்திற்கு உதவப் புலவர்கள் வரவில்லையாயினும், புரவலராக, கிருஷ்ணசாமி ஐயர் வந்தார்.




சந்திரர் இயற்றிய வந்தே மாதரம் பாடலைத் தமிழாக்கி, சக்கரவர்த்தினி இதழில் (நவம்பர்1905) வெளியிட்ட அவர், தானே சுயமாக, வந்தேமாதரம் என்ற மந்திரச்சொல்லைத் தலைப்பாகக் கொண்டு, தேசியப்பாடலை இயற்றினார். அது, முதலில் சக்கரவர்த்தினி (பிப்ரவரி,1906)யிலும், பின்னர் சுதேசமித்திரனிலும் வெளியாயிற்று. தான் வைத்த விண்ணப்பத்தை ஏற்றுச் செயல்பட விரும்புவோர்க்கு முன்மாதிரியாக, என்னே கொடுமை? என்ற சிறுபாடலையும், சிவாஜி தன் சைநியத்தாருக்குக் கூறியது என்ற நெடும்பாடலையும் எழுதி, முறையே சக்ரவர்த்தினி, இந்தியா இதழ்களில் வெளியிட்டார்.

இன்னும் அந்த விடுதலைக்கனல் தமிழர்கள் இதயங்களில் விழவில்லையே என்ற ஏக்கம் தொனிக்க, எனது தாய்நாட்டின் முன்னாட்பெருமையும் இந்நாட்சிறுமையும் என்ற தலைப்பில் ஒரு தொடர்ச் செய்யுளையும் எழுதத் தொடங்கினார். இன்னும் வரும் என்ற குறிப்புடன், வெளிவந்த இந்தப் பாடலும், சிவாஜி குறித்த பாடலும் அவரது உதவியால், வந்தேமாதரம் என்போம், எந்தையும் தாயும், மன்னும் இமயமலை ஆகிய மூன்று பாடல்களைக் கொண்டு, ஒரு சிறு வெளியீடு வந்தது. ஸ்ரீசுப்பிரமணிய பாரதியால் இயற்றப்பட்டவை என்ற குறிப்போடு வெளிவந்த இந்தத்தொகுப்புதான் பாரதியின் முதல் நூல். இது இலவசமாக வெளிவந்த பெருமைக்கும் உரியது. 1907—இல் வெளிவந்த இத்தொகுப்பிற்குப் பின்னர், ஸ்வதேச கீதங்கள் — முதல் பாகம் வெளிவந்தது. நேஷனல் ஸாங்ஸ் என்ற ஆங்கிலப் பெயரையும் உடன் கொண்டு, 1908 ஜனவரியில் வெளிவந்த இத்தொகுப்பின் விலை, அப்போது அணா 0—2—0.



தேசிய விண்ணப்பம் வெளியிட்டு இரண்டாண்டுகள் கழித்து, பாரதி மேற்கொண்ட முயற்சிக்குத் தமிழ்ப்புலவர்களின் பங்களிப்பு இல்லாது போனாலும், தன்னை அந்த இடத்தில் இருத்தி எழுதிய பாரதியின் தேசியப்பாடல்கள் ஒரு தொகுப்பாக வெளிவரப் பலரும் விரும்பியிருக்கின்றனர். அதற்குத் தேவையான உதவிகளையும் புரிந்திருக்கின்றனர். இந்தப் பாடல்களைப் பிரசுரிக்குமாறு என்னைத் தூண்டி, இவை வெளிப்படுத்துவதில் மிகுந்த ஆர்வம் காட்டி உதவிகளியற்றிய மித்திரர்களிடம் மிக்க நன்றி பாராட்டுகிறேன் என்று அத்தொகுப்பில் குறிப்பிட்டிருக்கிறார் பாரதி. அப்போது அவருக்கு

வயது, இருபத்தைந்து.




தன்னைவிடவும் தமிழகத்துப் புலவர்கள் இன்னும் சிறப்பாகப் பாடல்கள் இயற்றுவார்கள் என்ற நம்பிக்கை அவருக்குள் இருந்தது. அதனால்தான், தேவலோகத்துப் பாரிஜாத மலர்களைச் சூட்டிப் பணியவேண்டிய, பாரததேவியின் திருவடிகளில், மணமற்ற முருக்கம்பூக்களாகத் தனது பாடல்களை அணிவிப்பதாக அவர் தன் முகவுரையில் எழுதினார். ஆனாலும் உள்ளன்புகொண்டு எழுந்த பாடல்கள் அவை என்பதில், அவருக்கு இருவேறு கருத்து இல்லை.

புதுச்சேரிக்குள் வந்து அவர் புகுந்த பிறகு இந்திய விடுதலைக்கு ஏதும் செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார். அப்போதும், அவருள் கனன்ற தேசபக்தி, தெய்வபக்தியாகப் பரிணமித்தாலும், அதன் உள்ளீடு நாட்டுநலம் குறித்ததாகவே இருந்தது

ஸ்ரீசுப்பிரமணிய பாரதியால் இயற்றப்பட்டவை என்ற குறிப்புடன் 1908ல் வெளிவந்த தொகுப்புநூலை, அண்மையில் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

அந்நூலில், பாரதியின் பதினாறு பாடல்களோடு, மதுரை ஸ்ரீ முத்துகுமாரப்பிள்ளை என்பவர் இயற்றிய என் மகன் என்ற பாடலும் இடம்பெற்றுள்ளது. பாரதமாதா சொல்லுதல் என்ற குறிப்புடன், சந்தோஷம்! இன்றேனும் தன்னுரிமை வேண்டினையே வந்தேமா தரந்தனையே வழுத்துவா யென்மகனே என்று தொடங்கி வளரும் நாற்பதுக்கும் மேற்பட்ட கண்ணிகள் கொண்ட இப்பாடலை, அவரது அனுமதியின்பேரில் பிரசுரிக்கப்பட்டது என்ற குறிப்புடன் தந்திருக்கிறார் பாரதி.

இப்படி ஒரு தொகுப்பு வெளிவந்திருப்பது வியப்பளிக்கிறது. சுதேசமித்திரனில் பாரதி முன்வைத்த விண்ணப்பத்தை ஏற்று அப்புலவரால் அனுப்பப்பெற்ற பாடலா? அல்லது பாரதி மதுரைக்குச் சென்று திரும்பிய பொழுதுகளில் அவரைச் சந்தித்துத் தந்த பாடலா? தெரியவில்லை.

தன்னொத்த புலவர்கள் தன் காலத்தில் தலையெடுத்துவிடக்கூடாது என்று பொறாமைக்காய்ச்சல் உடையவர்களாகப் புலவர் உலகம் இருந்ததைப் புறந்தள்ளிவிட்டு, தாய்த்திருநாட்டிற்குத் தன்னிலும் மேலான தமிழ்க்கவிகள் தோன்றிப் புகழ் இசைக்கவேண்டும் என்று கருதிய பேருள்ளம் பாரதியினுடையது அல்லவா?




பாரதி, தமிழ்கூறு நல்லுலகிற்கு அறிமுகப்படுத்திய மதுரை முத்துகுமாரப்பிள்ளை யார்? இத்தொகுப்பிற்குப் பின்னர் அவர் என்ன எழுதினார்? என்றெல்லாம் ஆராயக் களம் விரிக்கும் இத்தொகுப்பு இன்னொரு செய்தியையும் நம்முன் வைக்கிறது. விடுதலைக்குப்பின்னர், பாரதியின் தேசியகீதங்கள் பயனற்றுப்போய்விடும் என்று கூறியவர்களின் கணிப்பைப்பொய்யாக்கியிருக்கிறது காலம். பாரதியின் விடுதலைப்பாக்கள் முன்னிலும் பன்மடங்காய் வீறுகொண்டெழுகின்றன.

தன்னலங்கடந்த தாய்நாட்டுப்பற்றோடு முன்பை விடவும் கவிபாடப் பொதுநலம் கொண்ட புலவர்கள் தேவை. சென்ற நூற்றாண்டில், பாரதியின் விண்ணப்பத்திற்கு ஒரு புலவர் கிடைத்திருக்கிறார்; இன்றும் இனியும் எத்தனையோ புலவர்கள் வந்தாகவேண்டுமே! அதனால்தான், இன்றுபுதிதாய்ப் பிறந்தோம் என்று நம்மையும் உளப்படுத்தி பாரதி, பாடியிருக்கிறாரோ? மகாகவிகள் மீண்டும் மண்ணில் தோன்றுக!

# கூடை

ஏழெட்டு கூடைகளோடு
என் மகன்
மண்ணள்ளி விளையாட
ஒன்று தம்பிக்கென்றான்.

அப்பாவிடம் ஒன்றை கொடுத்து
கவிதை எழுதும்  காகிதத்திற் கென்றான்.

இது பிளாஸ்டிக்பைக்கு பதில்
கடையில் பொருள் வாங்க வென்றான்

ஆத்தா வெற்றிலை பாக்கு வைத்துக்கொள்ள
ஒன்றை ஊருக்கு அனுப்பச் சொன்னான்

குடத்தடி கொடிமல்லி பூப்பறிக்க
இது அக்காவுக் கென்றான்

கூடைகளுக்கெல்லாம் கொண்டாட்டம்
குதித்து குதித்து குப்புற விழுந்து சிரித்தன.

ஊரில் பார்த்த ஓலை குட்டான்
கடவாய் பொட்டி

சாணி அள்ளும் தட்டுக்கூடை

ஈச்சமிளாறில் செய்த
நெல் தூற்றும் கூடை

அவித்த நெல்லை அள்ளும் கூடை

நெல்லரைக்க போய்
தவிடள்ளும் கூடை

பனையோலை கிழித்து
மூங்கில் சீவி
முடைந்த கூடை
ஞாபகம்.

அழகு கூடையொன்றில்
அள்ளி கொடுத்தான்
அம்மாவுக்கு தன்
முத்தங்களை.

வரைய சொன்ன ஆசிரியையிடம்
கூடை ஒன்றை கொடுத்து
அதில் நட்சத்திரங்களை போடச் சொல்லி
நின்றான்

வெறுங் கூடை
நிறைய நிறைய
கனவுகள்.

பட்டுக்கோட்டை தமிழ்மதி

# புத்தக விமர்சனம்

## மறைக்கப்பட்ட பக்கங்கள்
### பால், பாலினம், பாலியல் ஒருங்கிணைவு

**விலை : ரூ. 250**

**நூல் ஆசிரியர்:**

**கோபி ஷங்கர்**




**வெளியீடு:**

**கிழக்கு பதிப்பகம்,**

**சென்னை –14.**

உலக வரைபடத்தில் இந்தியா எங்கு இருக்கிறது என்பதை ஒரு குழந்தை தெரிந்துகொள்வதற்கு முன்பாகத் தன் உடலைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது ‘மறைக்கப்பட்ட பக்கங்கள்’ புத்தகம். காமன்வெல்த் நாடுகளின் விருது பெற்ற கோபி ஷங்கர், அயல் நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் மன்றங்களிலும் பால், பாலினம், பாலியல் ஒருங்கிணைவு குறித்து நிகழ்த்திய சொற்பொழிவுகள், சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரைகள், மாற்றுப் பாலினப் பிரமுகர்கள் பலரின் விரிவான பேட்டிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது இந்தப் புத்தகம்.

ஆணுக்குப் பெண் மீதும் பெண்ணுக்கு ஆண் மீதுமான ஈர்ப்பைத் தவிரப் பல்வேறு விதமான ஈர்ப்புகளைக் குறிக்கும் பாலினங்கள் இருப்பதாக இந்நூலில் குறிப்பிடுகிறார் கோபி ஷங்கர். ஆசிய நாடுகளின் எந்தவொரு கலாச்சாரமோ தத்துவமோ ஒருபால் ஈர்ப்புடையவர்களையோ பால் சிறுபான்மையினரையோ தூக்கில் இட வேண்டும் என்றோ கொல்ல வேண்டும் என்றோ சொல்லவில்லை. மறுபுறம் அவர்களை அங்கீகரித்ததும் இல்லை என்பதை விரிவான ஆய்வின் வழியாக இப்புத்தகம் பதிவுசெய்திருக்கிறது. ‘மறைக்கப்பட்ட பக்கங்க’ளைப் படிப்பதன் மூலம் ‘நம் உடல் நம் உரிமை’ என்னும் கருத்து நிச்சயம் வெளிச்சத்துக்கு வரும்!

# அறிவோம் தமிழர்

### நெல் ஜெயராமன் எனும் அழியாத விதைநெல் !

திருத்துறைப்பூண்டியை அடுத்த கட்டிமேடு கிராமத்தில் சிறு விவசாயி ராமசாமி — முத்துலெட்சுமி தம்பதியின் மூன்றாவது மகனாகப் பிறந்தவர் ஜெயராமன். பத்தாம் வகுப்புத் தேர்வில் ஏற்பட்ட தோல்வி காரணமாக அவரது பார்வை சிந்தனையோடு அணுகும் மனப்பாங்கு இயல்பாகவே ஜெயராமனிடம் இருந்தது.

ராஜீவ் காந்தி கொண்டுவந்த நுகர்வோர் உரிமைச் சட்டம் ஜெயராமன் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை உண்டாக்கியது. பள்ளிக்கல்வியைத் தாண்டியிராத அவர் நுகர்வோர் பிரச்சினைகளுக்காக வாதாடும்




விவசாயத்தின் பக்கம் திருப்பியது. பின்னர் அச்சகத்தில் வேலை பார்த்துக்கொண்டே, தனது தந்தையின் விவசாயப் பணிக்கு உதவியாக இருந்தார். விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் நிறைந்த திருத்துறைப்பூண்டி பகுதியில் எந்த ஒரு விஷயத்தையும் இடதுசாரிச் வழக்கறிஞர் ஆனார். நுகர்வோர் அமைப்பின் நிர்வாகியானவர் அதன் நீட்சியாக விவசாயிகள் பிரச்சினைகளையும் பேசுபவர் ஆனார். விவசாயிகளுக்கான போராட்டங்களுக்குக் குரல் கொடுத்தவர், இன்னொரு பக்கம் விவசாயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுயசீர்திருத்தத்தையும் யோசித்தார். நம்மாழ்வாரை அவர் தேடிச்சென்றது இப்படித்தான்.




### நெல் பாதுகாவலர்

நுகர்வோர் நலனைக் காக்க ஜெயராமன் போராடிக்

# பெருமை

கொண்டிருந்த காலத்தில்தான் நம்மாழ்வாருடன் தொடர்பு ஏற்பட்டது. ரசாயன உரங்களைத் தவிர்த்து, இயற்கை வழி விவசாயத்தை வளர்க்க வேண்டும் என்ற பிரச்சாரத்தை அப்போது பெரிய அளவில் தொடங்கியிருந்தார் நம்மாழ்வார். 2006—ல் கல்லணை முதல் பூம்புகார் வரை நம்மாழ்வார் நடைப்பயணம் மேற்கொண்டபோது அவருடன் ஜெயராமனும் சென்றார். தலைஞாயிறு என்ற ஊரை நடைப்பயணம் அடைந்தபோது அங்கு வயதான விவசாயி வடுகூர் ராமகிருஷ்ணனை நம்மாழ்வாரும் ஜெயராமனும் சந்தித்தனர்.

தன்னிடம் இருந்த காட்டுயானம் என்கின்ற பாரம்பரிய நெல் ரகத்தை நம்மாழ்வாரிடம் கொடுத்தார் ராமகிருஷ்ணன். "இதேபோல பல நெல் ரகங்கள் இப்பகுதியில் விவசாயிகளிடம் உள்ளன. அவற்றைப் பெற்றுக்கொண்டு, உற்பத்தி செய்து, அழிவின் விளிம்பில் உள்ள நெல் ரகங்களைப் பாதுகாக்க வேண்டும்" என்றார். அந்தப் பணியை ஜெயராமனிடம் ஒப்படைத்தார் நம்மாழ்வார். மீதமுள்ள தன் நடைப்பயணத்தில் பாரம்பரிய நெல் ரகங்களையும் சேகரிக்கத் தொடங்கியபோது, அங்கு கிடைத்த பால் குடவாலை, பூங்கார், குடவாலை, காட்டுயானம் உள்ளிட்ட 7 நெல் ரகங்களையும் ஜெயராமனிடம் கொடுத்த நம்மாழ்வார், "இன்னையிலருந்து ஒங்களுக்கு நெல் ஜெயராமன்னு பேரு வைக்கிறேன். நம்முடைய பாரம்பரிய நெல் வகைகளைச் சேகரிங்க" என்றார்.

புதிய ரக நெல் சேகரிப்பு அத்தனை எளிதான காரியமாக இருக்கவில்லை. தமிழ்நாடு முழுக்க இதற்காக நடந்தார் ஜெயராமன். சிலரிடம் ஒரு மரக்கால் நெல்லைப் பெற ஏழெட்டு முறை வரை அவர் அலைந்த கதைகளும் உண்டு.

நம்மாழ்வாரின் வழிகாட்டலில் வளர்க்கப்பட்ட நெல் ரகங்களெல்லாம் அடுத்த ஆண்டு முதல் விவசாயிகளிடம் பரவலாக்கப்பட்டது. இதற்கெனவே நெல் திருவிழாக்களை நடத்தினார் ஜெயராமன்.

## பிற மாநிலங்களுக்கும் முன்னுதாரணர்

ஆரம்பத்தில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதி

**எஸ்.கோபாலகிருஷ்ணன்**

விவசாயிகளும் வரும் நிகழ்வாக இருந்த இது விரைவிலேயே ஆந்திரம், கேரளம், கர்நாடகம் என்று விரிந்து ஒடிஷா, வங்கம், பஞ்சாப், வட கிழக்கு மாநில விவசாயிகள் என்று பரவத் தொடங்கியது. திருவிழாவுக்கு வருபவர்களிடம் பாரம்பரிய ரக விதைநெல்லை இரண்டு கிலோ கொடுத்துவிட்டு, அடுத்த முறை அவர்கள் விளைச்சலிலிருந்து நான்கு கிலோ விதைநெல்லாக வாங்கிக்கொண்டார் ஜெயராமன். இதேபோல புதிய ரக விதைநெல்




கொண்டுவருபவர்களிடமும் இரண்டு கிலோ விதைநெல்லைப் பெற்றுக்கொண்டு, பதிலுக்கு நான்கு கிலோ வழங்கினார். விவசாயிகளை அணுக விவசாயியாக இருந்து சிந்திப்பது எவ்வளவு முக்கியம் என்பதற்கான சான்று இது.

நம்மாழ்வாரின் நட்பைப் பயன்படுத்தி தமிழகம் முழுவதும் உள்ள பாரம்பரிய விவசாயிகளோடு இரண்டறக் கலந்த நெல் ஜெயராமன், திருத்துறைப்பூண்டி பகுதியில் தேசிய அளவிலான நெல் திருவிழாக்களை நடத்தி 41,000 விவசாயிகளுக்கு 174 பாரம்பரிய நெல் ரகங்களை வழங்கியுள்ளார் என்பது மிகப் பெரும் சாதனை. 2017—ல் நடந்த தேசிய நெல் திருவிழா இவற்றின் உச்சமாக இருந்தது. "கேரளம், தெலங்கானா போன்ற மாநிலங்கள் இயற்கை வழி விவசாயத்தை அங்கீகரித்துவிட்ட நிலையில் தமிழகமும் அதை நோக்கிப் பயணித்துக்கொண்டிருப்பதை இந்தப் பெரும் கூட்டம் உணர்த்துகிறது" என்று அப்போது பேசுகையில் குறிப்பிட்டார் ஜெயராமன்.

இவ்வளவு முக்கியமான பணிகளுக்கு இடையே காவிரி நீரின் உரிமைக்காக, விதைகளை மரபணு மாற்றம் செய்வதற்கு எதிராக என்று

பல்வேறு போராட்டங்களிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர் நெல் ஜெயராமன். ஜெயராமன் நடத்திய கருத்தரங்குகளும் அவற்றில் விவசாயிகள் பகிர்ந்துகொண்ட நேரடி அனுபவங்களும் விவசாயத்துக்கு வெளியே தகவல் தொழில்நுட்பத் துறை உள்ளிட்ட துறைகளில் இருந்த ஒரு புதிய கூட்டத்தை விவசாயம் நோக்கி இழுத்து வந்தது.



பாரம்பரிய நெல் ரகங்களுக்கு மருத்துவக் குணம் என்று கூறியவர் ஜெயராமன். புற்று நோயாளிகளுக்கு குள்ளங்கார், நீரிழிவு நோயாளிகளுக்கு கருப்புக்கவுனி, மாப்பிள்ளைச் சம்பா, காட்டுயானம் ஆகிய நெல் ரகங்களை அவர் பரிந்துரைத்தார். உடல்நிலையில் மேம்பாட்டை அவை உருவாக்கியதை அனுபவ அடிப்படையில் பகிர்ந்துகொண்டார். மரபைப் பேசியதாலேயே ஜெயராமனைப் பழமைவாதி என்று கூறிவிட இயலாது.

## நடைமுறைவாதி

“இன்றைக்கு நவீனக் கண்டுபிடிப்பாகப் பார்க்கப் படுவது நாளைக்குப் பழமையாக மாறிவிடலாம். இன்னும் நூறாண்டுகளுக்குப் பின் அது மரபாகப் பார்க்கப்படலாம். நம் முன்னோர்கள் பயன்படுத்திய பாரம்பரிய நெல் ரகங்களுக்கும் இது பொருந்தும். இன்று நாம் அதைப் பாரம்பரிய நெல் ரகம் என்று சொல்கிறோம். ஆனால், நேற்றைய நவீனக் கண்டுபிடுப்புகள்தான் அவை. இந்த மண்ணில் நாம் எதிர்கொண்ட அதே பிரச்சினையை நம் முன்னோர்களும் எதிர்கொண்டிருப்பார்கள் — அதற்கான தீர்வையே கண்டுபிடிப்பாக மாற்றியிருப்பார்கள். சுனாமிக்குப் பின் இங்கே பல பகுதிகளில் கடல் நீர் உள்ளே புகுந்துவிட்டது.



வயல் செத்துவிட்டது; இனி விவசாயமே செய்ய முடியாது என்றிருந்த நிலங்களில் எல்லாம் பாரம்பரிய ரகங்கள் முளைத்தன. பெரும் விளைச்சலைத் தந்தன. நான் பழமையைப் பிடித்துக்கொண்டு தொங்கவில்லை. எது நிலைக்குமோ அது நிலைக்கட்டும், காலத்துக்குப் பொருந்தாதது தொலையட்டும். எனக்கு வியாதி வரும்போது கசாயம் குடிக்கிறேன், அது கேட்காதபோது நவீன மருத்துவத்தையும் நாடுகிறேன். ஆனால், இரண்டுக்குமான தேவைகள், இரண்டுக்குமான எல்லைகள் இருக்கின்றன என்றே நம்புகிறேன்” என்று சொன்னவர் ஜெயராமன்.

ஏழ்மை பலரிடமும் சமூக உணர்வை மழுங்கடித்துவிடும். ஆனால், ஜெயராமன் விதிவிலக்கு. புற்றுநோயோடு போராடிக்கொண்டிருந்த இறுதி நாட்களிலும் “எனக்கு என்னுடைய குடும்பம், தனிப்பட்ட வாழ்க்கையெல்லாம் ஒரு பொருட்டல்ல. மக்களுக்காக ஓடுகிறோம். மக்கள் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால், நிறைய வேலை இருக்கும்போது பாதியைக்கூட முடிக்கவில்லையே என்ற கவலைதான் என்னைக் கடுமையாக வருத்துகிறது!” என்று ‘இந்து தமிழ்’ நாளிதழுக்கு அளித்த கடைசிப் பேட்டியிலும்கூட குறிப்பிட்டிருந்தார். விதைநெல் அவர். இந்தச் சமூகத்தின் விருட்சமாவார்.

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப் பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும் சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!

வியந்து போவீர்கள் !!!




# SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648

# ஏதோ ஓர் மனிதம்

### ஜனனம்

அலறல் சத்தம் கேட்டு
மந்திகை ஆசுப்பத்திரி
ஸ்தம்பித்துப் போனது
தங்கத்துக்கொரு தங்கம்
பிறந்ததென்று
ஊருக்குள் காட்டுத்தீ பரவியது
ஆறு பெட்டைக்கொரு பெடியனெண்டு
அம்மா கர்வமாய்ச் சிரிப்பது
என் காதுகளிலேயே கேட்டது

### ஞானம்

அம்மன் கோயில் பூசாரி
கைபிடித்து அரிசிக்குள்ள
ஆனா எழுதிவச்சு
பக்கத்து வீட்டக்கா மண்டையில குட்டி
ஆவன்னா போட்டுவச்சு
வந்த தமிழும்
கிறுக்கி வச்ச கவிதைகளும்
பாடையில போனாலும் சாகாது

### காதல்

சின்னத்தம்பியற்ற சின்னமகளை
போற இடமெல்லாம் விட்டுக்கலைச்சு
கண்களால் வீசின
காதல்வலைக்குள்ள சிக்கவைச்சு
பத்திரமாய் பிடிக்க நினைக்கயில
பாழாப்போனவள் வலை ஓட்டை ஊடே
ஓடிவிட்டாள்
அவளுக்காய் நூறு கவிதை
அவள் பிரிவுக்காய் நூறு கவிதை
எழுதிக்கட்டி வைச்சு
ஐம்பது வருசமாச்சு
கன்னக்குழியழகி
போட்டுவைச்ச காதல் இன்னும்
சாகலையே

### இனி

அறிவுக்கும் இளமைக்கும்
நரை வந்தாச்சு
முகத்தில் கூட ரேகைக் கோடுகள்
கோலம் போட்டாச்சு
காக்கையிடம் கடன் வாங்கி
உருவான மேனி நிறம் இன்னும்
மாறலையே
அத்துளு வயல்வெளியில்
ஓடி விளையாடிய சிறுவன்
அவன் எழுதிய கவிதைக்குப் பிறந்த
கவிதையொன்றின் மழலை
மொழிகேட்டுக் கண்ணுறங்கும் நேரமிது
மரணத்திற்காய் மட்டுமே
காத்திருக்கும் மனிதமிது

**நிர்வாணி**

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.




*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



## தொடர்புகளுக்கு

***editor@ithamil.com***




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# மாமல்லர் எங்கே? 27

குண்டோ தரனுக்கு எச்சரிக்கை செய்துவிட்டுக் குதிரை மேல் விரைந்து சென்ற மனிதர் யார் என்பதை நேயர்கள் ஊகித்துத் தெரிந்துகொண்டிருப்பார்கள். சிற்பம், சித்திரம், சங்கீதம் முதலான லளித கலைகளில் வல்லவராயிருந்தது போலவே யுத்தத் தந்திரக் கலையிலும் தேர்ச்சி பெற்றவரும், மாறுவேடம் பூணுவதில் நிகரற்ற சாமர்த்தியம் வாய்ந்தவரும், வாதாபியின் சமுத்திரம் போன்ற சைனியத்தை வடபெண்ணைக் கரையில் எட்டு மாதம் நிறுத்தி வைத்தவருமான மகேந்திர பல்லவ சக்கரவர்த்திதான்.




காஞ்சிக் கோட்டையிலிருந்து வடதிசையை நோக்கிக் கிளம்பியது முதல் மகேந்திர பல்லவர் கையாண்ட யுத்த தந்திரங்கள் இதைப் போல் பல சரித்திரங்கள் எழுதுவதற்குப் போதுமானவையாகும். நாகநந்தி என்னும் புத்த பிக்ஷுவின் வேஷம் பூண்டிருந்தவர் புலிகேசியின் அந்தரங்க நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒற்றர் என்று அவர் ஊகித்திருந்தார். அதைப் பரஞ்சோதி கொண்டு போன ஓலையிலிருந்து உறுதிப்படுத்திக் கொண்டார். நாகநந்தியின் கையெழுத்தையும் இலச்சினையையும் மேற்படி ஓலையிலிருந்து தெரிந்து கொண்டது அவருக்குப் பல விதங்களிலும் உபயோகமாக இருந்தது. அந்த உபயோகங்களில் ஒன்றுதான், பல்லவ ராஜ்யத்தின் எல்லைப்புறத்தில் காத்திருந்த கங்கநாட்டுத் துர்விநீதனை அவசரமாகக் காஞ்சி மாநகரை நோக்கி முன்னேறச் செய்தது.




புலிகேசியின் மாபெரும் சைனியத்திற்குப் பின்வாங்கிக் காஞ்சிக் கோட்டைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த மகேந்திர பல்லவர் தாம் கோட்டைக்குள் புகுந்து கொள்வதற்கு முன்னால் ஒரு பெரு வெற்றியடைந்து பல்லவ வீரர்களுக்கும் பல்லவ சாம்ராஜ்யத்துக்கும் மக்களுக்கும் உற்சாகம் ஊட்டவேண்டுமென்று தீர்மானித்தார். போருக்குத் துடிதுடித்துக் கொண்டிருந்த குமார சக்கரவர்த்தியின் ஆத்திரத்துக்கு ஒரு போக்குக காட்டவும் இந்தச் சந்தர்ப்பத்தைச் சக்கரவர்த்தி பயன்படுத்திக்கொள்ள விரும்பினார்.

எனவே, நாகநந்தி எழுதியதுபோல் துர்விநீதனுக்கு உடனே காஞ்சியை நோக்கி முன்னேறும்படி ஓலை எழுதி அனுப்பினார். அதைப் பார்த்துவிட்டே துர்விநீதன் தன் சிறிய சைனியத்துடன் காஞ்சியை நோக்கி விரைந்து வந்தான்.

குண்டோ தரன் கொடுத்த ஓலையைப் படித்ததும் நாகநந்திக்கு ஏற்பட்ட அளவில்லாத வியப்பையும் நேயர்கள் கவனித்திருப்பார்கள். அவருடைய ஓலையின்படி முன்னேறி வருவதாக துர்விநீதன் அதில் எழுதியிருந்தபடியால், தாம் அத்தகைய ஓலை ஒன்றும் அனுப்பவில்லை, இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறதென்று தீர்மானித்துக் கொண்டு நாகநந்தி குண்டோ தரன் கொண்டு வந்த குதிரையில் ஏறிச் சென்று புள்ளலூர்ப் போர்க்களத்தை அடைந்தார். அதற்குள்ளாக, கங்கநாட்டுச் சைனியம் தோல்வி அடைந்து சேனாவீரர்கள் சிதறி ஓட ஆரம்பித்து விட்டார்கள். அந்த நிலைமையில், துர்விநீதனுடைய உயிரைக் காப்பாற்றுவது ஒன்றுதான் தாம் செய்யக்கூடியது என்பதை உணர்ந்த நாகநந்தி, அவனைத் தம்முடன் அழைத்துக்கொண்டு தெற்குத் திசையை நோக்கி விரைந்து ஓடினார்.




இந்தப் புள்ளலூர் யுத்தத்தில் மாமல்லரையும் பரஞ்சோதியையுமே முழுதும் நம்பி மகேந்திர பல்லவர் விட்டுவிடவில்லை. பொறுக்கி எடுத்த ஆயிரம் குதிரை வீரர்களுடன் புள்ளலூர்ப் போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தார். எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத சமயத்தில் வந்து தாக்கியபடியால், கங்கர் படை பீதியடைந்து ஓடலாயிற்று. புதிதாக வந்த குதிரைப்படைத் தலைவன் வஜ்ரபாகுவை மாமல்லர் சந்தித்தபோது, அந்த வீரன்தான் தம் தந்தையென்று அறிந்தார். அதனால் அவருடைய ஆத்திரம் அதிகமாயிற்று. இந்த ஒரு போரிலாவது தம்மை முழுதும் நம்பி விட்டுவிடக் கூடாதா என்று தந்தையிடம் சண்டை பிடித்த பிறகு, சிதறி ஓடும் கங்கர் படையைத் துரத்திச் சென்று நிர்மூலமாக்க அனுமதி கேட்டார். ஒரு நிபந்தனையுடன் சக்கரவர்த்தி அதற்கு அனுமதி கொடுத்தார். அந்த நிபந்தனை என்னவென்றால், 'தென்பெண்ணை நதி வரையில் எதிரிகளைத் துரத்திச் செல்லலாம்; நதியைக் கடந்து அப்பால் போகக் கூடாது' என்பதுதான்.






எதிரிகளைத் துரத்திச் செல்லும்படி மாமல்லரைத் தென் திசைக்கு அனுப்பிவிட்டு மகேந்திரர் திரும்பி போய்விடவில்லையென்பதைச் சென்ற அத்தியாயத்தில் பார்த்தோம். நாகநந்தியின் கொடூரச் சூழ்ச்சிகளை எதிர்ப்பதற்குக் கள்ளங்கபடமற்ற இளம் பிள்ளையான மாமல்லரையே நம்பி விட்டுவிட முடியுமா?

குண்டோதரனுக்கு எச்சரிக்கை செய்துவிட்டுக் கிளம்பிய மகேந்திர பல்லவர், இருட்டையும் புயலையும் பெருமழையையும்பொருட்படுத்தாமல் தென்கிழக்குத் திசையை நோக்கிச் சென்றார். உதயமாவதற்கு ஒரு ஜாமம் இருக்கும் போது, தென்பெண்ணை நதிக் கரையை அடைந்தார். அப்போது மழையின் வேகம் குறைந்து வானத்தில் மேகங்கள் கலைந்து நட்சத்திரங்கள் கூடத் தெரிந்தன. அந்த இலேசான

வெளிச்சத்தில் நதியும் நதிக்கரையும் அப்போது அளித்த காட்சியை வர்ணிப்பது இயலாத காரியம். நதியின் இரு கரையையும் தொட்டுக்கொண்டு ‘ஹோ’ என்ற இரைச்சலுடன் நொங்கும் நுரையுமாகப் பிரவாகம் போய்க் கொண்டிருந்தது. நேற்று அல்லது முந்தைய தினமாயிருந்தால் அத்தகைய பெரும் பிரவாகம் கூடச் சற்றுத் தூரத்திலிருந்த பார்வைக்கு தெரிந்திராது. அடர்ந்த தோப்புகளினால் அது மறைக்கப்பட்டிருக்கும், ஆனால் இப்போது நதிக்கரையில் நெருங்கி வளர்ந்திருந்த அவ்வளவு விருட்சங்களும் முறிந்து விழுந்து கிடந்தன!

மகேந்திரர் நதிக்கரையை நெருங்கியதும், முறிந்து விழுந்து கிடந்த மரங்களுக்கு மத்தியிலிருந்து குதிரை ஒன்று வெளியே வந்தது அதன் மேல் இருந்தவன் சத்ருக்னன்.

“பிரபு! இன்றிரவு நான் பட்ட கவலை என்றைக்கும் பட்டதில்லை. தங்களைத் தனியே அனுப்பிய என்னுடைய அறிவீனத்தை நினைத்து நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். இந்தப் புயலிலும் மழையிலும் தாங்கள் எப்படி வழி கண்டுபிடித்து வந்து சேர்ந்தீர்கள்?” என்றான் சத்ருக்னன்.

“நானும் எத்தனையோ இரவுகளைப் பார்த்திருக்கிறேன், சத்ருக்னா! ஆனால் இன்றைய இரவைப் போன்ற பயங்கரத்தைக் கண்டதில்லை. போகட்டும், நீ இங்கே காத்திருந்ததில் பயன் உண்டா?” என்று மகேந்திர பல்லவர் கேட்டார்.

“ஆம், பிரபு! இங்கேதான் அவர்கள் நதியைக் கடந்து சென்றார்கள்” என்றான் சத்ருக்னன்.

“துர்விநீதன் இருந்தானா? பார்த்தாயா?”

“வெகு சமீபத்தில் நின்று பார்த்தேன். துர்விநீதன் யானை மீதிருந்தான். மற்றவர்கள் ஏழெட்டுப் படகுகளில் சென்றார்கள். அப்போது புயல் ஆரம்பிக்கவில்லை கிட்டத்தட்ட அவர்கள் அக்கரையை அடைந்தபோதுதான் காற்று ஆரம்பித்தது. கரை ஓரம் போய்விட்டபடியால் தட்டுத் தடுமாறிக் கரையேறிவிட்டார்கள். அப்போது நதியில் பிரவாகமும் இவ்வளவு இல்லை.

“நீசொன்ன இடத்துக்குத்தான் அவர்கள் போயிருக்கவேண்டும். பின்னால் படகு ஒன்றும் விட்டு விட்டுப் போகவில்லையா?”



“ஒருபடகைவிட்டுப் போனார்கள் அதை நீங்களும் நானும் எடுத்துக்கொண்டு போய்ப் பிக்ஷுவைத் திண்டாடச் செய்யலாமென்று நினைத்தேன். ஆனால் புயல் நம்மையும் திண்டாட விட்டுப் படகை அடித்துக்கொண்டு போய் விட்டது!”

“நல்லதாய்ப் போயிற்று, சத்ருக்னா! துர்விநீதனைத் தொடர இப்போது அவகாசமில்லை. அதைவிட முக்கியமான வேலை இருக்கிறது. மாமல்லனும் பரஞ்சோதியும் எங்கே இறங்கியிருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டாயல்லவா?”

“இந்த நதிக்கரையில்தான் கிழக்கே அரை காத தூரத்தில் இருக்கிறார்கள். ஆ! இந்தப் பெரும் புயலில் அவர்கள் என்ன பாடுபட்டார்களோ, தெரியவில்லை!”

“உடனே அவர்கள் இருக்குமிடம் போகவேண்டும். பொழுது விடிவதற்குள் அவர்கள் தென் பெண்ணையைக் கடந்து விட வேண்டும். உன் குதிரையின் உடம்பில் சக்தி இன்னும் இருக்கிறதா, சத்ருக்னா? என் குதிரை ரொம்பவும் தளர்ந்து விட்டது.”

“என் குதிரை இன்னும் போகும் பிரபு! இதன்மேல் ஏறிப் போங்கள், நான் இங்கேயே இருக்கிறேன்”

“இல்லை, இரண்டு பேருந்தான் போகவேண்டும்...”

“பிக்ஷு இங்கு வந்தால்...?”

“பிக்ஷு இங்கு வரமாட்டார், சத்ருக்னா! நிச்சயமாக இன்னும் சில நாளைக்கு வரமாட்டார்.”

“ஏன் பிரபு!”

“உன் சீடன் குண்டோதரன் அவரைத் தூக்கித் திருப்பாற்கடல் உடைப்பில் போட்டுவிட்டான்!”

“என்ன? என்ன?”

“அதோ அந்தச் சத்தம் உன் காதில் விழுகிறதா, சத்ருக்னா?”

சத்ருக்னன் உற்றுக் கேட்டுவிட்டு, “ஆம் பிரபு! சமுத்திர கோஷம் மாதிரி இருக்கிறது! மறுபடியும் மழையா?” என்றான்.

“மழைச் சத்தம் அப்படியிராது திருப்பாற்கடல் உடைத்துக் கொண்டு விட்டது. நாளைப் பொழுது போவதற்குள் வராக நதியிலிருந்து தென்பெண்ணை



வரையில் ஒரே பிரளயந்தான்!"

"ஐயையோ? மாமல்லர்...?" என்று அலறினான் சத்ருக்னன்.

"வா! போகலாம்! மாமல்லனையும் பரஞ் சோதியையும் எச்சரித்துக் காப்பாற்றலாம்!" என்றார் மகேந்திரர்.

"சுவாமி, குண்டோ தரன்?"

"குண்டோ தரன் திருப்பாற்கடல் உடைப்பை அடைக்க முயற்சி செய்தான். அது முடியாத காரியம், 'ஓடிப்போய் ஆயனரையும் சிவகாமியையும் காப்பாற்று' என்று எச்சரிக்கை செய்துவிட்டு வந்தேன். என்ன செய்தானோ?"

"ஆஹா! அவர்கள் வேறு அகப்பட்டுக் கொண்டார்களா? இன்றைக்கு உண்மையிலேயே மிகப் பயங்கரமான இரவுதான்!" என்று சத்ருக்னன் கூறி குதிரையைப் போகும்படி முடுக்கினான்.

"இது பயங்கரமான இரவானாலும் ஒரு பயன் கிடைத்தது சத்ருக்னா! புலிகேசியை வெல்வதற்கு இன்னொரு ஆயுதத்தைக் கண்டுபிடித்தேன்!" என்றார் சக்கரவர்த்தி.

"பிரபு தாங்கள் உண்மையிலேயே விசித்திர சித்தர்தான்!" என்று சத்ருக்னன் வியப்புடன் கூறினான்.

இரு குதிரைகளும் நதிக்கரையோரமாகக் கிழக்குத் திசையை நோக்கிச் சென்றன. வழியெல்லாம் முறிந்து கிடந்த மரங்களைத் தாண்டிப் போவதில் அவர்களுக்கு எவ்வளவோ சிரமம் ஏற்பட்டது. எனினும், பொழுது புலரும் சமயத்தில் அவர்கள் பல்லவ சைனியத்தின் பாசறையை வந்தடைந்தார்கள். அல்லோல கல்லோலமாய்க் கிடந்த அந்தப் பாசறையில் நுழைந்ததும், பல்லவ வீரர்களுக்கெல்லாம் வந்திருப்பவர் மகேந்திர சக்கரவர்த்தி என்பது தெரிந்து விடவே, பலமான ஜயகோஷம் எழுந்தது.

மகேந்திரர், தளபதி பரஞ்சோதியைப் பார்த்தவுடனே, அவருக்குப் பேச இடங்கொடாமல், "தளபதி! உடனே புறப்பட வேண்டும். இன்னும் ஒரு நாழிகைக்குள் தென் பெண்ணையைக் கடந்து அக்கரை போகவேண்டும். நீந்தத் தெரிந்தவர்கள் நீந்தட்டும், நீந்தத் தெரியாதவர்கள் மரம் மட்டை எதையாவது பிடித்துக்கொள்ளட்டும்! குதிரைகள், யானைகள் எல்லாவற்றையும் ஆற்றில் அடித்து விடுங்கள் ஆயுதங்கள், சாமக்ரியைகள் எது போனாலும் போகட்டும்; மனிதர்கள் பிழைத்தால் போதும்!" என்றார்.

இந்த விசித்திரமான கட்டளையைக் கேட்டுத் திகைத்து நின்ற பரஞ்சோதியைப் பார்த்து, "ஓஹோ! காரணம் தெரியவேண்டுமா? திருப்பாற்கடல் உடைத்துக்கொண்டு விட்டது! அதோ வினாடிக்கு வினாடி அதிகமாகும் கோஷத்தைக் கேளும். இன்னும் ஒரு ஜாமத்திற்குள்ளே வெள்ளம் இங்கே வந்துவிடும்!" என்றார்.

பரஞ்சோதியின் முகத்தில் அப்போது சொல்ல முடியாத பீதி தோன்றியது. "பிரபு...பிரபு!.." என்று மேலே பேச முடியாமல் அவர் தயங்கி நிற்பதைக் கண்டு, "என்ன விசேஷம், தளபதி! மாமல்லன் எங்கே?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"நேற்று இருட்டிய பிறகு அசோகபுரத்துக்குப் புறப்பட்டுப் போனார் பிரபு! அங்கே...அங்கே..." என்று மேலும் சொல்வதற்குப் பரஞ்சோதி தயங்கினார்.

"தெரிந்துகொண்டேன், தளபதி! அசோகபுரத்திலே ஆயனர் இருக்கிறார். அந்தச் சிற்ப சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்காகக் குமார சக்கரவர்த்தி புறப்பட்டுப் போனார்! நல்லது. மாமல்லனைக் காப்பாற்றும் பொறுப்பு இனி நமக்கு இல்லை. அது ஏகாம்பரநாதனுடைய பொறுப்பு! இங்குள்ள மற்றப் போர் வீரர்களை நாம் காப்பாற்ற முயல்வோம்!" என்றார் மகேந்திரர்.




மாமல்லரைப் பற்றிய அநாவசியமான கவலை நமது வாசகர்களையும் பீடிக்காமலிருக்கும், பொருட்டு அச்சமயம் அவர் எங்கே இருந்தார் என்பதைச் சொல்லிவிட விரும்புகிறோம். கிழக்கு வெளுத்துப் பொழுது புலரத் தொடங்கியிருந்த அந்த நேரத்தில் அசோகபுரத்துப் புத்த விஹாரத்தின் அருகில், மாமல்லர் ஏறியிருந்த குதிரையானது பெருகிவந்த எதிர் வெள்ளத்திலே நீந்தித் திணறிக் கொண்டிருந்தது.

விஹாரத்தின் மேல் தளத்திலே ஆயனரும் சிவகாமியும் சிவகாமியின் அத்தையும் நின்று ஆவலுடனும் கவலையுடனும் அவருடைய வருகையை நோக்கிக் கொண்டிருந்தனர். ரதியும் சுகப் பிரம்ம ரிஷியுங்கூட அங்கே காணப்பட்டனர்.

அதே சமயத்தில் நீர் சூழ்ந்த புத்த விஹாரத்தின் ஓரமாகப் பானைத் தெப்பத்தில் குண்டோ தரன் வந்து கொண்டிருந்தான். வீதியிலும் மற்றும் சுற்றுப்புறமெங்கும் வெள்ளம் சுழித்துக் கொம்மாளமிட்டு அதிவேகமாக ஓடிக்கொண்டிருந்ததுடன் கணத்துக்குக் கணம் பெருகிக் கொண்டுமிருந்தது.

(சபதம் தொடரும்)




## மறைந்திருக்கும் மருந்துகள்

எல்லா உயிரினங்களுமே அறிவு பெற்றிருக்கின்றன. தத்தமக்கு உள்ள புலன்களின் வாயிலாக அவை ஒன்று, இரண்டு என்று ஆறுவகையான அறிவுப் பகுப்பினைப் பெற்றுள்ளன.

உணர்ந்து கொள்ளக் கூடிய உடம்பிலிருந்து தொடங்கி, வாய், மூக்கு, கண், செவி என்னும் உடல் உறுப்புகளைப் பெற்று மனிதன் விலங்கொடு விலங்காகவே தோன்றுகிறான்.

இந்த உடல் விலங்கு நிலைக்கு இணையானது. இயற்கையோடு இயைந்து இயங்கும் தன்மையுடையது. அதனால் சூழல் மாறுபாட்டிற்கேற்ப அவ்வுடல் மூப்பு, பிணி முதலியவற்றை எய்துகிறது. அத்தகைய உடலை அவ்வப்போது பற்றும் பிணிகள் சளி, இருமல், காய்ச்சல், வயிற்றுப் போக்கு முதலியன. இதற்கான மருந்துகள் மனிதர்களின் உணவுப் பொருள்களோடு கலந்த இயற்கை நிவாரணிகளாகவே விளங்கின.

அவற்றுள் தனித்த மருந்துப் பொருள்களும்



### இயற்கை மருத்துவம்

- என்றும் 16 வயது வாழ - நெல்லிக்கனி
- இதயத்தை வலுப்படுத்த - செம்பருத்திப்பூ
- மூட்டு வலியை போக்கும் - முடக்கத்தான் கீரை
- இருமல், மூக்கடைப்பு குணமாக - கற்பூரவல்லி
- வாய்ப்புண் குணமாக- மணத்தக்காளி கீரை
- மாரடைப்பு நீங்க - மாதுளம் பழம்
- இரத்தம் சுத்தமாக- அருகம்புல்
- புற்றுநோய் குணமாக - சீதாப்பழம்
- மூளை வலிமைக்கு ஓர் பப்பாளி பழம்
- நீரிழிவு நோய் குணமாக - முள்ளங்கி.
- இரத்த அழுத்தத்தை குறைக்க - துளசி
- ஞாபக சக்தியை அதிகரிக்க- வல்லாரை கீரை
- இரத்த சோகையை நீக்க- பீட்ரூட்
- ஜீரண சக்தி அதிகப்படுத்த- அன்னாசி பழம்
- மஞ்சள் காமாலை விரட்ட - கீழாநெல்லி
- அஜீரணத்தை போக்க - புதினா
- சிறுநீரக கற்களை தூள்தூளாக - வாழைத்தண்டு

பின்னர் மனம் என்னும் ஆறாவது புலன் வளர வளர அவனுக்குள் உள்ள விலங்கு நிலை மறைந்து நல்லறிவு தோன்றி மனித நிலைக்கு ஆளாகிறான். ஆனபோதும் ஏனைய ஐந்தறிவு உயிர்களைப் போலவே உடலமைப்பினைப் பெற்றிருப்பதால் உண்டு, உறங்கி, இயங்கி உயிர் வாழ்கின்றான்.




உண்டு. பல மருந்துகள் சேர்ந்த கலவை மருந்துகளும் உண்டு. இவை மனித உடலுக்கு நேரக்கூடிய நோய்களிலிருந்து காப்பாற்றி நல்ல குணத்தையும், முழு நலத்தையும் அளிக்க வல்லவை. மனிதன் வளர வளர அவனுடைய உடலைப் போலவே மன உணர்வுகளும் வளரத் தொடங்கின. உடலைப் போலவே மனத்திற்குள்ளும் நோய்கள் புகுவதை மனிதர்கள் கண்டுணர்ந்தார்கள்.

காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம் என்னும் ஐந்து பிணிகளைப் பஞ்சமா பாதகங்கள் என்கின்றன இலக்கியங்கள். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்று அவற்றுள்




# அருணன் கபிலன்

நான்கைச் சுட்டி, இவற்றைத் தவிர்த்ததே அறம் என்கிறது திருவள்ளுவம். உடலை வருத்திய நோய்களைப் போலவே மனத்தை இந்த நோய்கள் அரிக்கத் தொடங்கியபோதுதான் மனித அறிவு அறத்தைத் ஆராயத் தொடங்கிற்று.

இன்பமான வாழ்வின்போது இனிய இயற்கைக் காதல் சூழலை வெளிப்படுத்திய தமிழ் இலக்கியங்கள், மனத்தின்பால் ஏற்பட்ட மாசுகளால் உண்டாகிய நோய்களுக்கு வேண்டிய மருந்தாக அற இலக்கியங்களை இயற்றத் தொடங்கின. உடல் நலனுக்கு உதவுகின்ற மாமருந்துகளைப் போலவே மன நலத்துக்கு உதவும்படி இந்த அற இலக்கியங்கள் இன்றும் நலம் பரப்பி வருகின்றன. ஆனால், நாடி நலம்பெறுவோர்தான் குறைவு.

மனித உடலின் மிக முக்கியமான உறுப்புக் கருவி பற்கள். இவற்றைப் பாதுகாக்க ஆலும் வேலும் துணை செய்யும் என்கின்றன மருத்துவ நூல்கள். அதுபோலவே மனத்தில் தோன்றும் உணர்வுகளை வெளிப்படுத்தும் சொற்களை உறுதியாக்க இரண்டு அடிகளால் அமைந்த திருக்குறளும், நான்கு அடிகளால் அமைந்த நாலடியாரும் பயன்படுகின்றன.

சுக்கு, மிளகு, திப்பிலி என்று மூன்று மருந்துப் பொருள்கள் ஒன்றாகக் கலந்து செய்யப்படும் கலப்பு மருந்து, உடலின் வாத, பித்த, கப நாடிகளைக் கட்டுப்படுத்தி உடல்நலத்தை நல்குகிறது. மூவா மருந்து என்றும் திரிகடுகம் என்றும் பெயர் பெற்ற அம்மருந்துகளைப் போலவே மனத்திற்குத் தேவையான மூன்று அருமையான அறக் கருத்துகளை ஒவ்வொரு பாடலிலும் கொண்டு திரிகடுகம் என்றே ஒரு நூல் அமைந்துள்ளது.

மனித உடலுக்கு இன்னின்னவை இனியவை என்றும் இன்னாதவை என்றும் மருத்துவக் குறிப்புகள் வலியுறுத்துவதைப் போலவே மனத்திற்கு உரிய இனியனவற்றையும் இன்னாதனவற்றையும் பற்றிய நாற்பது நாற்பது பாடல்களைக் கொண்டு இனியவை நாற்பது என்றும் இன்னா நாற்பது என்றும் இரண்டு நூல்கள் அறம் புகட்டுகின்றன.

பல உடற்பிணிகளுக்குப் பழமே மருந்தாவதைப் போல, மனப்பிணிகளை நீக்கத் தகுந்த சான்றுகளைக் காட்டும் பழமொழிகளாலாகிய நானூறு பாடல்களைக் கொண்டுள்ள பழமொழி நானூறு என்னும் நூல் பழுத்த அறம் கற்பிக்கிறது. எல்லா நோய்களுக்கும் பொதுவான மருந்தாகத் திகழ்வது பஞ்சமூலம் என்னும் கலவை மருந்தாகும்.

பஞ்சம் என்றால் ஐந்து, மூலம் என்றால் வேர். கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சில் ஆகிய ஐந்து மூலிகைகளின் வேர்களையும் கலந்து செய்யப்படும் மருந்து உடல் நலத்திற்கு உறுதியாகிறது. அதுபோலவே மனித மனத்திற்குத் தேவையான ஐந்து மூலமான அறக்கருத்துகளை எடுத்துக் கூறும் நூலாக சிறுபஞ்சமூலம் விளங்குகிறது. ஏலத்தை (ஏலக்காய்) முதலாகக் கொண்டு இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஏனைய ஐந்து மருந்துப் பொருள்களும் உடன்சேர்ந்து கலந்து செய்யப்படுவது ஏலாதி என்னும் மருந்து. இந்த ஆறு பொருள்களும் உடலின் இயற்கைத் தன்மையை நிலைக்கச் செய்கின்றன. இதனை அடியொற்றியே அரிய ஆறு அறக்கருத்துகளை ஒவ்வொரு பாடல்களிலும் கொண்டு தோன்றியது ஏலாதி என்னும் அற இலக்கியம்.




இன்றைய காலத்தில் உடலுக்கு ஏற்படுகிற நோய்களுக்கும் சரி, மனத்தில் ஏற்படுகிற நோய்களுக்கும் சரி, மருந்துக் கடையும், மருத்துவமனையும் மருத்துவருமே கதியெனக் கிடக்கிற நிலைக்கு ஆளாகியிருக்கிறோம்.

அருந்தமிழ் நூல்களில் உடலுக்கு மருந்து உணவிலும் உளத்துக்கு மருந்து உணர்விலும் அறமே வடிவாய் ஒளிந்து கிடக்கிறது. யாவும் தமிழ் நூல்களில் மறையாகவே கிடைக்கிறது. தேடிக் கண்டடைந்தால் உடலையும் மனத்தையும் உலகத்தையும் சேர்த்து ஒருசேரப் பேணிக் கொள்ளலாம்.



# காண்டீபன்

எஸ்.கண்ணன்

**கா**ஞ்சிபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு சிறப்பாக ஆண்டுவந்த பல்லவ மன்னன் அபராஜித வர்மன் (கிபி 870—890), ஒரு ரகசிய ஓலையை அந்நாட்டு ஒற்றனும் சிறந்த குதிரை வீரனுமாகிய இருபத்துநான்கு வயது காண்டீபனிடம் கொடுத்து, அதை பூம்புகாரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்டுவரும் சோழ மன்னன் ஆதித்த சோழனிடம் (கிபி 871—907) ரகசியமாக கொடுத்து வரச்சொன்னான்.

ரகசிய ஓலை என்பதால் அதை இரவில் ஒரு கருப்பு குதிரையில் கொண்டு சொல்வது வசதியானது என்று அக்காலத்தில் கருதப்பட்டது.

காண்டீபன் புரவியில் ஆரோகணித்தபோது இரவு மணி பத்து. அப்போது வானம் கரிய மேகங்களின் திரட்சியுடன் இருண்டிருந்தது. கானகத்தினூடே பாதி வழி தாண்டிச் சென்று கொண்டிருந்தபோது மழை வானத்தைப் பிய்த்துக்கொண்டு கொட்டியது. மின்னலும் இடியும் தொடர்ந்து பயமுறுத்தியது.

இந்தக் கொட்டும் மழையில் மேற்கொண்டு தன்னால் புரவியில் தொடர்ந்து செல்ல முடியாது என்பதை உணர்ந்த காண்டீபன், புரவியை தூரத்தில் காணப்பட்ட ஒரு குடிசையை நோக்கி மெதுவாகச் செலுத்தினான்.



அங்கு சென்றதும், புரவியிலிருந்து இறங்கி, குடிசையின் கதவை மெல்லத் தட்டினான். உள்ளிருந்து ஒரு பெண்ணின் மெல்லிய முனகல் ஒலி மட்டும் கேட்டது. காண்டீபன் தயக்கத்துடன் கதவைத் தள்ள அது திறந்து கொண்டது. உள்ளே சென்றான். ஒரு காடா விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதனருகே ஒரு கயிற்றுக்கட்டிலில் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒருத்தி படுத்தபடி முனகிக் கொண்டிருந்தாள்.


காண்டீபன் தன் கையுறைகளைக் கழட்டிவிட்டு, வலது கையினால் அவள் கழுத்தை தொட்டுப் பார்த்தான். உடம்பு கொதித்தது. ஜுரத்தில் உடம்பு அடிக்கடி தூக்கிப் போட்டது.

அவள் கையை நீட்டிக் காண்பித்த திசையில் உற்றுப் பார்த்தபோது அங்கு குமிட்டி அடுப்பு ஒன்று இருந்தது. அடுப்பினருகே தரையில் தூதுவாளைச் செடிபோல் இலைகளுடன் ஏதோ ஒன்று பறித்து வைக்கப் பட்டிருந்தது.

காண்டீபன் புரிந்துகொண்டு அந்த இலைகளில் வெந்நீர் போட்டு அதை அவளுக்கு அருந்தக் கொடுத்தான். அப்போது மழையும் முற்றிலுமாக நின்றுவிட்டது. அதைக் குடித்த பத்து நிமிடங்களில் அவளுக்கு உடல் ஏராளமாக வியர்த்தது. உடனே அவள் ஜுரம் பறந்துவிட்டது.

அடுத்த கணம் அவள் கட்டிலிலிருந்து துள்ளி எழுந்தாள்.

காண்டீபனின் கைகளைப் பற்றி வாஞ்சையுடன், “என் உயிரைக் காப்பாற்றிய நீ யார்? நீ சிறிது தாமதமாக வந்திருந்தாலும் நான் இறந்திருப்பேன். மழையில் நனைந்தால் நான் இறந்து விடுவேன் என்பது எனக்கு இடப்பட்ட சாபம். அது எனக்குத் தெரியும் என்பதால் மழை ஆரம்பித்தவுடன் குடிசைக்கு ஓடோடி



வந்தேன். ஆனால் அதற்குள் முற்றிலுமாக நனைந்து நான் இறப்பதற்கு முன்னோடியாக காய்ச்சலில் வீழ்ந்தேன். நீ வந்து என்னைக் காப்பாற்றி விட்டாய்.”

“என்ன்னது சாபமா?”

“ஆமாம் அது ஒரு பெரிய கதை. அதை பிறகு சொல்கிறேன். நான் இப்போதைக்கு ஒரு சூனியக்காரி. ஆனால் என் சூனியத்தால் நல்லவைகள்தான் நடக்கும்.”

காண்டீபன் முற்றிலுமாக அதிர்ந்தான். திகைத்து நின்றான்.

“என் உயிரைக் காப்பற்றியவன் நீ. உனக்கு என்ன வரம் வேண்டுமென்று கேள். அதை என்னால் நிறைவேற்ற முடியும்.”

“நான் மிகவும் ஏழை. பல்லவ நாட்டின் ஒரு சாதாரண ஒற்றன் நான். என் அப்பா ஒரு போரில் இறந்துவிட்டார். அம்மாவும் மூன்று சகோதரிகளும் என்னுடன் உள்ளனர். எனக்கு சொந்தமாக ஒரு வீடு வேண்டும். பிறகு என் சகோதரிகளுக்கு சிறப்பாக கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும். இவைகள் அனைத்தும் உன்னால் நடந்தால் என் வாழ்நாள் முழுவதும் உனக்கு அடிமையாக நான் சேவை செய்கிறேன்.”

“உன் ஆசைகள் அனைத்தையும் என்னால் அடுத்த மூன்று மாதத்தில் நிறைவேற்றி





வைக்க முடியும். எனக்கு இன்னமும் திருமணம் நடக்கவில்லையே என்கிற ஏக்கம் எனக்குள் அதிகம். உன் ஆசைகள் என்னால் படிப்படியாக முற்றிலும் நிறைவேறியதும், அதற்கு கைமாறாக என்னை நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும். செய்து கொள்வாயா? யோசித்து பதில் சொல்ஞ்.ஆனால் சொன்னசொல் மாறக்கூடாது.”

காண்டீபன் உடனே அவள் கையைப் பற்றிக்கொண்டு “என் ஆசைகள் நிறைவேறினால், உன்னை கண்டிப்பாக திருமணம் செய்து கொள்வேன். இது சத்தியம்” என்றான்.

அவள் கண்டீபனை ஆசையுடன் அணைத்துக்கொண்டு, ”யம்மாடி இம்மாதிரி ஒரு வீரனின் தினவெடுத்த தோள்களில் சாய்ந்து கொள்ள இத்தனைநாள் நான் ஏங்கியது வீணாகவில்லை” என்றாள்.

மறுநாள் சூரியன் உதித்ததும், காண்டீபன் விடைபெற்று புரவியில் கிளம்பிச் சென்றான். காலை வெயிலின் இதத்தில் வெளியே நின்று கொண்டிருந்த அந்த ஆறு அடி உயரக் குதிரையின்மீது காண்டீபன் வெகு அலட்சியமாக துள்ளி ஏறி அமர்ந்த கம்பீரத்தை, கண்களில் காதல் மின்ன அவள் ஆசையுடன் பார்த்தாள்.



பூம்புகாரில் காண்டீபன் தந்த ஓலையைப் படித்த மன்னன் ஆதித்த சோழன், அதில் இருந்த செய்தியினால் சந்தோஷத்தில் துள்ளினான். செய்தி கொண்டுவந்த காண்டீபனுக்கு மரியாதை செய்தான். அந்த மரியாதையின் ஒரு பகுதியாக அவனுக்கு ஒரு பெரிய வீடு பரிசளித்தான். காண்டீபன், சூனியக்காரி தன் வேலையை ஆரம்பித்து விட்டாள் என்று நினைத்துக் கொண்டான்.



சந்தோஷத்துடன் காஞ்சீபுரம் திரும்பினான். திரும்பும் வழியல் சூனியக்காரியை மறக்காமல் சென்று பார்த்தான். அப்போது பாண்டிய மன்னன் மூலமாக அவனுக்கு மிகப்பெரிய அதிர்ஷ்டம் காத்திருப்பதாக அவள் சொன்னாள்

அடுத்த வாரம், மதுரையிலிருந்த பாண்டிய மன்னன் பராந்தகப் பாண்டியன் (கிபி 880—900) தன் மனைவியும், நாட்டின் அரசியுமான வானவன் மாதேவிக்கு* அவள் மனதில் என்னவென்று புரியாத ஏதோ ஒரு பெரிய குறை இருப்பதாகவும் அந்தக் குறையை கண்டுபிடித்து சொல்பவருக்கு தன்னால் மிகப் பெரிய மரியாதை செய்யப்படும் எனவும் தண்டோரா போட்டு அறிவித்தான்.

தண்டோராவைப் பற்றிக் கேள்விப்பட்ட காண்டீபன் உடனடியாக மதுரை சென்று பராந்தகப் பாண்டிய மன்னனைப் பார்த்து, “தன்னால் கண்டிப்பாக மஹாராணி வானவன் மாதேவியின் குறையைப் போக்க முடியும்” என்று உறுதியளித்தான்.

தண்டோரா போட்ட பிறகு, மஹாராணியை சந்திக்கும் அறுபதாவது நபர் காண்டீபன். இருப்பினும் ஒரு நம்பிக்கையுடன், அவன் உடனடியாக மஹாராணியை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

மஹாராணி காண்டீபனை கனிவுடன் பார்த்து, “தனக்கு அனைத்து மரியாதைகளும், செல்வங்களும் இருந்தாலும், ஏதோவொன்று தன் மனதை அரித்துக் கொண்டிருப்பதாகவும்ஞ். ஆனால் அது எதனால் என்று தெரியவில்லை என்றும்” புலம்பினாள்.

காண்டீபன் மரியாதையுடன், “ஆம் மஹாராணி, அரசர் தங்களிடம் அபரிதமான பாசத்துடன்

இருந்தாலும் மிகப் பெரும்பாலான சமயங்களில் தங்கள் விருப்பம் எது என்று அறிந்துகொள்ள முயற்சிக்காமல், தங்களின் புரிதலை எதிர்பார்க்காது தானே முடிவெடுத்து தன் இஷ்டப்படி செயல்படுகிறார், அது நாட்டின் கல்விக் கொள்கையானாலும் சரி அல்லது தங்களுடன் கலவிக்கு தயாரானாலும் சரி. இதுதான் உங்கள் மனதை வாட்டுகிறதுஞ். நான் சொன்னது சரியா ?” என்றான்.

மஹாராணி குரலில் மகிழ்ச்சி பொங்க, “அசுவமேத வீரனே, மிகச் சரியாக சொன்னீர்கள்ஞ். மஹாபிரபு, உடனே சற்று வாருங்கள்” என்று கணவரை உற்சாகத்துடன் அழைத்தாள். மன்னர்



பராந்தகப் பாண்டியர் உடனே விரைந்து வந்தார்.

மஹாராணி வானவ மாதேவியின் மேலான ஒப்புதலோடு, அடுத்த வாரமே பராந்தகப் பாண்டியரின் ஆஸ்தான ஆலோசகராக காண்டீபன் பதவி ஏற்றுக் கொண்டான். அந்த நிகழ்ச்சிக்கு பல்லவ மன்னன் அபராஜித வர்மனும் நேரில் வந்து சிறப்பித்தான். ஆனால் காண்டீபன் சூனியக்காரிக்கு தான் செய்து கொடுத்த சத்தியத்தை மறக்கவில்லை.

பராந்தகப் பாண்டியர் அனைத்தையும் காண்டீபனின் ஆலோசனைப்படிதான் செய்தார். காண்டீபன் புகழின் உச்சிக்கு சென்றான். பராந்தகப் பாண்டியரின் அரசவை மந்திரிகளில் மூவர் காண்டீபனின் மூன்று சகோதரிகளையும் அடுத்தடுத்து திருமணம் செய்து கொண்டனர்.

அன்று இரவு எட்டு மணி. கிருஷ்ணபட்சத்து நிலவு பாலென பொழிந்து கொண்டிருந்தது. காண்டீபன் தன்னுடைய வெள்ளைப் புரவியில் ஏறி ஒருவருக்கும் தெரியாமல் சூனியக்காரியை பார்க்கச் சென்றான்.

அவள் உற்சாகத்துடன், “வருக வருக என் பிராணநாதா, அனைத்தையும் நான் அறிவேன்ஞ். தங்கள் புகழ் இனி திக்கெட்டும் பரவும்.” என்றாள்.

“நான் செய்து கொடுத்த சத்தியத்தை காப்பாற்றவே இங்கு வந்துள்ளேன்.

நாம்





எப்போது திருமணம் செய்து கொள்ளலாம் ?”

“நம் திருமணத்திற்கு முன் நான் என்னைப்பற்றிய அனைத்து உண்மைகளையும் சொல்லிவிடுகிறேன். என்னுடைய உண்மையான வயது இருபது. இரண்டு வருடங்களுக்கு முன், ஒரு முனிவர் என்னை அவருடைய ஆசைக்கு இணங்கத் தூண்டினார். நான் மறுத்ததால் என் தோற்றத்தை வயதானவளாக மாற்றிவிட்டு, என்னை ஒரு தேர்ந்த சூனியக்காரியாக செயல்பட வைத்தார். மழையில் நான் நனைந்தால் மழைக் காய்ச்சலில் இறந்து விடுவேன் என்கிற சாபமும் கொடுத்தார். அதுதவிர, என்று என் அல்குல் மீது ஒரு ஆண்மகனின் சுக்கிலம் பட்டு ஈரமாகிறதோ அன்றே நான் பழையபடி நிரந்தரமாக குமரியாக மாற வாய்ப்புண்டு என்கிற சாபவிமோசனமும் கொடுத்தார். உடனே நான் பயந்து அவரிடமே அதை யாசித்து விமோசனம் பெறுவேன் என்று எதிர்பார்த்தார் போலும்.”

“——————.?”

ஆனால் அந்த ஆண்மகன் என்னை மணந்து கொள்பவனாகத்தான் இருக்கவேண்டும் என்பது என் உறுதியான முடிவு. கண்டிப்பாக நம் திருமணம் இனிதே நடக்கும். ஆனால் அதில் ஒரு சின்ன சிக்கல் உள்ளது.



என்னால் தற்போதைக்கு என் சூனிய சக்தியால் மிகச் சில மணிநேரங்கள் மட்டும் குமரியாக மாற முடியும். ஒருவேளை நம் திருமணத்திற்கு பின்பும் முனிவரின் சாபவிமோசனம் பலிக்காவிட்டால், பகலில் நான் உன்னுடன் வெளியே வரும்போது இப்போது உள்ளதுபோல் வயதானவளாக காணப்படுவேன். எனில் இரவில் உன்னுடன் சல்லாபிக்கும்போது அழகிய குமரியாக இருப்பேன். அல்லது நீ விருப்பப் பட்டால் பகலில் அழகிய குமரியாகவும் இரவில் உன்னுடன் படுக்கும்போது வயதானவளாகவும் இருப்பேன். இவற்றில் உனக்கு எது வேண்டும்? இப்போதே சொல்."



"எனக்கு எதுவும் சரிதான். இதில் உங்களுடைய விருப்பம்தான் என்னுடைய விருப்பமும்."

அவள் உற்சாகம் கொப்புளிக்க, "நாதா தாங்கள் உண்மையிலேயே பெண்களின் மென்மையான உணர்வுகளுக்கு மரியாதை கொடுத்து அவர்களின் மனம் கோணாமல் பாசத்துடன் நடந்து கொள்ளும் உத்தம புருஷர்தான்ஞ். உங்களின் இந்த நல்ல குணத்திற்காகவே நம் கலவிக்கு பிறகு எனக்கு நிரந்தர விமோசனம் கிடைக்கும். நம் திருமணத்தின்போது என் சூனிய சக்தியால் நான் குமரியாக காணப்படுவேன், கவலைப்படாதீர்கள்" என்றாள்.

காண்டீபனின் வெள்ளைப் புரவி, அந்த நடுநிசியில் அவர்கள் இருவரையும் சுமந்துகொண்டு மதுரைக்கு விரைந்தது.

அடுத்த வாரம் ஒரு நல்ல முகூர்த்தநாளில் மஹாராணி வனவமாதேவி தாலிக்கொடி எடுத்து கொடுக்க காண்டீபன் திருமணம் சிறப்பாக நடந்தது. மன்னர்கள் அபராஜிதவர்மன், பராந்தகப் பாண்டியன், ஆதித்த சோழன் ஆகியோர் நேரில் வந்து மணமக்களை வாழ்த்தினர்.

ஆனால் திகைக்க வைக்கும் இப்பேர்ப்பட்ட பேரழகியை காண்டீபன் எங்கிருந்து கவர்ந்து வந்தான் என்று அனைவரும் வியந்தனர்.

அன்று முதலிரவு.

முதலிரவின் கிளர்ச்சியில் அவள் அல்குல் புடைத்து பெருத்து அதன்மீது குதிரைவீரன் காண்டீபனின் சுக்கிலம் தெறித்தவுடன், அவள் பிரமிக்கத்தக்க அழகில் நிரந்தர குமரியானாள். சூனிய சக்தியும் அவளிடமிருந்து மறைந்து இயல்பான வாழ்க்கையை சந்தோஷத்துடன் தொடங்கினாள். .


*** சேரமன்னன் ஒருவனின் மகளான வானவன் மாதேவியின் பெயரால் உருவான ஊர்தான் சேரன்மாதேவி. இன்றளவும் அந்த ஊர் திருநெல்வேலிக்கு அருகில் பிரசித்தியுடன் விளங்குகிறது.


பொங்கல் நல்வாழ்த்துக்கள்
தமிழினம் ஒன்றுபட
பொங்குக பொங்கல்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

# அறிவின் முதிர்ச்சி

## முதியோர் எனும் சொத்து

அன்புதான் மனிதனை வாழ்வதற்குத் தூண்டுகிறது. அன்புதான் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகிறது. உறவு என்பது சமூக கட்டமைப்பின் அடித்தளமாக இருந்து சமூக வாழ்வை உயர்த்துகிறது. மனிதன் சமூக விலங்காக கருதப்பட்ட காலம் முதல் உறவுப் பிணைப்பு அவனை வாழ்வதற்கும் மேம்பட்ட வாழ்க்கைச்சூழலை உருவாக்கிக் கொள்வதற்கும் உந்து சக்தியாக இருந்து வழிநடத்துகிறது.




இத்தகைய அன்பும், உறவும் காலப்போக்கில் எத்தகைய பரிமாணங்களை அடைந்துள்ளன? வியாபாரமயமாகி விட்ட இந்த நூற்றாண்டில் உறவின் நிலை என்ன?



காலந்தோறும் கூடி வாழ்ந்த குடும்பம் என்ற அமைப்பு மனிதனை உயர்த்தி இருக்கிறது. ஒருங்கிணைந்த உழைப்பால் பெரும் பலன் தந்திருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்களாய் வாழ்ந்த காலத்தில் கூடிவாழ்ந்த குடும்பத்தில் அனைவரும் ஒட்டுமொத்தமாகத் தங்கள் உழைப்பை நிலத்தில் சிந்தி வேளாண்மை பெருகி, சீரும்சிறப்புமாய் வாழ்ந்ததை வரலாறு சொல்கிறது. இப்படி வாழ்ந்த சமூகத்தில் பெரியோர் மதிக்கப்பட்டனர். அவர்களின் அனுபவமும் அறிவும் இளையோருக்கு வழிகாட்டக் கிடைத்த பெரும் வரமாக கருதப்பட்டது.

உழைப்பைத் தந்த குடும்பத்தில் முதியவர்கள் உடல் தளர்ந்து, தங்களால் உழைப்பை நிலத்தில் செலுத்த இயலாத காலத்தில் குடும்பத்திற்குப் பாதுகாவலாக இருந்து குழந்தைகள் பராமரிப்பு மற்றும் அவர்களை நல்வழிப்படுத்தும் ஒழுங்காற்றுப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். இதனால் அடுத்த தலைமுறையும் சீரிய ஒழுக்கத்தோடும் நெறிமுறைகளோடும் வாழத் தலைப்பட்டது. ஆனால், தற்போது அறிவியல் வளர்ந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் நிலை என்னவாக இருக்கிறது?

நமக்கு அன்றாடம் ராமாயணத்தையும் பாரதத்தையும் கதையாகச் சொல்லி நம்முடைய பண்பாட்டு விழுமியங்களை இயல்பாக

## வாழ்வின்

# புதையல்

கோதை ஜோதிலட்சுமி

நமக்குள் பதிவுசெய்தவர்களாக நம்முடைய முன்னோர்கள் இருந்தார்கள். அவர்கள் சொல்லித் தந்த கதைகள் வெறும் பொழுது போக்கு அம்சங்களாக இருக்கவில்லை. பின்னாளில் வாழ்வை எதிர்கொள்வதற்கான மனஉறுதியைக் கொண்டிருந்தன. இத்தகைய தாத்தா—பாட்டிகளை நாம் தொலைத்துவிட்டு மன அழுத்தத்திற்கு மனநல மருத்துவர்களை நாடிச் செல்வதும்,




ஆலோசகர்களை அணுகி ஆலோசனை கேட்பதும் பேதைமை நிறைந்தது.

நம் முன்னோர்கள் விவசாயம் அறிந்திருந்தார்கள். பருவநிலையைப் புரிந்திருந்தார்கள். மனித மனங்களைப் பற்றிய தெளிவு அவர்களுக்கு இருந்தது. வாழ்வின் தேவை என்ன? நிம்மதியாய் வாழ்வதற்கானவழிவகை என்ன என்பதையும்அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

இவற்றையெல்லாம் நமக்குத் தேவையான பொழுது கற்றுத் தருவதற்கும் காத்திருந்தார்கள். இன்றைக்கு அந்தத் தாத்தாக்கள் தொலைந்து போனார்கள்.




ஒவ்வொரு முதியவரும், தமக்குள் கொண்டிருக்கும் ஆற்றல், அனுபவம், அன்பு இவற்றின் தொகுப்பாக விளங்குகிறார்கள். இந்த மதிப்புமிக்க பெரியோர்கள் நம் தேசத்தின் சொத்து. இதனை உதாசீனப்படுத்துவதும், ஒதுக்கி வைப்பதும் நம்முடைய வளர்ச்சியை பாதிக்கும் செயல். இதனை நாம் உணரத் தலைப்படும்பொழுது இன்னும் மிகுந்த வளர்ச்சியோடு வேகத்தோடு நவீன யுகத்தில் நாம் ஆரோக்கியமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும்.

இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டியது, முதியோர்களின் அறிவாற்றலும் திறமையும் உழைப்பும் கொண்டுதான் நாம் வாழும் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையே.




சளைக்காமல் புதிது புதிதாக எழுதிக் கொண்டே இருக்கும் எழுத்தாளர் கி. ராஜநாராயணன்— இப்படி எத்தனை எத்தனையோ சாதனைப் பெரியவர்கள் நம் தேசத்தில் உண்டு.

முதியவர்கள் நமக்கு வழிகாட்டிகள் எனும் எண்ணம் உருவாக வேண்டிய கட்டாயம் தற்போது ஏற்பட்டிருக்கிறது. இன்றைய உளவியல் சிக்கல்கள் அனைத்திற்கும் தீர்வாக முதியவர்கள் இருக்க முடியும். உடல் ஆரோக்கியம் காப்பதற்கு நம் பாட்டிமார்களை நாம் மீட்டெடுத்துத் தீர வேண்டும். எத்தகைய இக்கட்டான நிலையிலும் இவர்கள் நம்முடைய நலனைப் பேணுபவர்களாக இருந்தார்கள். நமக்குப் பொருள் ஈட்டித் தந்திருக்கிறார்கள். அவர்கள் ஈட்டித் தந்த பொருளை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அவர்கள் சம்பாதித்த அனுபவங்களை ஏற்க மறுப்பது, நம் மூதாதையரின் சொத்துகளை நாம் வேண்டாம் என்று மறுப்பதற்கு ஒப்பானது.

இன்று நாம் அனுபவிப்பவை அனைத்தும் நேற்றைய தலைமுறையினரின் உழைப்பின் பலன்தான். நம்மைக் காட்டிலும் முதியவர்கள் எவ்விதத்திலும் தாழ்ந்தவர்கள் அல்லர். சொல்லப் போனால், வாய்ப்புகள் இத்தனை உலகளாவிய அளவில் வாய்க்கப் பெறாத காலத்திலும் அவர்கள் சமூகத்தை மேம்பட்ட நிலையில் வைத்திருந்தார்கள்.


கலை இலக்கியம் அறிவியல் என்று எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், அந்தத் துறையில் முதியவர்கள் நமது முன்னோடிகள். அப்துல் கலாம் போன்ற அறிவியல் அறிஞர்கள், நம்மாழ்வார் போன்ற வேளாண் வல்லுநர்கள், ஐராவதம் மகாதேவன் போன்ற ஆய்வாளர்கள், 96 வயதிலும் யோகக் கலையில் சிறந்து விளங்கும் நானம்மாள் பாட்டி, அதே வயதில் கல்வி கற்கும் ஆர்வத்தோடு படித்துத் தேர்வுகளில் முன் நிற்கும் கார்த்தியாயினி அம்மாள், 82 வயதில் சற்றும் சளைக்காமல் வெறும் கால்களுடன் ஓடி ஆசிய போட்டிகளில் நான்கு தங்கப்பதக்கங்களை வென்று இன்னமும் முனைப்போடு சர்வதேச போட்டிகளுக்கு தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கும் ராஜேந்திரன், 96 வயதிலும் இன்னமும் புதினங்களை



ஒவ்வொரு குடும்பத்திலும் தத்தமது பெற்றோர்களைஅல்லது தாத்தா பாட்டிகளை பாதுகாக்க வேண்டிய அடிப்படை பொறுப்பு உள்ளவர்கள் இளைஞர்கள். இளம் சமூகம் தன் துடிப்போடும் வேகத்தோடும் முதியோரின் அனுபவத்தையும் ஏற்றுக்கொண்டு செயல்படும்பொழுது அனுபவம்—ஆற்றல் இந்தக் கூட்டுச் சேர்க்கை வெற்றி பெறுவதற்கு வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

அடுத்த தலைமுறைக்காக உழைத்து நம்மை வாழவைத்த முதியவர்கள் தங்கள் முதுமையின் காரணமாக சற்றே தளர்ந்து போகும்பொழுது அவர்களுக்குக் கைகொடுக்க வேண்டியது தம்முடைய கடமை என்பதை இன்றைய தலைமுறை மறந்து கொண்டிருக்கிறது. அவர்களை கவனித்துக் கொள்ள வேண்டியதும் நமது பொறுப்பே. உடல்நல தடைகள் காரணமாக இவர்கள் தவிப்புக்கு ஆளாகிறார்கள். இதனைப் புரிந்து கொண்டு அவர்களுக்குத் தேவையான ஆரோக்கியமான நல்ல சூழலை உருவாக்கித் தர வேண்டிய கடமை இன்றைய இளம் தலைமுறைக்கு உண்டு.

முதுமையில் உடல் தளர்வு காரணமாக தன்னைச் சுற்றி உள்ளவர்களை சார்ந்து வாழும் நிலை தோன்றும் பொழுது நாம் அதனை சுமையாகக் கருதும் மனப்பான்மையை தற்போது பெற்றிருக்கிறோம். இந்த மனப்பான்மை முதியோர்களுக்கு மட்டும் பிரச்னை அல்ல,




வளரும் தலைமுறைக்கும் நஷ்டமேயாகும்.

அரசு இவர்களின் தேவைகளை, பிரச்னைகளை உணர்ந்து சட்டங்களை இயற்றி இருக்கிறது. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலன் மற்றும் பராமரிப்புச் சட்டம் 2007—ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த சட்டத்தின் வாயிலாக கைவிடப்பட்ட, உறவினர்களால் ஒதுக்கப்பட்ட முதியோருக்கு அவர்களது சொத்துகளை மீண்டும் அவர்களிடமே ஒப்படைத்தல், கைவிடப்பட்ட முதியோருக்கு சட்டப்படியானபாதுகாப்பினை வழங்குதல், மூத்த குடிமக்களுக்கான பராமரிப்பு இல்லங்கள் அமைத்தல் என்று பல சட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளன.

உதவித்தொகை வழங்குவதில் அரசு பல சட்டங்களை இயற்றி இருக்கிறது. பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியோர், ஆதரவற்ற முதியோர், கைம்பெண்களுக்கான உதவித்தொகை, திருமணம் செய்து கொள்ளாது தனித்து வாழும் பெண்களுக்கான உதவித் தொகை என்று பல விதங்களில் அரசு இவர்களை கவனத்தில் கொண்டு இருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் முதல் தேதியை உலக முதியோர் தினமாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனஅறிவித்தது. வயது முதிர்ந்தோர் எதிர்கொள்ளக் கூடிய சவால்கள் மற்றும் பிரச்னைகளை கருத்தில் கொண்டு 2002— ஆம்ஆண்டிலிருந்து முதியோருக்கான செயல்பாட்டுத் திட்டங்களையும் அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

ரயில்வே முன்பதிவு தொடங்கி, வருமான வரிச்சலுகைவரை, முதியவர்களுக்கு என்று பல சலுகைகளும் மதிப்பும் அரசால் வழங்கப்படுகிறது. முதியோருக்கான சுதந்திரம், உலகில், அவர்களுடைய பங்களிப்பு, வயதானவர்களை மதித்தல் இவற்றை உறுதிப்படுத்தும் வகையில் உலக முதியோர் தினம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது. ஏனெனில் அவர்களும் இந்த உலகின் பங்குதாரர்களே.




இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது என்பது சமூகம் ஆரோக்கியமின்மை நோக்கி நகர்வதற்கான அறிகுறி. சமூக மாற்றத்திற்கு, இயந்திரத்தனமான வாழ்க்கை, மேலை நாட்டுக் கலாசாரத்தை பின்பற்றுதல், ஒருவருக்காக மற்றவர் நேரம் செலவிட முடியாமல் ஓடுவது என்று பல காரணங்கள் சொல்லப்படுகின்றன.

தேசத்தின் புராண வரலாறு, கலாசாரப் பெருமை இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது, இத்தகைய மாறுதல் எவ்வகையிலும் ஏற்புடையதல்ல.

குடும்பம்—உறவு எனும் இரு பெரும் கோட்பாடுகளை உலகிற்கு வழங்கிய தேசத்தில், முதியோர் உரிய மரியாதையோடு நடத்தப்பட வேண்டும். இளையோர் அதனை உறுதி செய்ய வேண்டும்.

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு


# 2018 CALENDAR

2018


JANUARY




FEBRUARY



MARCH



APRIL



MAY




JUNE




JULY



AUGUST



SEPTEMBER



OCTOBER



NOVEMBER



DECEMBER



# தமிழ்


நற்றமிழரின் நாடித்துடிப்பு






2018

ஜனவரி




# பிப்ரவரி


அய் தமிழ் இந்த இதழோடு தன் ஆறாவது அகவையை நிறைவு செய்கிறது!



2018

# மார்ச்






# ஏப்ரல்

# 2018 மே




# ஜூன்





2018
July 2018
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
ஜுலை

# ஆகஸ்ட்



# 2018 செப்டம்பர்



# அக்டோபர்




2018
நவம்பர்
November 2018
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
மலர்

# டிசம்பர்



# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## January




## February

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | | |

## March

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

## April

| S | M | T | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## May

| S | M | T | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## June

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

## July

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## August

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## September

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## October

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## November

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## December

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
HAPPY
NEW
YEAR !
2019

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100%
Pure
Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा